2

[illegible]

[illegible]

22-4-19[illegible]

[illegible]

[illegible] MAR 19[illegible]

உ

கணபதி துணை.

# ஆறுமுக நாவலர் சரித்திரம்.

யாழ்ப்பாணத்து நல்லூர்

த. கைலாசபிள்ளையால்

எழுதப்பட்டது.

சென்னபட்டணம்

வித்தியாநுபாலனயந்திரசாலை

காலயுக்தி௵ தைமீ

71546

ஆறுமுக நாவலர்

# முகவுரை.

ஆறுமுகநாவலரவர்களுடைய சரித்திரம் முன் வே. கனகரத்தினப்பிள்ளை என்பவராலும் சி. செல்லையாபிள்ளை என்பவராலும் எழுதப்பட்டிருக்கின்றது. கனகரத்தினப்பிள்ளை எழுதியது கொஞ்சம் சுருக்கமானதுமாத்திரமன்றிச் சில கதை மாறுபாடுகளையும் உடையது; செல்லையாபிள்ளை எழுதியது மிகச் சுருக்கமானது.

இச்சரித்திரத்தை விரிவாக எழுதல் வேண்டுமென்று ஸ்ரீ. தி. த. கனகசுந்தரம்பிள்ளை பி. ஏ. முதலானவர்கள் சிலர் என்னைக் கேட்டார்கள். நான் நாவலரவர்களுடைய தமையனார் ஒருவருடைய மகன்; அவர்களுடைய எழுத்து வேலைகளைச் சில வருஷகாலஞ் செய்தவன்; அவர்களுடைய சரித்திரம் அதிகம் அறிந்தவன். ஆதலால் ஷைபிள்ளை முதலானவர் என்னைக் கேட்டது நீதியேயாம்.

சரித்திரம் எழுதுவோர் தமது பாட்டுடைத்தலைவருடைய குணங்களையுங் குற்றங்களையும் பக்ஷபாதமின்றி ஒப்பக்காட்டுதல்வேண்டும். நாவலரவர்களுடைய நடையிலோ குற்றமானது ஒன்றையும் நான் காணாமையால், குற்றஞ்சொல்ல எனக்கில்லை; குணங்களே சொல்லவேண்டும். குணங்களைமாத்திரஞ் சொன்னால் சிலர் நம்பமாட்டார்கள். ஆதலால் அச்சரித்திரத்தை நான் எழுதுதல் தகுதியன்று என்று மறுத்தேன்.

அதற்கு அவர்கள், மிகப் பெரிய மனுஷர்களாகிய இலங்கைச் சட்ட நிரூபணசபைப் பிரதிநிதி சேர். முத்துக்குமார சுவாமியவர்கள், சென்னை ஹைகோர்ட் ஜட்ஜி ம-ா-ா-ஸ்ரீ தி. சதாசிவஐயர் அவர்கள், திருவாவடுதுறையாதீனத்து மகா வித்துவான் ஸ்ரீ. மீனாக்ஷிசுந்தரம்பிள்ளை அவர்கள், புதுக்கோட்டை ஜட்ஜி சி. வை. தாமோதரம்பிள்ளை அவர்கள், நாவல

ரவர்களிடத்தே குற்றமொன்றுங்காணாது குணங்களே கண்டு துதித்திருக்க, [இந்தப் பெருமக்கள் சொல்லியவைகளை அநுபந்தத்திற் காட்டியுளேன்.] நீயும் நாங்களுமா. காணப்போகிறோம்; எழுதலாம். எழுது" என்று பின்னரும் வற்புறுத்தினார்கள்.

'என்னைக் கேட்டவர்களுடைய சொல்லை மீளவும் தட்டாமல்,' என்னுடைய தகப்பனார் பெரியதகப்பனார் முதலானவர்கள் பல முறைசொல்ல நான் கேட்டவைகளையும், நாவலரவர்கள் தாமே சொல்ல நான் கேட்டவைகளையும், நான் நேரேகண்டவைகளையும் ஒரு கோவைப்படுத்தி இச்சரித்திரத்தை எடுத்திருக்கிறேன். ஆதலால் இச்சரித்திரத்தில் ஸ்துதியாயுள்ளவை இல்லையென்பதே என் துணிவு.

யாழ்ப்பாணம்
சாலி: கஅ௲ருகூ, ஊளவூப
மார்கழிமீ.

த. கைலாசபிள்ளை.

கணபதி துணை.

# ஆறுமுகநாவலர் சரித்திரம்.

## முதலாம் அதிகாரம்.

### முன்னோர்.

திருக்கேதீச்சரம் திரிகோணமலை என்னும் சிவஸ்தலங்களையும் கதிர்காமம் என்னும் சுப்பிரமணிய ஸ்தலத்தையும் தன்னிடத்தேயுடைய இலங்கையின் வடபாகமாகிய யாழ்ப்பாணம், ஒருகாலத்தில் சைவசமயிகளுக்கும், சைவாலயங்களுக்கும், அரசகேசரி முதலிய தமிழ் வித்துவான்களுக்கும், தமிழ் நூல்களுக்கும் உறைவிடமாயிருந்தது. இது போர்த்துக்கேச அரசர் கையில் அகப்பட்டிருந்த காலத்தில், அவர்கள், தாம் கத்தோலிக்க கிறிஸ்து மதத்தர்களாயிருந்தமையால், இங்குள்ள சைவாலயங்களையெல்லாம் இடித்தும், சனங்கள் பலரை வலாற்காரமாகக் கிறிஸ்தவராக்கியும், சைவராயுள்ளவர்களைத் தங்கள் சமயாசாரங்கள் அனுட்டியாதபடி தடுத்தும், தமது ஆசாரங்களை நாட்டியும் வந்தார்கள். அவர்கள் காலத்திலே சைவர்கள் ஒளித்தும் மறைத்துந் தமது அனுட்டானங்களையும், ஆசாரங்களையும் பேணிவந்தனர். வாழை யிலையிற் சாப்பிடுவதுதானும் சில காலத்தில் விலக்கப்பட்டதென்பர். அவர்களுக்குப் பின் வந்த ஒல்லாந்த அரசினரும் தாங்கள் புரோடெஷ்டாண்டுக் கிறிஸ்தவராயிருந்தமையால், தமது சமயத்தையே பரப்பிவந்தார்கள். இந்த இரண்டரசினர் காலத்திலும், யாழ்ப்பாண

றானது, சமணர் ஆளுக்கர் காலத்திலே இந்தியா இருந்த நிலையி னும் பார்க்க மிக்க இழிந்த நிலையிலிருந்தது. இந்தக் காலங்க ளிலே இங்கே நமது சமயம் தப்பியிருந்தது தெய்வச் செயலா லன்றி வேறொன்றாலுமன்று.

இவ்வியாழ்ப்பாணம் பின் சகாப்தம் கஎசகூ அளவில் இங் கிலிசு அரசினருடைய கையில் அகப்பட்டும் நமது சமயத்தைப் பழைய நிலைக்குக் கொண்டுவருபவர் மிக அரியராயினர். வித்து வான்களாயுள்ளவர்கள் கடினமான பாட்டுப் பாடுவதிலே தங்கள் காலத்தைக் கழித்தார்கள். சமயாபிமானம் அவர்களிடத்தில் மிகக் குறைவாக இருந்தது. கிறிஸ்தவகுருமார் இதுவே சமய மென்று நினைந்து அநேகரைக் கிறிஸ்தவராக்கத் தொடங்கினர் கள். பள்ளிக்கூடங்களை வைத்துப் பிழைப்புக்கேற்ற இங்கிலி சுப் பாஷையை உத்தியோகம் வாங்கித் தருவோம் என்று சொல்லிப் படிப்பித்துப் பலரைக் கிறிஸ்தவராக்கினர்கள்; சில ரைச் சோறு சீலை கொடுத்துக் கிறிஸ்தவராக்கினர்கள்; சில ரைக் கலியாணச்செலவு கொடுத்துக் கிறிஸ்தவராக்கினர்கள்; கீழ்ச்சாதியா யுள்ளவர்கள் சிலரை மேற்சாதியாரோடு சமமாயி ருக்கச் செய்வோமென்று சொல்லிக் கிறிஸ்தவராக்கினர்கள். சைவசமயத்தை மிக இகழ்ந்து பிரசங்கங்களுஞ் செய்தார்கள்; பத்திரிகைகளும் எழுதிப் பரப்பினர்கள்; யாழ்ப்பாணத்தை முழுதும் பிடித்துவிட்டோமென்று ஊதுதற்கு வெற்றிச் சங் கைக் கையில் எடுத்தார்கள்.

யாழ்ப்பாணத்துத் திருநெல்வேலியிலே திருவவதாரஞ் செய்த ஞானப்பிரகாசசுவாமிகள் * போர்த்துக்கேசர் காலத்தி

* ஞானப்பிரகாச சுவாமிகள் என்பவர் யாழ்ப்பாணத்து நல் லூரைச் சார்ந்த திருநெல்வேலியிற் போர்த்துக்கேச அரசினர் கால த்தில் இருந்தவர். அவ்வரசினர் காலத்தில் யாழ்ப்பாணத்திலிருந்த தலைவனுக்கு ஒவ்வொரு வீட்டாரும் ஒவ்வொருநாளைக்கு ஒவ்வொரு பசு உணவின்பொருட்டுக் கொடுக்கவேண்டுமென்று ஒருவிதியிருந் தது. இவர் தம்முடைய முறை நாளுக்கு முதனாள் இரவு, அக்கொ

லேயே இவ்வூரை விட்டுப் போய்விட்டார். நமது சமயத்தைத் தாபிக்கவல்ல ஒரு பிள்ளை வேண்டுமென்று தவஞ் செய்கிறவர்களுமில்லை.

நமது சமயம் தப்பியிருந்தது போல, தமிழ்ப் பாஷையுந் தப்பியிருந்தது. இங்கிலிசு அரசு வந்த பின்னரும் அனேக தமிழ்ப்பண்டிதர்கள் இங்கே இருந்திருக்கிறார்கள். அவர்கள், நச்சினார்க்கினியர், பரிமேலழகர், சிவஞானமுனிவர் முதலியோர் போன்ற திறமையுடையவரல்லராயினும், தமிழ்ப் பாஷையிலே மிகவும் பாண்டித்தியம் படைத்தவர்கள். ஆயினும் இவருட் சிலர், தாங் கற்றதைத் தம் பிள்ளைகளுக்குத் தானுஞ் சொல்லிக் கொடுக்கமாட்டார்கள்; சிலர், பிறரிடத்தே ஏடுகளை வாங்கித் தாம் பிரதிசெய்துகொண்டு பாட ஏட்டை இயன்றளவு பிழைபடுத்திவிட்டுக் கொடுப்பார்கள். ஒரு வித்துவான் தாம் கற்குங் காலத்தில் எழுதிய சில நூற்குறிப்புக்களை மரணிக்குங் காலத்தில் தமக்கு முன்னே கொண்டுவந்து சுட்டுப்போடுதல் வேண்டுமென்று சொல்லிச் சுடுவித்து, அதன்பின்னரே தம் உயிர்போகப் பெற்றார். இப்படிப்பட்ட காலமே ஆறுமுக நாவலர் பிறந்த காலம்.

இந்த யாழ்ப்பாணத்திலே நல்லூரிலே கார்காத்த வேளாள வருணத்திலே பாண்டிமழவர் குடியிலே ஞானப்பிரகாசசுவா

---

முந் தொழிலைத் தாம் செய்வதினும் பரதேசம் போய்விடுவது நல்லதென்றெண்ணித் தம்முடைய ஊரைவிட்டுப் புறப்பட்டுச் சிதம்பரத்தை யடைந்த பின் கௌடதேசம்போய், அங்கே சம்ஸ்கிருதங் கற்றுப் பின் திரும்பிவந்து திருவண்ணாமலை ஆதீனத்திற் காஷாயம் பெற்றிருந்தனர். இவர் சம்ஸ்கிருதத்தில் சிவஞானபோத விருத்தி, பௌஷ்கர விருத்தி, சித்தாந்த சிகாமணி, பிரமாணதீபிகை, பிராசாததீபிகை, அஞ்ஞானவிவேசனம், சிவயோகசாரம், சிவயோகரத்னம், சிவாகமாதிமாகான்மியசங்கிரகம் என்னும் நூல்களும் தமிழிற் சிவஞானசித்தியாருக்கு ஓர் உரையுஞ் செய்தனர். சிதம்பரத்திலுள்ள ஞானப்பிரகாசமென்னுங் குளம் வெட்டுவித்தவரும் இவரே.

மிகள் மரபு நெடுங்காலமாகத் தலங்கி வந்தது. இம்மரபில் இலங்கைகாவலமுதலியார் * என்பவர் ஒருவர் இருந்தார். அவருடைய புதல்வர் பரமானந்தர் என்பவர். அவருடைய பிள்ளைகள் கந்தர் இலங்கையர் என்பவர்கள். இவர்களுள் இலங்கையரொழிந்த மூவரும் ஒல்லாந்தர் காலந்தொட்டு இராச உத்தியோகம் படைத்தவர்கள். இலங்கைகாவல முதலியாரும், பரமானந்தரும் இராச வைத்தியர்களாயிருந்து கொழும்பிலிருந்த ஒல்லாந்த அரசனுக்குற்ற தீராத நோயை மாற்றிப் பரிசுகளும் பட்டயங்களும் பெற்றவர்கள். அன்றியும் இவரெல்லாரும் பரம்பரையான தமிழ்ப்புலமையும் வாய்ந்தவர்கள். கந்தர் என்பவர் அனேக நாடகங்கள் தமிழில் இயற்றியிருக்கின்றார்; ஒல்லாந்த அரசர் காலத்தில் உத்தியோகத்தராயுமிருந்தவர்; வைத்தியத்தில் அதிக சாமர்த்தியமுடையவர்; பல வைத்திய நூல்கள் வசனநடையிற் செய்திருக்கின்றார். உத்தியோகமும் வைத்தியமுஞ் செய்யுங் காலங்களொழிந்த மற்றைக் காலங்களையெல்லாம் பூமரங்கள் வைத்து உண்டாக்குவதிற் கழிப்பவர். இவருக்குச் சிவகாமி என்னும் மனைவியாரிடம் ஐந்து ஆண் மக்களும் மூன்று பெண் மக்களும் பிறந்தார்கள். சிறுவயசிலே இறந்த பிள்ளைகளும் உண்டு. தம்முன்னோரைப்போல இவ்வாண்மக்களுள் இறுதியிலுள்ளவரொழிந்த மற்றை நால்வரும் இங்கிலிசு அரசினர் காலத்தில் இராச உத்தியோகங்களில் இருந்தவர்கள். இவர்களுள் ஒருவராகிய பரமானந்தர் என்பவர், செய்யுள் இயற்றுவதிலே தீரராகிப் புலவரென்னும் பட்டம் பெற்றிருந்தனர். இறுதியிற் பிறந்த பிள்ளை ஆறுமுகநாவலர் என்பவர்.

தமிழ்நாட்டிலுள்ளவர்கள் சைவசமயமே மெய்ச்சமயமெனத் தெளிந்து உய்யும்பொருட்டு வந்த இவர், கலியப்தம் சகூஉச-க்குஞ் சாலிவாகன சகாப்தம் கஎசஙு-க்குஞ் சமமாகிய

* முதலியார் என்பது இலங்கை அரசினராற் கொடுக்கப்படும் ஒரு பட்டம்.

| | | | |
|---|---|---|---|
| | சனி | வி | |
| சந் | உதய லக்கினக் கிரகநிலை. | | கே |
| ரா | | | ல |
| செ-சு ஆ-பு | | | |

சித்திரபானுஸு மார்கழிமீ ௫வ புதன்கிழமை இரவு அவிட்ட நக்ஷத்திரமும் பூர்வபக்க பஞ்சமி திதியும் வச்சிர யோகமும் பாலவ கரணமும் கூடிய நேரத்திலே சிங்க லக்கினத்திலே நல்லூரிலே தமது தந்தையார் வீட்டிற் பிறந்தனர்.

---

## இரண்டாம் அதிகாரம்.

### படித்தகாலம்.

இப்பிள்ளையை அந்தக் காலத்தில் நல்லூரில் ஒருசிறிய தமிழ்ப்பள்ளிக்கூடம் வைத்துப் படிப்பித்துவந்த சுப்பிரமணிய பிள்ளை என்பவரிடத்திற் கல்வி கற்குமாறு அனுப்பினார்கள். அந்தக்காலத்து வழக்கப்படி அவரிடத்தில் இவர் மூதுரை முதலிய நீதிநூல்களும் நிகண்டு முதலிய கருவிநூல்களும் கற்றுவந்தார். எட்டு ஒன்பது வயசுவரையும் இவருடைய சிறந்த கல்வித்திறமை ஒருவருக்குந் தெரியாது. இவருடைய சரீரம், தலை மிகப் பெருத்தும் மற்றை உறுப்புக்கள் சூம்பியும் இருந்ததினாலே வீட்டாரும் அயலாரும் இவரை "பாணாத்" தலையரென்றும், வாற்பேத்தையரென்றுஞ் சொல்வார்கள். இவருக்கு ஒன்பதாம்வயசாகும்போது, ஆனித்திருமஞ்சன உற்சவ காலத்தில் இவருடைய தந்தையார், ஒரு நாடகம் பாடிக்கொண்டிருந்த சமயத்தில், கையில் எழுத்தாணியும் சட்டமும் பிடித்தபடியே சடிதியிற் சிவபதமடைந்துவிட்டார். அந்த நாடகத்தின் குறையைய அப்போதே இவர் பாடிமுடித்தார். அது தமையன்மாரனைவருக்கும் மிக்க பிரீதியையுண்டாக்கினபடியால், அவர்கள் இவரைச் சரவணமுத்துப் புலவர் சேனாதிராயமுதலியார் முதலான வித்துவான்களிடத்திலே தமிழ்க்கல்வி கற்குமாறு அனுப்பினார்கள்.

கல்வி கற்குங் காலத்திற் காலையில் ஐந்து நாழிகைக்கு முன் எழுந்து, ஸ்நானம் அனுட்டானம் என்னும் இவைகளை முடித்த பின்னர் ஏட்டை எடுத்துக்கொண்டு படிக்கப் போவார்; மத்தியானம் திரும்பி வருவார்; அப்போது போசனம் ஆயத்தமாயிருத்தல் வேண்டும். தாமசப்பட்டால் உடனே திரும்பிப் போய் விடுவார்; திரும்ப இரவு பத்து மணிக்கு வருவார். அப்போது தான் ஆறியிருந்து போசனஞ் செய்வார். உபாத்தியாயருக்கு வசதியில்லாத நேரங்களினெல்லாம் குடியில்லா வீடு முதலிய தனியிடங்களிலே போயிருந்து தாமாகவே படிப்பார். ஒருபடி அரிசி அன்னம் புசிக்கத்தக்க பசியுடையானொருவனுக்கு ஒரு பிடி அரிசி அன்னம் எப்படிப் பசியை நீக்காதோ அதுபோல, உபாத்தியாயர்கள் சொல்லும் ஒரு காரிகைப் பாட்டும் ஒரு நன்னூற் சூத்திரமும், தீவிரதர புத்தியையுடைய இவருக்குத் திருப்தியை உண்டாக்கவில்லை. எந்தப் பெரிய பாட்டுக்களை ஒருவர் படித்தாலும், படித்து முடிந்தவுடன், அவற்றிலுள்ள பஞ்சலக்கணப் பிழைகளையும் முறையே சொல்லுவார். இவருடைய கல்வித்திறமையைக் கண்ட உபாத்தியாயர்கள் இவரிடத்தே மிக்க பிரீதியுடையவர்களாயிருந்தார்கள். முன்னே நாம் சொன்னபடி அக்காலத்தில் அச்சுப்புத்தகங்கள் இல்லாமையினாலே ஒருவரிடத்தே ஓர் ஏட்டை இரவலாக வாங்குவதும் மிகப் பிரயாசம். வாங்கினாலும் அதனை எழுதிக்கொள்ள எவ்வளவு காலஞ் செல்லும்! உபாத்தியாயர்களும் பூரணமாகச் சொல்லிக் கொடுக்க மனம் பொருந்தார்கள். இப்படியெல்லாமிருந்தும், இவர் தாம் உபாத்தியாயர்களிடத்தே கற்க வேண்டிய இலக்கண இலக்கிய நூல்களை ஒருவாறு கற்றுக்கொண்டார். தமிழ்க் கல்விக்கு இன்றியமையாத சம்ஸ்கிருதநூலுணர்ச்சி அக்காலத்திலிருந்த தமிழ்வித்துவான்களுக்கு இல்லாமையினாலே, அவர்கள் இவருக்குக் கற்பித்த கல்வி நிரம்பினதன்று. ஆயினும், பழைய காலத்தில் யாழ்ப்பாணத்திலிருந்த தமிழ் வித்துவான்களுடைய சரித்திரங்களையும் அவர்கள் ஒவ்வொரு சமயத்திற்

பாடிய பாட்டுக்களையும் நன்றாகப் போதித்திருந்தார்கள். இதுவே இவர் உபாத்தியாயர்களிடத்திற் கற்ற வரலாறு.

இவருடைய மைத்துனராகிய விசுவநாத முதலியார் மயில்வாகனர் என்பவர் தாம் ஒரு நியாயதுரந்தரராயிருந்தபடியினாலும் செல்வாக்குடையவராயிருந்தபடியினாலும், இவரை, கந்தபுராணம், திருவிளையாடற் புராணம், திருவாதவூரர் புராணம் முதலிய புராணங்கள் படிக்கப்படுங் கோயில்கள் முதலிய இடங்களுக்கு அழைத்துச் செல்வார். அங்கே இலக்கணப்பிழையாக அர்த்தஞ் சொல்பவர்களோடும், தவறான அர்த்தஞ் சொல்பவர்களோடும் இவர் ஆக்ஷேபங் தொடுத்துத் தர்க்கம் பண்ணுவார். தமிழில் இவருடைய திறமையைக் கண்ட தமையன்மார், இவரை "பீற்றர் பார்சிவல்" என்னும் பாதிரியாருடைய இங்கிலிஷ் பள்ளிக்கூடத்திற்கு இங்கிலிஷ் கற்குமாறு அனுப்பினார்கள். இங்கிலிஷ் கல்வியிலும் இவர் வெகு சீக்கிரத்திலே திறமை பெற்றார். இங்கிலிஷ் பள்ளிக்கூடத்திலே மேல்வகுப்புக்கு வந்தவுடன் பார்சிவல் இவருடைய இருபாஷைத் திறமையையுங் கண்டு கீழ்வகுப்புக்கு இங்கிலிசு படிப்பிக்கவும் மேல்வகுப்புக்களுக்குத் தமிழ் படிப்பிக்கவும் வைத்தார். பாதிரியாருடைய வேண்டுகோளுக்கிசைந்து வேதனம் பெறாது சிலவருஷம் படிப்பித்துவந்தார். இனி மற்றை உயர்ந்த இலக்கண இலக்கியங்களை எங்கே யாரிடத்திற் கற்றார் என்பது சொல்லத்தெரியாது.

அக்காலத்திலே அப்பள்ளிக்கூடத்திலே கற்ற மாணாக்கருள் இவரே இங்கிலிஷ் தமிழ் என்னும் இரு பாஷைகளையும் நன்கு கற்றவர் என்னும் பெயரும், இங்கிலிசைத் தமிழ்ப்படுத்துவதிலும், தமிழை இங்கிலிசுப்படுத்துவதிலும், சுத்தச் செந்தமிழ் பேசுவதிலும், எழுதுவதிலும் இவருக்குச் சமமாக ஒருவருமில்லை என்னும் பெயரும் யாழ்ப்பாணம் முழுதும் பரம்பின. இதனைக் கண்டுங் கேட்டும் அறிந்தவராகிய பார்சிவல்

பைபிலைத் திருத்துவதற்குத் தமக்குத் தமிழ்ப்பண்டிதராக இவரை நியோகித்தார்.

தமிழ்ப்பண்டிதராக இருந்து பைபிலைத் திருத்திக்கொண்டு வருங் காலத்திலே, பரமதமாகிய கிறிஸ்துமதம் பரம்பச் சுவமதமாகிய சைவங் குன்றுதலைக் கண்டார். கண்ட மாத்திரத்தே சைவசாத்திரம் படித்தலிலே முன்னையினும் அதிக கவனத்தைச் செலுத்திவந்தார். சைவசித்தாந்த சாத்திரங்களாகிய சிவஞானபோதம், சிவஞானசித்தியார், திருக்களிற்றுப்படியார், திருவருட்பயன், நெஞ்சுவிடுதூது, கொடிக்கவி, சிவப்பிரகாசம் முதலிய நூல்களைச் சந்தேகவிபரீதமறத் தாமே கற்றுணர்ந்தார். இம்மாத்திரத்தினில்லாது, ஆன்மாக்கள்பொருட்டுச் சிவபெருமான் அருளிச்செய்த முதனூல்கள் வேதசிவாகமங்கள் என்றும், அவைகளுள் வேதம் பொதுநூலென்றும், ஆகமம் சிறப்புநூலென்றும் அறிந்தார். அறியவே, சிறப்பு நூலாகிய சிவாகமத்தைக் கற்றற்குச் சம்ஸ்கிருதம் அவசியம் வேண்டியிருந்ததனால் அதனைப் படிக்க முயன்று, சிறிது நாட்களுக்குள் சம்ஸ்கிருத நூல்களை வாசிக்கவும், அவற்றின் பொருளை ஐயந்திரிபற விளங்கவுந் தாமே கற்றுக்கொண்டார். இவ்வளவினில்லாது, வேதசிவாகமாதி சமஸ்த சாத்திரங்களின் உண்மைப் பொருளைத் தம்முள் அடக்கிய தமிழ்நூல்கள் தேவார திருவாசகங்களே என்றுணர்ந்து அவற்றையும் கற்றுணர்ந்தார். ஆகவே, சம்ஸ்கிருதம், தமிழ், இங்கிலிஷ் என்னும் முப்பாஷைகளுந் தெரிந்தவர் எனவும், சைவசித்தாந்த சாத்திரங்களில் மிக்க பாண்டித்தியமுடையவர் எனவும் உலகத்திலே விளங்கினர். விளங்கவே, எல்லாரும் இவரை நன்கு மதித்து மரியாதை செய்யவும், தங்களுக்குத் தெரியாத கல்விவிஷயம் சமயவிஷயங்களை இவரிடத்திற் கேட்டறியவுந் தலைப்பட்டார்கள். தம்மிடத்து வரும்போதெல்லாம், அவர்களுக்கு, கடவுளுண்டு, ஆன்மாவுண்டு, புண்ணியபாவமுண்டு, சுவர்க்கநரக

முண்டு, மறுபிறப்புண்டு என்னும் உண்மைகளை எடுத்துக்கூறி இவைகளைப்பற்றி விசேஷமாகப் பேசும் நூல்கள் காமிகம் முதல் வாதுளம் இறுதியாகிய மூலாகமம் இருபத்தெட்டும், அவைகளின் வழிநூல்களாகிய நாரசிங்கம் முதல் விசுவான் மகம் இறுதியாகிய உபாகமங்கள் இருநூற்றேழும், சீர்புநூல் களாகிய தத்துவப்பிரகாசிகை முதல் இரத்தினத்திரயம் இறு தியாகிய அட்டப்பிரகரணமும், சிவாகமத்தின் ஞானகாண்டப் பொருளைச் சுருக்கி இனிது விளக்கும் தமிழ்ச் சைவசித்தாந்த சாத்திரங்களுமே என்றுஞ் சொல்லுவார். சொல்லவே, சனங் கள், தாங்கள் முன்னொரு காலத்துங் கேட்டறியாத நூல்களைப் பற்றி இவர் சொல்லுகின்றார்; இந்நூல்களை எங்கே கற்றார்? எவரிடத்திற் கற்றார்? எப்போது கற்றார்? என்று ஆச்சரியங் கொண்டு, இப்படிப்பட்ட கல்வியறிவொழுக்கமுடைய இவரி டத்தன்றோ நாமெல்லாம் அன்பு வைத்தல் வேண்டுமென்று கருதி அன்பு வைத்தார்கள். உத்தராயணம் முதலிய விசேஷ காலங்களிலே, பெரியவருள்ளும் சிறியவருள்ளும் பலர் இவரி டம் வந்து நமஸ்கரித்து விபூதி வாங்கித் தரித்துக்கொள்வார் கள். இவர் படிக்குங் காலத்தில் இவருடைய உபாத்தியாயருள் ஒருவராகிய சரவணமுத்துப் புலவரென்பவருக்கும் களத்தூர் வேதகிரி முதலியார் என்பவருக்கும் மானிப்பாய் உதயதார கைப் பத்திரிகை வாயிலாகச் சில தர்க்கங்கள் நடந்தன. அவற் றில் இவருடைய பெயரும் சிற்சிலவிடங்களில் வந்தமையினால், இந்தியாவிலும் இவருடைய பெயர் எட்டுவதாயிற்று. ஆதலி னால், இவர் அங்கே பற்பல முறை போய்த் தம்முடைய பாதிக் காலத்தைக் கழித்திருந்தாலும், அங்குள்ள வித்துவான்களிடத் திலே தமக்குத் தெரியாததென்று ஒன்றையுங் கேட்டதேயில்லை. இருபத்திரண்டு வயசுவரையும் இவர் கற்றது பலருக்குந் தெரி யுமேயன்றி அதன்பின் கற்றது ஒருவருக்குந் தெரியாது.

இருபது இருபத்திரண்டு வயசாயிருக்குங் காலத்தில், இவர் திருமுருகாற்றுப்படையென்னும் நூலைப் பாராயணம் பண்ணுவதுண்டு. வண்ணார்பண்ணையிலுள்ள வைத்தீசுரன் கோயிலிலே தக்ஷிண மூர்த்தி சந்நிதானத்தில் இருந்து செபஞ் செய்வதுமுண்டு. சுப்பிரமணியசுவாமியினுடைய வரப்பிரசாதமோ அன்றித் தக்ஷிண மூர்த்தியினுடைய வரப்பிரசாதமோ இவருக்கு இருந்திருத்தல் வேண்டும். அதனை இவர் எழுதிய பெரியபுராண வசனத்திலே முகவுரையில் "நாயினுங் கடையனாகிய என்னை ஒருபொருளெனக் கருதி ஆட்கொண்டருளிய கிருபாசமுத்திரமாகிய ஸ்ரீலஸ்ரீக் குருமூர்த்தியுடைய திருவடிகளைச் சிந்தித்துத் துதித்து வணங்கி, அவரது திருவருளினாலே, அதனைப் பெரும்பான்மையும் இயற்சொற்களும் சிறுபான்மை ஆவசியகமாகிய திரிசொற்கள் வடசொற்களும் பிரயோகிக்கப்படுங் கத்தியரூபமாகச் செய்து, வாசிப்பவர்களுக்கு எளிதிலே பொருள் விளங்கும்படி பெரும்பான்மையும் சந்திவிகாரங்களின்றி, அச்சிற்பதிப்பித்தேன்" என்று எழுதப்பட்டிருத்தலால் அறிக. இந்த இரகசியம் நம்மொருவருக்குந் தெரியாது. அநேக ஏடுகள் இவர் சம்பாதித்ததுமுண்டு. அநேக ஏடுகள் இவர் தொட்டதுமுண்டு. அன்றிக் கிரமமாகப் படித்ததாக ஒரு நூலுமில்லை. தொட்ட நூல்களில் இவருக்குத் தெரியாதவிஷயமும் இல்லை.

இவர் பார்சிவல் என்னும் பாதிரியாருக்குப் பண்டிதராயிருந்து பைபில் மொழிபெயர்க்குங் காலத்தில், அந்தப் பைபில் சென்னபட்டணத்திலும் மொழிபெயர்க்கப்பட்டுவந்தது. பாதிரியாருக்கு, தமது சபையார் சென்னபட்டணத்தாருடைய மொழிபெயர்ப்பை ஏற்பார்களோ அன்றித் தம்முடைய மொழிபெயர்ப்பை ஏற்பார்களோ என்னுஞ் சந்தேகமிருந்தது. ஆதலினாலே, தம்முடைய மொழிபெயர்ப்பு முடிந்தவுடன், அதனைச் சென்னபட்டணத்திலுள்ள சபையாருக்குக் காட்டக் கொண்டுபோன

பொழுது, பாதிரியார் இவரையுங் கூட அழைத்துக்கொண்டு போயிருந்தார். சென்னபட்டணத்திலே மொழிபெயர்த்தவர்கள் தங்கள் மொழிபெயர்ப்பே சரியானது என்றும், யாழ்ப்பாணத்தார் மொழிபெயர்ப்புத் தவறுடையது என்றும் பொறுமையினால் வாதித்தார்கள். அப்போது சபையார் இதனைத் தீர்க்குமாறு, அங்கே சிறந்த வித்துவானாயிருந்த மகாலிங்கையரென்பவரை மத்தியஸ்தராக நியமித்தார்கள். அவர் பார்சிவல் பாதிரியாருடைய மொழிபெயர்ப்பே மிகச் சிறந்ததென்று பாராட்டினதுமன்றி, யாழ்ப்பாணத்தில் இவ்வளவு சிறந்த தமிழ் உண்டோவென்றும் ஆச்சரியப்பட்டார். இம் மொழிபெயர்ப்பையே சபையார்கள் மெச்சிப் புகழ்ந்து அச்சிடுவித்தனர். இதனாற் பாதிரியாருக்கு இவரிடத்தே முன்னிருந்ததினும்பார்க்கப் பதின்மடங்கு அதிக பிரீதியுண்டாயிற்று.

பாதிரியாருக்குப் பண்டிதராகும்போது, இவர் தாம் ஒரு காலத்தும் விபூதி அழிக்கமாட்டோமென்றும் உத்தூளனம் திரிபுண்டரமாகிய இருவகையானும் உடம்பிலே விபூதிபூசிக்கொண்டுதான் வருவோமென்றும், தாம் கிறிஸ்துமத கண்டனஞ் செய்வதைப் பற்றிக் குறைசொல்லக் கூடாதென்றும், இவை முதலாகிய நிபந்தனைகளையெல்லாம் கேட்டுக்கொண்டார். பாதிரியாரும், தமக்குக் கீழேயுள்ள கிறிஸ்தவர்கள் பலர் பஞ்சாட்சரக் (சம்பளம்) கிறிஸ்தவர்களென்றும், சைவருள்ளும் இவர் ஒருவரே சரியானவரென்றும் நிச்சயமாக அறிந்துகொண்டபடியாலும், தமக்கு இவர் போன்ற வேறு பண்டிதர் அகப்படாமையினாலும், இவருடைய கேள்விகளுக்கெல்லாம் உடன்பட்டார். சென்னபட்டணத்திலே பாதிரியார் இவரைக் காணுஞ் சபைகளிலெல்லாம் எழுந்து அஞ்சலிசெய்து [illegible] என்று உரத்துச் சொல்லி ஆசனங் கொடுத்து இருத்துவார். பாதிரியாருக்கு இவரிடத்தே மிக்க பிரீதி இருந்ததென்பதைப் பின்னே காட்டுகின்றோம். ஊர் நன்மைக்காக இவர்படும் பிரயாசத்தைப் பாதிரியார்

பல முறையினுங் கண்டு, தலைக்குமேலே கைகாட்டித் தமிழருக்காகக் கதறிக் கதறி மண்டை வெடித்துத் தாங்கள் சாவீர்கள் என்று சாபமொழிபோலச் சொல்வார்.

பைபிலை மொழிபெயர்க்குங் காலத்தில், அதனையும் அதற்குப் பூர்வாசாரியர்களாலே செய்யப்பட்ட உரைகளையும் நன்றாகக் கற்றுக்கொண்டார். அதிலுள்ள குற்றங்கள் இவருக்குத் தெரிந்ததுபோலப் பிறரொருவருக்குந் தெரியா. அதில் இவருக்குண்டான அறிவு பாதிரிமாருக்குத்தானும் இல்லை. இப்படிப் பண்டிதராயிருக்குங் காலத்திலே பாதிரிமார் செய்யும் உபாயங்களையெல்லாம் நன்கு அறிந்து கொண்டார்.

இவர் கல்வியறிவில் மாத்திரமன்று, இலௌகிகவறிவினுஞ் சிறந்தவர்; ஊரிலுள்ளார் பலருடைய சாதிகளும் அவர்களுடைய குற்றங்களும், குணங்களும் ஆகிய இவைகளையும் மற்றெவரினும் பார்க்க அறிந்தவர். இவ்வறிவு, இவருக்குப் பலர் பிற்காலத்தில் அஞ்சுவதற்கு ஏதுவாயிருந்தது.

---

## மூன்றும் அதிகாரம்.

### படிப்பித்தல்.

இக்காலத்திலே, கருவிநூல்களையும் சமயநூல்களையும் சில பிள்ளைகளுக்குக் கற்பித்தால் அவர்களால் உலகத்திற்குப் பயன் பெரிது சித்திக்குமென்றெண்ணி, பிள்ளைகளைச் சேர்ந்து விசுவாவசு வருஷம் தைமீ முதலாக இராத்திரியிலுங் காலையிலும் வேதனம் பெறாது கற்பிக்கத் தொடங்கினர். அப்போது இவரிடத்திலே கல்வி கற்கும்படி சேர்ந்த பிள்ளைகள், சதாசிவப் பிள்ளை, சுவாமிநாதையர், நடராஜையர், விசுவநாதையர், ஆறுமுகப்பிள்ளை, கந்தசுவாமிப்பிள்ளை, ஆறுமுகச்செட்டியார் முதலானவர்கள்.

இவரும் சதாசிவப்பிள்ளை என்பவர், இவரைப்போல நைட்டிகப் பிரமசாரியாய், இவர்போன இடங்களுக்கெல்லாம் உடன் சென்று, இவர் எடுத்த தருமங்களுக்கெல்லாம் உற்ற துணையாய், இவர் திருத்திக் கொடுத்த புத்தகங்களை அச்சிட்டு அதனால் இவருடைய சிதம்பர சைவப்பிரகாசவித்தியாசாலைப் பொருளை அபிவிருத்தி செய்து, இவருக்குப் பின்னும் ஏறக்குறைய முப்பது வருஷ காலம் இவருடைய வித்தியாசாலைகளை நடத்திவந்து சாதாரண ஐப்பசிமீ அவ சிதம்பரத்திலே சிவபதமடைந்தனர். நடராஜையரென்பவர், சிவஞானசித்தியார் முதலிய தமிழ்ச் சைவசித்தாந்த நூல்களிலும், பௌஷ்கரம் முதலாகிய சம்ஸ்கிருத நூல்களிலும் பாண்டித்தியமுடையவராயும், சிறந்த சைவசித்தாந்தியாயும், பல மாணாக்கருக்குச் சைவசித்தாந்த உபதேசஞ் செய்பவராயும், யோகாப்பியாசஞ் செய்பவராயுமிருந்து, சோபகிருது வரு மார்கழி மீ சிவபதமடைந்தனர். ஆறுமுகப்பிள்ளை என்பவர் திருவண்ணாமலை ஆதீனத்திற் சேர்ந்து தம்பிரானாகி, சித்தாந்த நூல்களில் அதிக பயிற்சியுடையவராய்ப் பெரியபுராணத்துக்கு ஒரு சிறந்த உரை செய்திருக்கின்றார்.

இவர்களுக்கு அடுத்த வகுப்பிற் கற்றவர்கள் வித்துவசிரோமணி ச. பொன்னம்பலபிள்ளை, மா. வைத்தியலிங்கபிள்ளை முதலானவர்கள். இவருட் பொன்னம்பலபிள்ளை தமிழில் இலக்கண இலக்கியங்களில் மிகச் சிறந்த வித்துவானாயும், புராணங்கள் காவியங்கள் முதலானவைகளுக்கு அர்த்தஞ் சொல்லுவதிலே தம்முடைய ஆசிரியராகிய நாவலருக்கு அடுத்த படியில் உள்ளவராயுமிருந்து, உரையாசிரியர் ம. க. வேற்பிள்ளை உபாத்தியாயர், பண்டிதர் வே. கனகசபாபதிஐயர், திருவாவடுதுறையாதீன வித்துவான் சபாபதிநாவலர், ச. பொன்னம்பலபிள்ளை முதலான பல மாணாக்கருக்குக் கல்வி கற்பித்து விளம்பிவரு மார்கழிமீ ருவ சிவபதமடைந்தனர். வைத்தியலிங்கபிள்ளை என்

பவர் யாழ்ப்பாணம் சைவப்பிரகாச வித்தியாசாலையில் நெடுங் காலந் தலைமை உபாத்தியாயராயிருந்தார்.

தர்க்ககுடாரதாலுதாரி வை. திருஞானசம்பந்தப்பிள்ளையும், ச. பொன்னம்பலபிள்ளையும், வை. விசுவலிங்கபிள்ளையும், அடியேனும், வேறு சிலரும் வித்தியாசாலையில் தூரத்தே நின்று பிற்காலத்தில் நாவலரிடத்திற் கற்றவர்கள்.

இவர் குடும்பப்பற்று அற்றவராயினும், மருமகனாகிய வித்துவசிரோமணி பொன்னம்பலபிள்ளையிடத்து மிக்க பற்றுடையவராயிருந்தார். அதற்குக் காரணம் பொன்னம்பலபிள்ளை தமிழிலே சிறந்த வித்துவானாயிருந்து பலருக்குத் தம்மைப் போலக்கைம்மாறு வேண்டாது கல்வி கற்பித்து வந்ததேயாம்.

இவர் பார்சிவல் பாதிரியாருக்குப் பண்டிதராகுங் காலத்தில் இவரோ டுடன்கற்ற மு. தில்லைநாதபிள்ளை என்பவரும், சு. சின்னப்பபிள்ளை என்னும் மற்றொருவரும் பாதிரிமாருடைய துர்ப்போதனையை நம்பிக் கிறிஸ்தவராக எண்ணி இன்ன கிழமை மச்சனம்*பெறுவோமென்று பாதிரியாருக்கு வாக்களித்திருந்தார்கள். அதனை அறிந்த இவர், அவ்விருவரையும் அழைத்து அவர்களுக்குச் சைவசமயத்தின் உண்மையையும் கிறிஸ்து சமயத்தின் ஆபாசங்களையும் மனசிற் பதியுமாறு போதித்தார். அப்போதனையைக் கேட்டவுடனே அவர்கள் மனந் திரும்பிக் கிறிஸ்தவராதலை ஒழித்தார்கள். தில்லைநாதபிள்ளை என்பவர் பின் இவருடைய வித்தியாசாலையில் ஓர் உபாத்தியாயரும், இவருக்கன்புள்ள சீஷனும் இருந்தார். மற்றைச் சின்னப்பபிள்ளை என்பவர் கொழும்பு சென்று சுப்பிரீங்கோட்டு நியாயதுரந்தரராகித், திரும்பிவந்து இவரிடத்தும் சைவசமயத்தினிடத்தும் மிக்க பற்றுள்ளவராயிருந்தார். இன்னும் கிறிஸ்து மதத்திற் பிரவேசிக்க எண்ணியிருந்த சுந்தரப்பிள்ளை

---

* மச்சனம் - முழுகுதல்; அஃதாவது கிறிஸ்தவர்களுடைய 'ஞானஸ் நானம்.'

முதலான அநேகர் அதிற் பிரவேசியாதபடி இவராலே தடுக்கப்பட்டார்கள்.

இக்காலத்திலே யாழ்ப்பாணத்திற் சுதுமலை என்னுமிடத்தில் கறல் விசுவநாதபிள்ளை என்றொரு கிறிஸ்தவர் இருந்தார். அவர் சென்னையிற் சர்வகலாசாலை உண்டான முதல் வருஷத்தில் B. A. பரீக்ஷையிற் சித்திபெற்றவர். அந்த விசுவநாதபிள்ளை, இவர் எழுதிய பத்திரிகை ஒன்றற்கு மாறாகப் பொருந்தா நியாயங்கள் காட்டி, ஒரு மறுப்பு எழுதினார். அவர், பின், தாம் எழுதினவைகள் எல்லாம் சரியானவைகளல்ல என்றும், சைவதூஷணபரிகாரம் சுப்பிரபோதம் என்னும் நூல்களில் எழுதப்பட்டவைகளே சரியானவைகளென்றும், சைவசமயமே உண்மையான சமயமென்றும் உணர்ந்து பச்சாத்தாபமுற்றுச் சிதம்பரத்துக்குப் போய், தாம் செய்த சிவதூஷணங்களுக்குப் பரிகாரமாகப் பொன்னூசி காய்ச்சித் தமது நாவைச் சுடுவித்துக்கொண்டு சைவராயினர்.

சதாசிவப்பிள்ளை முதலானவர்களுக்கு முதலிற் படிப்பித்த காவியம் பெரியபுராணமாகும். அதனைப் படிப்பிக்கும் போது அதனுடைய அருமை பெருமைகளையெல்லாம் இவர் நன்றாக அறிந்துகொண்டார். அதனால் அதனைச் செய்தருளிய சேக்கிழார் நாயனாரிடத்தும் அதிற் சொல்லப்பட்ட அறுபத்துமூன்று நாயன்மாரிடத்தும் அளவிறந்த பத்தி இவருக்கு உண்டாயிற்று. அந்தப் பத்தியின் மிகுதிப்பாட்டினால் அகஸ்தியபத்தவிலாசம், சிவரகசியம், உமாபதிசிவாசாரியர் செய்த சேக்கிழார்புராணம், சிவானந்தலகரி, சௌந்தரியலகரி, முதலான நூல்களைத் தேடிக் கற்றுக்கொண்டார். பெரியபுராணத்தினிடத்தே இவருக்கு இருந்த அளவிறந்த பத்தியைக் கண்ட இவருடைய மூத்த தமையனார் தியாகராசர் என்பவர், இவருடைய பத்தியைச் சோதித்தற்காகப் "பெரியபுராணத்திலுள்ள கதைகளெல்லாம் கட்டுக்கதை" என்று இவருக்குச் சொல்லக்கூடிய

ஒருவரிடத்திற் சொல்லிவிட்டார். இதனைக் கேட்டவுடனே இவர் கோபாவேசங்கொண்டு, தமையனாரை வெட்டுதற்கு ஒரு கத்தியை எடுத்துக்கொண்டு போனார். அவர் சிரித்துக்கொண்டு வீட்டுக்குள்ளே போய்விட்டார். இவரை அங்கே நின்றவர்கள் பிடித்துக்கொண்டார்கள். அதனால் இவர் அந்தமையனாரோடு பேசுதலைச் சிலநாள் ஒழித்திருந்து, அவர் நளவருடம் ஐப்பசிமீ இறக்கும் பொழுது, அவரிடத்தே பூசை விபூதியும் கங்கையுங் கொண்டுபோனார். அவர் இவரைக் கண்டவுடனே மிக்க ஆராமையோடு "தம்பி வா" என்று அழைத்து, "நான் ஏதும் குற்றஞ் செய்திருந்தால் அதனைப் பொறுத்துக்கொள்" என்றனர். இவரும் மனங் கலங்கி நாத்தழுதழுத்து அவரது தலையைத் தூக்கித் தம்மடிமேல் வைத்து விபூதியைப் பூசிக் கங்கையை வாயில் விட்டு அருட்பா ஓதி அவர் நற்கதி யடையுமாறு செய்தார்.

பிள்ளைகளுக்குப் பாடங்களை விளங்கப்படுத்துகிற சக்தி தமிழர்களுக்குள் இவருக்கே படைக்கப்பட்டது. விளங்கப்படுத்துகிறபோது "ஏ" "ஆரை" என்னும் இரண்டு சொற்களை இடையிடையே சொல்வார். எவ்வளவு கடினமான பாட்டுக்களையும் விஷயங்களையும் மாணாக்கருடைய மனசில் நன்றாகப் பதியும்படி மிகத் தெளிவாக விளக்குவார். அர்த்தஞ் சொல்லும்போதும், பிரசங்கஞ் செய்யும்போதும் இந்த "ஏ" "ஆரை" என்னுஞ் சொற்கள் ஒருபோதும் வந்ததில்லை. இலக்கியத்தை இலக்கணத்திலும், இலக்கணத்தை இலக்கியத்திலும் அமைத்துப் பொருத்தி மாணாக்கர்களுக்கு நன்கு காட்டினவர் இவரே.

இவர், திருவாவடுதுறை யாதீனத்திலிருந்து பண்ணில் வல்ல ஓதுவார்களைப் பலமுறை வருவித்து யாழ்ப்பாணத்திலுள்ள சில ஆலயங்களிலே தேவார திருவாசகங்களை ஓதுவித்தும், பண்ணோடு ஓதும்படி பிள்ளைகளைப் பயிற்றுவித்தும், கிரமமாக ஓதும் முறையைப் பரவச் செய்தார்.

இவர் நம்மனோர்போல் மனைவி மக்கள் முதலிய சுற்றத்தாரோடு கூடி இன்பம் அனுபவிக்கவும் பிறந்தவராகத் தோன்றவில்லை. ஏனெனில் இவரைக் கலியாணஞ் செய்துகொள்ள வேண்டுமென்று தமையன்மார் பலமுறை நெருக்கியும் இவர் உடன்படவில்லை. பின்பு தங்கள் குருவாகிய விளைவேலி ஸ்ரீமத் வேதக்குட்டிக் குருக்களைக்கொண்டு சொல்லுவித்தார்கள். இவர் "இந்த ஒரு பேச்சு மாத்திரம் என்னிடம் பேசவேண்டாம்" என்று குருக்களுக்குச் சொல்லிவிட்டார். விவாகஞ் செய்யாமலிருந்தும் தமது நைட்டிகப் பிரமசரிய விரதத்தை உலகத்தார் பலரும் அறியத்தக்கதாக எட்டுணையேனும் பழுதுபடாமல் நிறைவேற்றி முடித்தார். அன்றியும் தம்முடைய சம்பாத்தியங்களெல்லாவற்றையுந் தமது வித்தியாசாலைக்கும் தாம் மேற்கொண்ட பிற தருமங்களுக்கும் செலவழித்ததேயல்லாமல் தமது சுற்றத்தாருக்குக் கொடுத்ததில்லை.

இனி இவர் மற்றை உண்மைஞானிகள்போலத் தமது ஆன்மலாபத்திற்கு வேண்டிய கருமங்களைமாத்திரம் செய்து முடித்துக்கொண்டு போனவரும் அல்லர்; இவர் செய்த எல்லாக் கருமங்களும், பிறருடைய இகபரசுகங்களை வேண்டினவுந் தம்முடைய பரசுகமொன்றையே வேண்டினவுமாகிய கருமங்களேயாம். இவர் புகழுக்குச் சிறிதேனும் ஆசைப்படவில்லை; அது தானே உண்டாவதாயிற்று.

சைவசமயத்தை வளர்க்கவேண்டுமென்னும் பேராசை சிறுவயசிலேயே இவருக்கு உண்டாயிற்று. பார்சிவல் பாதிரியாருடைய பள்ளிக்கூடத்திற் கீழ்வகுப்பில் இங்கிலிஷ் படிக்குங் காலத்திலே பதின்மூன்றும் வயசளவிலே, சிவபெருமானை நோக்கிச் சைவசமயங் குன்றுதலைப்பற்றி இவர் ஒரு வெண்பாப் பாடினதுண்டு. தமிழ்ப்பாஷையினுடைய சுவையைத் தாம் அனுபவித்தறிந்த பின்னர் அதனை எல்லாரும் அனுபவித்தறியவேண்டு

மென்கின்ற ஆசை மிகப்பெறுவார்; அக்காலத்திலே தமிழ் படிப்பவர்கள் உபாத்தியாயர்களுக்குச் சம்பளங் கொடுக்க இயலாமல் படுங் கஷ்டமும், உபாத்தியாயர் பிள்ளைகளுக்குச் செய்யும் வஞ்சனையும், பிள்ளைகள் படிக்கிறதற்கு நூல்களைத் தேடும் பிரயாசமும் ஆகிய இவைகளைக் கண்டு கவலை கொள்வார்; பாதிரிமார் சைவர்களைக் "குருட்டுவழி" முதலாகிய புத்தகங்களாலும், நல்ல சம்பளம் உத்தியோகம் முதலியன தருவோமென்று சொல்லும் மருட்டுமொழிகளாலும், தம்வசமாக்கித் தமது சமயப் படுகுழியில் வீழ்த்துதலையும், சைவசமயத்தின் உண்மையை அறியாத மூட சனங்களெல்லாம் விளக்கிற் போய் விழும் விட்டிற் பறவை போலப் பாதிரிமாரிடத்திற்போய் விழுதலையும், இவைகளையெல்லாம் அக்காலத்திலிருந்த சைவகுருமாரும் வித்துவான்களும் * கண்டுங் கேட்டும் அவற்றைத் தடுக்க முயலாதிருத்தலையுங் கண்டு அல்லும் பகலும் மனம் புழுங்குவார்; அன்றியும் சைவர்களாயுள்ளார் மற்ச மாமிசம் புசித்தலையும், அவர்கள் தமதாசாரங்களைச் சரிவர அனுட்டியாமையையுங் கண்டு மனம் வருந்துவார்; அநேக சைவாலயங்கள் ஆகமப்பிரகாரங் கட்டப்படாமையையும் அவைகளிலே பூசை திருவிழாக்கள் விதிப்படி நடவாமையையுங் கண்டு மனம் வருந்துவார். இந்தக் கவலையையும் மனப்புழுக்கத்தையும் மனவருத்தத்தையும் கொடுத்தே, பரமசிவன் இவரைத் தமது தொண்டுக்கு உரியவராக்கிக்கொண்டார். இவ்வளவு உலகப்பிரசித்தமான பௌத்தசமயத்தைத் தாபித்த புத்தரும், தாம் மனைவி மக்களோடு கூடி இன்பமனுபவித்து அதன்பின்னரே உலகத்துக்கு நன்மை செய்யத் தொடங்கினாரென்று பௌத்த சமயநூல்கள் சொல்லும். கிறிஸ்துமத தாபகராகிய யேசுவும் முப்பது வயசுவரையும் என்னென்ன சுவானு

---

* சுன்னாகத்திலிருந்த முத்துக்குமார கவிராசர் மாத்திரம் ஞானக்கும்மி என்கின்ற ஒரு சிறந்த கிறிஸ்துமத கண்டனநூல் செய்திருக்கின்றார். அது பின் நாவலராலே திருத்தமாக அச்சிடப்பட்டது.

புவங்களை அனுபவியாது விட்டாரோ தெரியாது. மகம்மது எல்லாச் சிற்றின்பங்களையும் அனுபவித்துக்கொண்டே தமது மதத்தைத் தாபித்தாரென்ப. இவரோ சென்னபட்டணத்திலிருந்து புத்தகங்கள் அச்சிடுங் காலத்திலே தவசிப்பிள்ளைப் பஞ்சத்தினாற் பூசைநைவேத்தியத்தை மாத்திரம் உண்டிருந்த காலங்களும் உள. இவரனுபவித்த இம்மைச்சுகம் புகழொன்றேயல்லாமல் வேறொன்றுமில்லை. அதனையும் இவர் மனத்தால் அனுபவிக்கவில்லை. இவைகளை இவர் சிதம்பர சைவப்பிரகாசவித்தியாசாலை நான்காம் ஆவேதனத்தோடு கூட விபவஞ சித்திரைமீ வெளியிட்ட "சைவசமயிகளுக்கு விக்கியாபனம்" என்னும் பத்திரிகையில் எழுதியவாற்றாலறிக.

அது வருமாறு:—

"நான் ஜயஞ முதலாகப் பீற்றர் பார்சிவல் துரையுடைய இங்கிலிஷ் வித்தியாசாலையிலே இங்கிலிஷ் கற்றேன். பிலவஞ பார்சிவல் துரைக்குத் தமிழ்ப்பண்டிதனாயினேன். பிதிரார்ச்சிதம் நான் பெறவில்லை. என்னுடைய தமையன்மார்கள் நால்வரும் இயன்றமட்டும் பொருளும் உத்தியோகமும் உடையவர்களாயிருப்பவும், அவர்கள் பொருளுதவியும் நான் பெறவில்லை. இங்ஙனமாகவும், மேற்கூறப்பட்ட விருத்தியை நான் கீலகஞ புரட்டாதிமீ பரித்தியாகஞ் செய்தேன். பார்சிவல் துரை 'நான் தங்களுக்கு உயர்வாகிய வேதனம் தருவேன்; தாங்கள் என்னை விடலாகாது' என்று பலதரம் வற்புறுத்திச் சொல்லியவழியும், நான் அவ்விருத்தியில் விருப்பம் வைக்கவில்லை. நான் இங்கிலிஷிலே அற்பவிற்பத்தியாயினும் பெற்றிருந்தும், என்னோடு இங்கிலிஷ் கற்றவர்களுள்ளும் எனக்குப் பின் இங்கிலிஷ் கற்றவர்களுள்ளும் அநேகர் தங்கள் தங்கள் சத்திக்கேற்ற உத்தியோகம் பெற்று வாழ்ந்திருக்கக் கண்டும், நானும் என்சத்திக்கேற்ற உத்தியோகத்தின்பொருட்டு முயற்சி செய்யின் அது தப்பாது சித்திக்கும் என்றறிந்தும், அஃதில்லாமையால் வினை

யும் அவமதிப்பைப் பார்த்தும், உத்தியோகத்தை விரும்ப வில்லை. தமிழ்க்கல்வித் துணைமாத்திரங்கொண்டு செயப்படும் உத்தியோகம் வலிய வாய்த்த பொழுதும், அதையும் நான் விரும்பவில்லை. கன்னியை நாயகனிடத்து ஒருதுட்டாயினும் வாங்காது வீடு விளைநிலம் தோட்டம் ஆபரணம் முதலியவற்றோடு விவாகஞ்செய்து கொடுக்கும் வழக்கமேயுடையது என் சென்ம தேசமாகவும், நான் இல்வாழ்க்கையிலே புகவில்லை. இவைகளெல்லாவற்றிற்குங் காரணம் சைவசமயத்தையும் அதன்வளர்ச்சிக்குக் கருவியாகிய கல்வியையும் வளர்த்தல்வேண்டும் என்னும் பேராசையேயாம்.

இப்பேராசையினால் இருபது வருஷகாலம் நான் செய்த முயற்சிகள் பல; அவைகளுள்ளே சித்தி பெற்றவை மிகச் சில. சைவசமயிகள் யாவரும் சைவசமயத்திலே சிரத்தையுடையர்களாகித் தங்கள் தங்களால் இயன்ற உதவி செய்தார்களாயின், நான் எடுத்த முயற்சிகளெல்லாம் இதற்கு முன்னரே நிறைவேறிவிடும்; நிறைவேறின், என்னைப் போலவே பிறரும் அங்கங்கே நன்முயற்சிகளைச் செய்வார்கள்; செய்யிற் கல்வியும் சமயமும் தழைத்தோங்கும்.

இதனை நான் என் சிறுவயசு முதலாகச் சிந்தித்துச் சிந்தித்து, 'சைவசமயத்தை வளர்த்தற்கு வேண்டும் முயற்சிகளைச் செய்வாரில்லையே! இதற்கு யாது செய்யலாம்? சைவசமயவிருத்தியின்கண்ணதாகிய பேராசையை அதனை முடித்தற்குச் சிறிதும் சத்தியில்லாத எனக்குத் தந்தருளிய சிவபெருமான் சத்தியுடைய மற்றையோர்களுக்குக் கொடுத்தருளினாரில்லையே!' என்று, இரவும் பகலும் பெருங்கவலை கொண்டு பெருமூச்செறிதலினும் பலருக்குப் பிதற்றுதலினுமே பெரும்பான்மையும் என்காலத்தைப் போக்குவேனாயினேன்.

நான் எனக்கு ஒழிவுள்ள காலத்தைக் கைம்மாறு வேண்டாது உலகத்தாருக்குப் பயன்படக் கழித்தல்வேண்டும் என்று

நினைந்து, விபவோவசு ஹூ தைமீ முதலாகச் சில பிள்ளைகளுக்கு இராத்திரியிலும் காலையிலும் தமிழ்க்கல்வி கற்பித்துக்கொண்டுவந்தேன்."

வித்தியாசாலைகள் தாபித்து வேதனம் வாங்காமற் பிள்ளைகளுக்குக் கல்வி கற்பிக்கவேண்டுமென்னும் ஆசையும், ஏட்டிலே உள்ள நூல்களை எல்லாரும் எளிதிற் பெறும்படி அச்சிற் பதிப்பித்தல்வேண்டும் என்னும் ஆசையும் இவருக்கு உண்டாயிருந்தது இவைகளால் விளங்குகின்றது.

---

## நாலாம் அதிகாரம்.

### பிரசங்கம்.

பிரசங்கம் என்பது வடசொல். அதற்குச் சமமான தமிழ் மொழியை நாம் இன்னுங் காணவில்லை. தமிழ்நூல்களிலே இச்சொல் வேறுபல பொருள்களில் வழங்கி வந்தது. அஃது, ஒருவர் சாதுரியமாகப் பேசும் விஷயத்திற்கு வந்தது இவர் காலத்திலேயாம். நூல்கள் உரைகள் செய்த மிகச் சிறந்த வித்துவான்கள் பலர் முற்காலத்திலே இருந்தார்கள்; அவர்கள் சபைகளிலே எழுந்து ஒவ்வொரு விஷயத்தை எடுத்துக்கொண்டு அதனைச் சனங்களுக்குப் போதித்ததை நாம் கேள்விப்படவில்லை. தமிழிலே பிரசங்கம் என்பது, முதல் இவராலேதான் செய்யப்பட்டிருத்தல்வேண்டும். இவர் தம்முடைய அபிப்பிராயங்களையெல்லாம் பிறர்க்குச் சொல்லவும் நிறைவேற்றவும் விரும்பி, மகாப்பிரபுவாகிய வைத்தியலிங்கச்செட்டியாரால் கட்டுவிக்கப்பட்ட வண்ணார்பண்ணைச் சிவன்கோயிலிலே கலியுகம் ௪௯௫௯க்குச் சரியான பிலவங்க ஹூ மார்கழிமீ ௩அ௳ சுக்கிரவாரமும் சுவாதி நக்ஷத்திரமுங் கூடிய சுபதினத்திலே, சைவமென்னுஞ் செஞ்சாலி வளரும்பொருட்டுப் பிரசங்கம் என்னும் மழையை முதன்முதற் பொழிந்தார். பிரசங்கஞ்

தொடங்கும்போது விக்கினேசுரரை நினைத்துத் தேங்காயுடைத்தார்கள். அது சாத்திரத்திற் சொல்லப்பட்ட பிரகாரம் உடைந்தது. மங்கலமாகிய கோயில் மணிச்சத்தமும் அகஸ்மாத்தாய்க் கேட்டது. இவைகளால் இப்பிரசங்கம் நெடுங்காலந் தழைத்தோங்குமென்று அங்கிருந்தோரெல்லாரும் பேசிக்கொண்டார்கள். அந்நாள் முதலாக ஒவ்வொரு சுக்கிரவாரத்திராத்திரிகளினும் நியமமாகச் சைவப்பிரசங்கஞ் செய்து வந்தார். அந்தக்காலத்தில் இவர் நின்றுகொண்டுதான் பிரசங்கம் செய்வார். இவரோடு ஒருசாலை மாணக்கராயிருந்த நல்லூர் வேங்கடாசலஐயர் குமாரர் கார்த்திகேய ஐயரும் இவருடைய கேள்விப்படி இடையிடையே பிரசங்கஞ் செய்துவந்தார்.

கார்த்திகேய ஐயரும் இவரும் பிரசங்கஞ் செய்துகொண்டு வருநாளில், கார்த்திகேய ஐயருடைய பிரசங்க முறையொன்றிற் பல சனங்கள் பிரசங்கங் கேட்க வந்து காத்திருந்தார்கள். ஐயர் அப்பொழுது ஓடிவந்து "என்னுடைய தாயாருக்கு அதிக அசௌக்கியமாயிருத்தலால் எனக்கு இன்றைக்குப் பிரசங்கஞ் செய்ய இசையாது. தாங்களே இன்றைப் பிரசங்கத்தைச் செய்தல்வேண்டும்" என்று இவரிடஞ் சொல்லிவிட்டு உடனே போய்விட்டார். பிரசங்கங் கேட்க வந்த சனங்களெல்லாரும் "தாங்களே பிரசங்கஞ் செய்யுங்கள்" என்று இவரைக் கேட்டுக்கொண்டார்கள். இவர் அந்தச் சுக்கிரவாரங் கார்த்திகேய ஐயருடைய பிரசங்கமுறைநாள் என்பதுபற்றித் தாம் பிரசங்க விஷயம் ஒன்றும் ஆயத்தம் பண்ணவில்லை. அதுபற்றி "நான் ஆயத்தமில்லை" என்றார். அப்பொழுது அங்கிருந்தோர் பலர் சிறிது நகைத்தார்கள். உடனே, இங்கிலாந்தில் ஒரு பரீக்ஷைக்குப் போன பிள்ளைகளுக்கு ஒவ்வொருவிஷயம் எழுதும்படி காகிதத்திற் குறித்துக் கொடுக்கப்பட்டதென்றும், அவருள் ஒருவனுக்கு ஒன்றுங் குறியாமல் வெறுங் காகிதங் கொடுக்கப்பட்டதென்றும், மற்றவர்கள் எல்லாரும் குறித்த அவ்வவ் விஷ

யங்களை எழுத இவன் சூனியத்திலிருந்து கடவுள் உலகத்தைச் சிருட்டித்தார் என்பதே தனக்குக் கொடுக்கப்பட்ட விஷயம் எனக் கருதி அதைப்பற்றி எழுதினான் என்றும், தாம் வாசித்த ஒருகதை தமது நினைவில் வர "ஆயத்தமில்லை" என்று தாம் முன்பு சொல்லிய வாக்கியத்தையே பின்னும் மூன்று முறை உரத்துச்சொல்லி, அதனையே பீடிகையாகக் கொண்டு, மரணத்துக்கு ஆயத்தமில்லை என்று மிக விரிந்து இனிமையும் சாதுரியமுந் தோன்றப் பேசி முடித்தார். ஆயத்தம்பண்ணாமல் அன்று செய்த பிரசங்கம்போல இவர் அதற்கு முன் செய்த தில்லை. முன்னே நகைத்தவர்கள் எல்லாரும் இந்தப் பிரசங்கத்தைக் கேட்டுத் திகைத்தவர்களானார்கள். இவருடைய பிரசங்கங்களுள் ஆயத்தம் பண்ணிச் செய்யும் பிரசங்கங்களினும் ஆயத்தம் பண்ணாமற் செய்யும் பிரசங்கங்களே பெரும்பாலுஞ் சிறப்புள்ளனவாயிருந்தன. இவர் பிரசங்கத்துக்கு ஆயத்தப் படுத்துவது என்னையெனின், பிரசங்கத்துக்குச் சிறிதுநேரத்துக்குமுன் ஏழு எட்டு நிமிஷந் தனியிடத்திலிருந்து சில நூல்களை எடுத்துப் பார்த்து அவற்றில் இன்ன இடம் என்று ஒரு காகிதத்திற் குறித்துக்கொள்வதேயாம்.

இந்தப்பிரசங்கங்களுக்கு வேண்டிய முயற்சிகளைச் சதாசிவப்பிள்ளையும் தில்லைநாதப்பிள்ளையும் பிறருஞ் செய்துவந்தார்கள். அந்தப் பிரசங்கம் வெகு சனங்களுக்குப் பயன்பட்டன.

சுவமத ஸ்தாபனத்திற்கும் பரமத கண்டனத்துக்கும் அத்தியாவசியகம் வேண்டற்பாலனவாகிய விஷயங்களைப் பிரசங்கித்துவரும் நாளிலே, பாதிரிமாருட் சிலர் பார்சிவலிடத்திலே போய், "நாங்கள் இந்தேசத்துக்கு வந்த காலத்திலாவது அதற்கு முன்னாவது சைவசமயத்தவர்களுக்குள்ளே இல்லாத காரியத்தை, உம்மிடத்திலே தமிழ்ப்பண்டிதராயிருப்பவர் இப்போது செய்கின்றார்; நாங்கள் இத்தேசத்துக்கு வந்த காரணம் எங்களுடைய சமயத்தைப் பரப்புதற்கேயன்றிப் பிறிதொன்

றற்கன்று. அப்படியிருக்க, எங்கள் சமயம் பொய்யென்றும், அதைப் பரம்ப விடமாட்டேன் என்றுஞ் சபதங் கூறி; சொல்லாலுஞ் செயலாலுங் காட்டுகிற இவரை உமக்குத் தமிழ்ப்பண்டிதராக வைத்திருத்தல் தகாது" என்றார்கள். அவர்கள் சொல்லியவைகள் தங்கருத்துக்கும் ஒருவாறு ஒத்திருந்தமையால்; பார்சிவல் ஒருநாள் இவரை நோக்கி, "தாங்கள் சிவன்கோயிலிலே வெள்ளிக்கிழமைதோறுஞ் சைவப்பிரசங்கஞ் செய்கின்றீர்களாம்; இடையிடையே நமது சமயத்துக்கு மாறாகவும் பேசுகின்றீர்களாம் அஃதென்னை?" என்று அறியாதார்போலக் கேட்டனர். அதற்கு உத்தரமாக இவர் "என் கடமைகளை நிறைவேற்றுதலில் ஏதுந் தவறுண்டா? அப்படியானாற் சொல்லும்" என்றார். பாதிரியார் ஒன்றும் பேசாது மௌனமாயிருந்துவிட்டு, பின்பு தம்மிடத்திலே முறையிடு செய்த பாதிரிமாருக்கு "இப்படிப்பட்ட ஒருவரைத் தகுந்த சம்பளங் கொடுத்தாலும் பெற்றுக்கொள்ளுதல் அரிதாதலால், இக்காரியத்திலே நான் யாதும் பேசாது விடுதலே தகுதி" என்று சொல்லிவிட்டார்.

புறச்சமயிகளுக்குள்ளேயன்றி, நமது சைவசமயிகளுக்குள்ளே இல்லாதிருந்த பிரசங்கத்தை இவர் செய்யத் தொடங்கிய பின்னர், பிராமணர்கள் வித்துவான்கள் பிரபுக்கள் முதலிய எத்திறத்தாரும், இவர் செய்யும் பிரசங்கங்கள் பாதிரிமார் செய்யும் பிரசங்கங்களினும் கடினமான விஷயங்களாயும், பல நூல்களின் சாரங்களாயும், இம்மை மறுமைப் பயன்களைத் தருவனவாயும், காதுக்கு இனியனவாயும், கேட்போருக்கினிது விளங்குவனவாயும் இருத்தலை அறிந்து ஆச்சரியமடைந்து, மிக்க ஊக்கத்தோடும் அன்போடும் ஒவ்வொரு சுக்கிரவாரத்திலும் கிரமமாக வந்து கேட்பாராயினார்கள்.

சைவசமயத்தின் இலக்கணம் இது என்பதும்; சைவசமயிகள் வழிபடுங் கடவுளது இலக்கணம் இது என்பதும், சைவசமயிகள் அத்தியாவசியகந் தரிக்க வேண்டிய சின்னங்கள்

இவை என்பனவும், யாவரும் முதலில் அறிய வேண்டிய விஷயங்களெனக் கண்டு, அவ்விஷயங்களை அதிப்பிரபல பிரமாணங்களோடும் எடுத்துப் பிரசங்கித்து வந்தார். அக்காலத்தில் இவர் பிரசங்கித்த விஷயங்களாவன: கடவுள் வாழ்த்து, உருத்திராக்ஷதாரணம், சிவபத்தி, வேதாகமங்கள், திருவிழா, சிவலிங்கோபாசனை, யாக்கை நிலையாமை, சிவதீக்ஷை, மகளிரொழுக்கம், இகபரப்பேறு, தருமம், செய்ந்நன்றியறிதல், பிக்ஷையிடுதல், கல்விகற்பித்தல், கடவுளொருவருண்டெனல், பசுக்காத்தல், அறிவொழுக்கங்களிற் சிறந்தோரைத் தழுவி நடத்தல், பிரபஞ்சம், மாயை, பேதைமை, கொல்லாமை, நீதசிக்ஷை, வியபிசாரம், கள்ளுண்ணல், சிவத்திரவியங்கவர்தல் முதலானவை.

இப்பிரசங்கங்களைக் கேட்டவர்களுள், மாமிசபோசனஞ் செய்த அநேகர் அது செய்யாது விட்டார்கள். மதுபானம் செய்த அநேகர் அது செய்யாது விட்டார்கள். தீக்ஷை பெற்றுஞ் சந்தியாவந்தனஞ் செய்யாத அநேகர் மீட்டுந் தீக்ஷை பெற்றுக் கிரமமாகச் சந்தியாவந்தனஞ் செய்து வந்தார்கள். உருத்திராக்ஷந் தரியாது ஆலய தரிசனஞ் செய்த அநேகர் உருத்திராக்ஷ தாரிகளாய்க் கோயில்களுக்குப் போய்த் தரிசனஞ் செய்யத் தொடங்கினார்கள். தரிசன காலங்களிலே ஒரு சிறிதுந் தோத்திரஞ் செய்யாத அநேகர் தோத்திரத்திரட்டுக்களை நெட்டுருப்பண்ணிக் கோயில்களிலே தோத்திரம்பண்ணத் தொடங்கினார்கள். ஒருகாலத்திலும் ஆலயதரிசனஞ் செய்யாத அநேகர் சோமவாரம், மங்கலவாரம், சுக்கிரவாரம், பிரதோஷம், கார்த்திகை, அமாவாசை, பௌர்ணிமை, மாசப்பிறப்பு, சிவராத்திரி, நவராத்திரி, விநாயகசதுர்த்தி, கந்தசஷ்டி முதலிய புண்ணிய காலங்களிலும், சிலர் எந்நாளிலும் ஆலயதரிசனஞ் செய்யத் தொடங்கினார்கள். சைவசமய நூல்களெல்லாம் சில விவேகிகளால் அவ்வக்காலங்களிலே தங்கள் பிழைப்புக்காகச் செய்யப்பட்டன என்று சொல்லிய பாதிரிமாரின் சொல்லை விசுவசித்

திருந்த அநேகர், பாதிரிமாரும் அவர்களைச் சேர்ந்தவர்களும் சொல்லினவெல்லாம் பொய்யென்றும், சிவபெருமான் ஆன்மாக்கள்பொருட்டு வேத சிவாகமமென்னும் முதனூல்களை அருளிச் செய்தாரென்றும், அவைகளுக்கு வழிநூல் சார்பு நூல்களும் அவ்வக்காலங்களிலே தோன்றினவென்றும், மற்றைச் சித்தாந்த நூல்களும் அவர் அருள் பெற்றவர்களாலேயே செய்யப்பட்டனவென்றும் அறிந்துகொண்டார்கள். பிரமா விட்டுணு உருத்திரன் முதலாகக் கடவுளர் பலரென்றும், அவர்களை வணங்குதலாலே தங்களை அநேகேச்சுரவாதிகள் என்று எண்ணின அநேகர், அநாதி முத்த சித்துருவாகிய சிவன் ஒருவரே சகல ஆன்மாக்களுக்கும் மேலாகிய கடவுள் என்றும், அவரை வழிபடுதலாலே தாங்கள் சித்தாந்த சைவரென்றுந் தெளிந்துகொண்டார்கள். கோயில்களிலே சுவாமியைச் சுமத்தல் தங்களுக்கு அவமானம் என்று எண்ணியிருந்த அநேகர் சுவாமியைச் சுமத்தலால் வரும் பயன் இதுவென்று அறிந்து சுமக்கத் தொடங்கினார்கள். தலைக்குட்டையோடு கோயில்களுக்குப் போய்ச் சுவாமிதரிசனஞ் செய்து வந்த அநேகர் அது விலக்கென்று கண்டு, தலைக்குட்டையில்லாது தரிசனஞ் செய்யத் தொடங்கினார்கள். பிறன்மனை விழைதல் வரைவின் மகளிர் விழைதல் முதலியவைகளே தங்களுக்கு இடையறு வேலையாகத் திரிந்த சிலர், அவை பாவமென்று கண்டு, வெறுத்துவிட்டார்கள். சரீரம் நித்தியமென்றும், தாங்கள் என்றைக்குஞ் சுகசரீரிகளாய்ச் சீவிக்கலாமென்றும் எண்ணினவர்கள்போல மரணத்தைக் குறித்து ஒருபோதுஞ் சிந்தியாதிருந்த அநேகர், சரீரம் அநித்தியமென்றும், இருவினைக்கீடாகிய சுகதுக்கங்களை அநுபவித்தல் நிச்சயமென்றும், அது நீங்குமவதி தமக்குத் தெரியாதென்றுந் தெளிந்துகொண்டார்கள். ஒருபோதுந் தருமசிந்தையில்லாது, தாமுந் தமது பெண்டிர் பிள்ளைகளும் நன்றாக உண்டுடுத்துக் கொண்டு களிப்புற்ற அநேகர், தருமஞ் செய்தலின் மிக்க உறுதி பிறி

தோன்றாமல் என்று கண்டு, அதனைச் செய்யத் தொடங்கினார்கள். நமக்கு எவ்வளவோ நன்றி செய்தவர்களையும் மறந்த அநேகர், செய்ந்நன்றி மறத்தல் கேடு என்று அறிந்தார்கள். உயிர்க்குயிராயுள்ள சிவபெருமானிலும் பார்க்கப் பெண்டிர் பிள்ளைகளிலும் பொருள் பண்டங்களிலும் அதிக அன்புவைத்த அநேகர், இவையெல்லாவற்றையுந் தந்தவரும், நம்மோடு அநாதியே இரண்டறக் கலந்து நின்றவரும், பெத்தநிலையிலே தாம் நம்முள்ளே மறைந்து நமக்குப் பின்னாகியும், முத்திநிலையிலே நம்மைத் தம்முள்ளேயடக்கித் தாம் நமக்கு முன்னாகியும் நிற்பவருமாகிய சிவபெருமானிடத்தே அதிக அன்பு வைத்தலே தகுதி யென்று கண்டு, அன்பு வைத்தார்கள். தங்கள் தங்கள் கடமைகளும் ஒழுக்கங்களும் இவை இவையென அறியாத பெண்களுள் அநேகர், தங்கள் தங்கள் கடமைகளையும் ஒழுக்கங்களையும் அறிந்துகொண்டார்கள். திருவிழாக்கள் தங்கள் கொண்டாட்டத்துக்கு மிக உவப்பானவைகள் என்று நினைத்த அநேகர், கடவுள் உற்சவங் கொண்டருளுவது ஆன்மாக்களாகிய நாமெல்லாந் தம்மேலே பத்திசெய்யும்பொருட்டென்று உணர்ந்து, திருவிழாக் காலத்திலே துன்மார்க்க விஷயங்களிலே நினைவை விடாது கடவுள்மீது பத்தி செய்து அவரை வழிபடத் தொடங்கினார்கள். பசுக்களை இரக்கமின்றி அடித்தல் முதலியவற்றைச் செய்த அநேகர், அவைகள் சிவலோகத்தினின்றும் பூமியில் வந்தன என்றும், அவைகளின் உறுப்புக்களிலே தேவர்களும் முனிவர்களும் வசிக்கின்றார்களென்றும், புண்ணிய தீர்த்தங்கள் இருக்கின்றன என்றும், அப்பசுக்கள் தரும் பஞ்சகவ்வியங்கள் சிவபெருமானுக்கு அபிஷேகத் திரவியங்களாகின்றன என்றும், அவற்றின் சாணம் சிவசின்னமாகிய விபூதிக்கு மூலம் என்றும் அறிந்து, அவைகளை வணங்குதற்கும், அன்போடு புல் முதலியன கொடுத்தற்கும், அவைகளின்பொருட்டுக் கேணி குளங்களை வெட்டுவித்து அவைகளினருகே ஆவுரிஞ்சுகல் நாட்டுவித்தற்குந் தொடங்கினார்கள்.

வீனரோடு கூடுதலும் அவர்களோடு காகிதம் கவறு சதுரங்கம் விளையாடுதலும் தமக்குத் தொழிலாகக் கொண்ட அநேகர், அவர்களோடு கூடாதும், அவை செய்யாதும் விடுத்துச் சிறசனரோடு சகவாசஞ் செய்தலே பெருமையென்றறிந்து, அவர்களோடு நல்விஷயங்களிலே பொழுது போக்கித் தொடங்கினார்கள். கல்வியிற் குறைவுடையோரும் கல்வியில்லாதவருமாகிய இருதிறத்தாரும் கல்வியின் மேம்பட்ட செல்வும் பிறிதொன்றுமில்லையெனக் கண்டு, கல்வி கற்கத் தொடங்கினார்கள்.

சிவபதமடையுமுன் மூன்றுமாசம் வரையும் இடையிடையே இவர் பிரசங்கங்கள் செய்துவந்தார். இவரைப் பிறவிடங்களிலும் பலர் அழைத்துக் கொண்டுபோய்ப் பிரசங்கங்கள் செய்விப்பார்கள். இவர் பிரசங்கஞ்செய்யுமிடங்கள் சிலவற்றில் இவரை உன்னதஸ்தானத்திலிருத்திப், பிராமணகுருமார் சைவகுருமார் பிரபுக்கள் முதலான எல்லாருங் கீழே இருந்து மிக்க ஆராமையோடு கேட்பார்கள். இவர் சென்னபட்டணத்தில் இருந்த காலங்களிலே தமது வீட்டிலுஞ் சுக்கிரவாரந்தோறும் பிரசங்கஞ் செய்து வந்தனர். அங்கும் வித்துவான்கள் பிரபுக்கள் முதலினோர் பலர் கிரமமாகச் சென்று அதனைக் கேட்டுவந்தார்கள். இவர் சௌமியவருஷத்திலே சென்னபட்டணத்தினின்று தக்ஷிணதேச யாத்திரை செய்துகொண்டு போங்காலத்தில், இதற்கு முன்னரே இவருடைய கல்வித்திறமை முதலியவற்றைக் கேள்வியுற்றிருந்த திருக்கைலாசபரம்பரைத் திருவாவடுதுறை ஆதீன உபயசந்நிதானங்களும், திருமடத்துக்கு இவரை அழைத்து உபசரித்து வித்துவான்களுக்கெதிரில் இவரிடத்திலே இலக்கண இலக்கியங்களிலும் சைவசித்தாந்த சாத்திரங்களிலும் பல ஆட்சேபங்களைப் பண்ணினார்கள். அவ்வாட்சேபங்களுக்கு இவர் சொல்லிய விடைகள் பலநூல்களின் சாரமாயும், யுத்தியனுபவங்களுக்கு இயைந்தனவாயுமிருந்தமையினால், அவை அவர்களுக்கு அதிக மகிழ்ச்சியைக் கொடுத்தன.

ஒருநாட் பண்டார சந்நிதிகள், சைவப்பிரசங்கமொன்று செய்யும்படி இவரைக் கேட்டார்கள். அப்போது இவர் செய்த பிரசங்கஞ் சிவாகமங்களிலே பிரதிபாதிக்கப்படும் பதி பசு பாசங்களை உணர்த்துவதாயும், சுருங்கச்சொல்லன் முதலிய அழகுடையதாயும், செந்தமிழ் நடையாயும், இலக்கண விதிக்கு ஒரு சிறிதும் மாறுபாடில்லாததாயும், தருக்கசம்பிரதாயம் நிறைந்ததாயும், பிறரெவரும் செய்தற்கு அரியதாயும், கடவுட் பத்தியுடையாரை மாத்திரமன்றி அஃதில்லாதாரையும் மனமுருக்கி ஆனந்தக்கண்ணீர் சொரியப்பண்ணுவதாயும், தெவிட்டாததாயுமிருந்தது. கல்வியறிவொழுக்கங்களிற் சிறந்த அவ்வுபய சந்நிதானங்களும், மற்றை வித்துவான்களும் இவருடைய வாக்குவல்லபத்தைக் குறித்து மிகவும் ஆச்சரியமுஞ் சந்தோஷமுங் கொண்டு நாவலர் என்னும் பட்டத்தை இவருக்குச் சூட்டினார்கள்.

நாவலர் என்னும் பட்டம் இவருக்கே தக்கது. இவர் பிரசங்கம் பண்ணும்போதும், அர்த்தஞ் சொல்லும்போதும், பேசும்போதும் சொற்களெல்லாம் நீரோட்டம்போல வந்துகொண்டேயிருக்கும். சொற்பஞ்சம் இவருக்கு ஒருகாலத்திலுமில்லை. ஒரு சொல்லையாவது விஷயத்தையாவது திருப்பிச் சொல்லும் வழக்கம் இவருக்கு இல்லை. இவர் பேசுவதை எந்தச் சிறுபிள்ளைகளும் விளங்கிக்கொள்வார்கள். பேசும்போது பெரும்பாலும் இயற்சொற்களையே வழங்குவார். சிறுபிள்ளைகளோடு பேசும் பேச்சும் இலக்கணத்துக்குச் சிறிதும் மாறுபடாததாயும் அவர்களால் விளங்கிக்கொள்ளத் தக்கதாயுமிருக்கும். குற்றங்கண்ட விடத்துப் பெரும்பிரபுக்களாயுள்ளவர்களும் இவராலே முகத்துக்கு முன்னே வைத்துக் கண்டிக்கப்பட்டவர் பலர். அவர்களெல்லாரும் அக்கண்டனத்தைக் கேட்டுக்கொண்டிருந்து விட்டுப் போனவர்களேயல்லாமல், முன்னிலையில் நின்று எதிர்த்துப் பேசினவர் ஒருவராவது இல்லை.

அதற்குக் காரணம் இவர் கண்டித்துப் பேசும்பேச்சு. அதுவு மொரு சிறந்த சாத்திரியமும் அலங்காரமுமாயிருத்தலேயாம். கேட்பவர் அவற்றால் மயங்கிப்போகின்றபடியால் எதிர்த்துப்பே சச் சத்தியற்றவராய் விடுகின்றார்கள்.

இராமநாதபுரம் பொன்னுசாமித்தேவருடைய சபையிற் செய்த பிரசங்கத்தை அவர் கேட்டு மகிழ்ந்து, மற்றை வித் துவான்களுக்கெல்லாஞ் செய்த விருதுகளினுஞ் சிறந்த விருதை இவருக்கு அளித்தார். இவர் மதுரைத் திருஞானசம்பந்த சுவாமியாதீனத்துப் பண்டார சந்நிதிகளுடைய அனுமதிப்படி மீனாட்சியம்மையார் சந்நிதானத்திலே பிரசங்கித்தபோது அத னைக் கேட்ட அந்தச்சந்நிதானம் மிகுந்த ஆனந்தம் அடை ந்து தாம் தரித்திருந்த ஆறுகட்டி சுந்தரவேடங்களைக் கையில் எடுத்துக்கொண்டு "இவைகளெல்லாம் எங்களுக்கேன்! சமயத் தாபனஞ் செய்ய வந்த தங்களுக்கே ஏற்றவைகள்" என்று சொல்லி இவருக்கு அணிந்தது. கோயிலருச்சகர் மீனாட்சியம் மையாருக்குச் சாத்திய விபூதிப்பிரசாதமும் பரிவட்டமும் புட்பமாலையுங் கொண்டுவந்து இவருக்குச் சாத்தினார். இவர் அந்த ஆறுகட்டி சுந்தரவேடங்களைத் திரும்பப் பண்டாரசந் நிதிகளுக்கே சமர்ப்பித்துவிட்டார். பண்டாரசந்நிதி வாத்திய கோஷத்தோடு இவரைத் திருமடத்துக்கு அழைத்துக்கொண்டு சென்று சிலகாலம் அங்கே கூட வைத்திருந்தது. தருமபுர ஆதீனம், திருவண்ணாமலை ஆதீனம், காஞ்சிபுர ஆலயம் முத லியவிடங்களிலெல்லாம் இவர் பிரசங்கித்தபோது அங்குள்ள பண்டார சந்நிதிகளும், சைவாசாரியர்களும், பிறரும் பரவச மாய்ப் பெருமகிழ்ச்சி யுற்றார்கள். திருவண்ணாமலை யாதீனத் துக் குன்றக்குடிப் பண்டாரசந்நிதிகள் பிரசங்கமுடிவிலே இவ ரைச் சிவிகையிலேற்றி வாத்திய கோஷத்தோடு பட்டணப் பிரவேசஞ் செய்வித்தார்கள். சிலவிடங்களிலே பிரசங்கமுடிவில்

சிலர் எழுந்து ஆனந்தக்கூத்தும் ஆடினார்கள். வேறு சிலர் விழுந்து விழுந்து நமஸ்கரித்து விபூதி வாங்கிக்கொண்டார்கள்.

இனி, புராணம் முதலியவைகளுக்கு இவர் அர்த்தஞ் சொல்லும் வன்மையும் சிறப்பும் ஆகிய இவ்வகளும் எவருடைய மனசையும் கசிந்துருகச் செய்யும்.

பிரசங்கங்களும், புராணபடனங்களுஞ் செய்யும்போது இருந்துகொண்டுசெய்வார். மற்றை லௌகிகப் பிரசங்கங்கள் செய்யும்போது நின்றுகொண்டே செய்வார். சமயப்பிரசங்கஞ் செய்யும்போது இவர் தரித்திருக்கும் பட்டாடையும், திரிபுண்டரமும், கௌரிசங்கமும், கொத்துத் தாழ்வடமும் எவரையும் வசீகரிக்கும். இனி இவருடைய குரலோசையோ வெகு தூரத்திலிருப்பவருக்குங் கேட்கத்தக்க தொனியும் மதுரமும் உடையது. எல்லா வகையான இராகங்களும் இவருக்கு வரும். பிரசங்கங்கள் செய்யப்போனாற் சிலகாலங்களிற் பத்து நாழிகை நேரம்வரையுங் காலெடுத்து மாறி வையாமலும், கை தலை முதலிய உறுப்புக்களை அசைக்காமலும் ஒரே மாதிரியாயிருப்பார். இவருடைய பிரசங்கம் முதலியவைகளைக் கேட்ட பண்டாரசந்நிதிகள் வித்துவான்கள் ஆகிய இவருள், இவருடைய சித்தாந்த உணர்ச்சியையும் புறச்சமய ஆராய்ச்சியையும் பற்றிப் புகழாதவர் ஒருவருமில்லை. யாழ்ப்பாண "டிஸ்திறிக் கோட்டில்" இவர் ஒருமுறை சாட்சியஞ் சொல்லப் போன போது, நீதிபதி தாம் தமிழ் சிறிதேனும் அறியாதவராயிருந்தும், இவர் பேசுகிற வகையைப் பார்த்து மிகவும் பாராட்டினார். இவர் படிக்கத் தொடங்கிய காலந்தொட்டுச் சிவபதமடையும் வரையுஞ் சரஸ்வதியென்னவள் இவருடைய நாவின் நுனியிலே நின்று நடனஞ் செய்துகொண்டேயிருந்தாள்.

இன்று வரையும் தமிழிலே குறியெழுத்தில் எழுதும் வகை இல்லாமையினால் இவருடைய பிரசங்கமொன்றும் பூர

ண்மாக அச்சில் வரவில்லை. அது பெருந் தூக்கம். அர்த்தஞ் செய்தவற்றுள்ளே சிறுவயசில் தமது நண்பர் ஆ. சுப்பிரமணி யப்பிள்ளை வீட்டிலே திருவிளையாடற்புராணத்துக்குச் சொல் லிய அர்த்தத்தையும், தருமபுரமடத்தில் "ஐந்துபேரறிவுங் கண்களேகொள்ள வளப்பருங்கரணங்க ளான்குஞ் சிந்தையேயா கக் குணமொருமூன்றுந் திருந்துசாத்துவிகமேயாக" என்னும் பெரியபுராணச் செய்யுளுக்குச் சொல்லிய பலவகையான அர்த் தங்களையும், வண்ணார்பண்ணைச் சிவன்கோயிலிலே கந்தபுராணத் துச் சூரபன்மன் வதைப்படலத்துக்குச் சொல்லிய அர்த்தத்தை யும் மிக வியந்து பலரும் பாராட்டுவர். இவருடைய பிரசங்கங் கள் பொழுதுபோக்குக்குக் கேட்கும் சில பிரசங்கங்கள்போலி ருக்கவில்லை. இவை கேட்டவர்களைக் கேட்ட பிரகாரம் நடக்கச் செய்யத்தக்க அவ்வளவு சாதுரியம் அமைந்தனவாயிருந்தன.

இவர் கடைசியாகப் பிரசங்கஞ் செய்தது யாழ்ப்பாணச் சைவப்பிரகாச வித்தியாசாலையில் பிரமாதிஸூ ஆடிமாசத்திற் சுந்தரமூர்த்திநாயனார் குருபூசைத் தினமாகிய சுவாதிநக்ஷத்திர த்திலன்றேயாம். பிரசங்கம் தொடங்கினதும் முடிந்ததும் சுவாதிநட்சத்திரங்களிலேயாம். அன்று எடுத்துக் கொள்ளப் பட்ட பீடிகை "பொன்னுமெய்ப் பொருளுந் தருவானை" என் னுஞ் சுந்தரமூர்த்திநாயனார் தேவாரமாம். பிரசங்கமுடிவிலே சனங்களை விளித்து, நான் உங்களிடத்துக் கைம்மாறு பெறு தலைச் சிறிதும் எண்ணாது முப்பத்திரண்டு வருஷகாலம் உங்க ளுக்குச் சைவசமயத்துண்மைகளைப் போதித்துவந்தேன். என க்குப் பின் சைவசமயங் குன்றிப்போமென்று பாதிரிமார்கள் சொல்லுகிறார்கள். ஆதலால் நான் உயிரோடிருக்கும்போதே உங் களுக்காக ஒரு சைவப்பிரசாரகரைத் தேடிக்கொள்ளுங்கள். இன்னும், என்னைப்போலப் படித்தவர்களும் சன்மார்க்கர்களு மாய் அநேகர் வருவார்கள். ஆனால் உங்களுடைய சைவுகளைக் கேட்டுக் கேட்டுக் கைம்மாறு கருதாது சமயத்தைப் போதிக்க

என்னைப்போல ஒருவரும் வரார். இதுவே என்னுடைய கடைசிப் பிரசங்கம். இனிமேல் நான் உங்களுக்குப் பிரசங்கம் பண்ணமாட்டேன் என்னுங் கருத்துப் புலப்பட விரித்துக் கூறினர். அன்றைப் பிரசங்கத்தைக் கேட்டுக் கண்ணீர் விட்டழாதவர் அங்கே ஒருவருமில்லை. வித்தியாசாலையிலுள்ள தூண்கள் மரங்கள் தாமும் உருகின. இதுவே இவருடைய கடைசிப் பிரசங்கம்.

மற்றை நாள், "சென்ற இரவு ஏன் இந்தப்பிரகாரம் பிரசங்கஞ் செய்தீர்கள்?" என்று அன்பரொருவர் கேட்ட போது தமக்கு அந்நேரம் ஒன்றுந் தெரியவில்லை என்றார்.

---

## ஐந்தாம் அதிகாரம்.

### வித்தியாசாலைத் தாபனம்.

முற்காலத்தில் யாழ்ப்பாணத்திலும் தென்னிந்தியாவிலும் உள்ள தமிழ்ப்பள்ளிக்கூடங்களெல்லாம், அங்கங்குள்ள ஒவ்வொருவராற் கொட்டில்களிலும் தெருத்திண்ணைகளிலும் வைத்துப் பிள்ளைகளிடஞ் சம்பளம் வாங்கிக்கொண்டு படிப்பிக்குமிடங்களாயிருந்தன. படிப்பிக்கப்படும் நூல்கள் சாமானியமான கருவிநூல்களும் நீதிநூல்களுமேயாம். சமயநூல்கள் அங்கே படிப்பிக்கப்பட்டதில்லை. தாம் கற்ற காலத்தில் அநுபவித்த கஷ்டங்கள் எப்போதும் இவருடைய மனசிலே நிலையாயிருந்தமையால், பலவிடங்களிலும் பள்ளிக்கூடங்கள் வைத்துப் பிள்ளைகளிடஞ் சம்பளம் வாங்காமற் படிப்பிக்கவேண்டும் என்கின்ற ஆசை இவருக்குத் தினந்தோறும் முறுகி வளர்ந்து கொண்டு வந்தது. அதனால், கலியப்தம் ௪௯௫௦-க்குச் சமமாகிய கிலகவருஷம் ஆவணிமீ ௰௨௨ சுக்கிரவாரமும் கிருஷ்ணபக்ஷ சதுர்த்தியும் இரேவதி நக்ஷத்திரமும் சூலநாம யோகமும் பாலவகரணமுங்கூடிய சுபதினத்திலே விருச்சிகலக்கினத்திலே,



... பல்கலைக்கழக ... நூலகம் ... MAR 1...

யாழ்ப்பாணத்திலே வண்ணார்பண்ணையில் சைவப்பிரகாசவித்தியாசாலை என்னும் பெயர் கொடுத்து, ஒரு வித்தியாசாலை தாபித்தார். அதன் இராசிசக்கரம் முதலியன:—

| | | | |
|---|---|---|---|
| கே சந் | | | |
| சனி | யாழ்ப்பாணச் சைவப்பிரகாச | | புத குரு |
| | வித்தியாசாலை இராசி சக்கரம். | | சூரி சு-செ |
| | லக் | | ராகு |

| | | | |
|---|---|---|---|
| | | சூரி | சனி |
| | யாழ்ப்பாணச் சைவப்பிரகாச | | சுக் கே |
| ராகு புத | வித்தியாசாலை அம்சசக்கரம். | | |
| லக் ச-கு | | செவ் | |

அக்காலத்தில் இவருடைய கையிற் பணமில்லாமையாற் பிடியரிசி தண்டிச் சேர்க்கும் பொருள்கொடுத்து, தம்மிடத்தே முன்கற்ற சதாசிவப்பிள்ளை முதலானவர்களை உபாத்தியாயர்களாக நியமித்து, ஒருவாறு அதனை நடத்திவந்தார். இப்படிப்பட்ட சமயத்திலே, ஒரு வர்த்தகசாலை விலைக்கு வாங்கத் தக்கதாக வந்தது. அதனை வித்தியாசாலைக்காக வாங்க விரும்பியும் போதிய பணம் கையிலில்லாமையால் மனம் வருந்திக்கொண்டிருக்குங் காலத்தில், ஒருநாள் பூசையிலே தமது உடையவரை நோக்கி அழுது ஒரு செய்யுள் சொன்னார். அச்செய்யுள் இது:

"மணிகொண்ட கடல்புடைகொ ளிந்நாட்டி லுன்சமய வர்த்தன மிலாமை நோக்கி, மகிமைபெறு நின்புகழ் விளக்குவான் கருதியிம் மைப்பொருட் பேறொ ழித்தே, கனிகொண்ட வித்தியா சாலைதா பித்திவ்வூர்க் கயவர்செயு மிடர்கள் கண்டுங், கல்லூரி யதைநடாத் தப்பொருட் டுணைசெயக் கருதுவோ ரின்மை கண்டும், அணிகொண்ட சாலைய தொழிப்பினஃ தனை யிகழு மந்நிய மதத்தர் சாலை, யீமமென நினைந்தெனெஞ் சற்பகற் றுயருற லறிந்துமொரு சிறிது மருளாத், திணிகொண்ட நெஞ் சவினி நின்முன்யா னுயிர்விடுத றிண்ணநீ யறியாததோ,

சிறியேன் தன்பிலர்ச் சனைகொளழ கியதிருச் சிற்றம் பலத் தெந் தையே."

கொழும்பிலுள்ள பிரபுக்களுள்ளே ஒளதாரியகுணத்திற் சிறப்புற்றோங்கிய இ. நன்னித்தம்பிமுதலியார் என்பவர் இவ் வித்தியாசாலைக்காக ௬00 ரூபா அனுப்பியிருந்தார். அந்தப் பணம் உடையவரை நோக்கி அழுது புலம்பின அன்றே வந்து சேர்ந்தது. அப்பணத்தை மூலமாக வைத்துக்கொண்டு அந்த வர்த்தகசாலையை வாங்கினார். தமது அவ்வித்தியாசாலையிற் படிப்பித்தற்காக நிகண்டு முதலிய கருவிநூல்களையும், தாம் எழுதிய பாலபாடங்களையும், சைவசமயசாரம், சிவாலயதரிசன விதி முதலிய சமயநூல்களையும் அச்சிடுவித்தார்.

அவ்வித்தியாசாலையிற் கற்றவர்களுள் வைத்தியலிங்கச் செட்டியாரென்பவர் மதுரையில் வித்தியா பரீக்ஷகராகச் சென்னை அரசினராலே நியமிக்கப்பட்டார். மற்றவர்களும் அப் படியே உபாத்தியாயர்களாகவும், இராசவுத்தியோகத்தர்களாக வும் நியமிக்கப்பட்டுப்போனார்கள். சைவப்பிரகாசவித்தியாசாலை என்னும் பெயரை இவரே முதல் உண்டாக்கினவர்.

திவ்விய க்ஷேத்திரமாகிய சிதம்பரத்திலே ஒரு பெரிய சைவவித்தியாசாலையும் மடமும் தாபிக்கக் கருதி ஸௌத் திரி ௵ வைகாசிமீ ஒருவிக்கியாபனம் எழுதித் தமது அபிப் பிராயத்தை வெளியிட்டார். அவ்விக்கியாபனம் வருமாறு:—

"யாதாயினும் ஒரு சமயத்தை மெய்யென்று நம்புகிறவன், அந்தச் சமயத்தின்வழி ஒழுகும் ஒழுக்கம் இல்லாதபொழுது, பயன் பெறுன். அந்தச்சமயத்துக்கு உரிய கடவுள் இவரென்பதும், அவ ருடைய இலக்கணங்களும், அவரால் விதிக்கப்பட்ட புண்ணியங் களும், விலக்கப்பட்ட பாவங்களும், அந்தப் புண்ணிய பாவங்களின் பலன்களாகிய சுகதுக்கங்களும், அவரை வழிபடும் முறைமையும், அந்த வழிபாட்டினாலே பெறப்படும் பிரயோசனமும், ஆகிய இவை களை அறியும் அறிவு உதியாதபொழுது, அந்த ஒழுக்கம் உண்டா

காது. சற்குருமுகமாக விதிப்படி பெறப்படுஞ் சமயநூற்கல்வி கேள்விகள் இல்லாத பொழுது, அந்த அறிவு உதியாது. ஆதலால், கல்வியும் அறிவும் ஒழுக்கமுமாகிய இந்த மூன்றும் வேண்டும். இது எல்லாச் சமயத்தாருக்கும் ஒத்த துணிவு.

கல்வி கேள்விகள் இல்லாதவர்கள் கடவுளை அறிந்து வழிபட்டு உய்யமாட்டார்களென்பது "கல்லார் நெஞ்சி னில்லா னீசன்." எ-ம். "கற்றல்கேட் டலுடை யார்பெரி யார்கழல் கையாற்றொழு தேத்த" ஏ-ம். "கல்லாதார் காண்டற் கரியானை" எ-ம். "கற்ற வர் தொழு தேத்துஞ் சீர்க்கறை யூரிற் பாண்டிக் கொடுமுடி நற்றவா" எ-ம். "கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியை கரையிலாக் கருணை மாகடலை - மற்றவ ரறியா மாணிக்க மலையை" எ-ம். வரும் உண்மை நாயன்மார் திருவாக்குக்களாலும் அறிக.

கிறிஸ்து சமயிகள் பெரும்பாலும் தங்கள் சமயநூலைத் தாங்கள் கற்றும், வெகு திரவியங்களைச் செலவழித்துப் பாடசாலைகளைத் தாபித்துப் பிறருக்குக் கற்பித்தும், தங்கள் ஆலயங்களிலும் பிற இடங்களிலும் யாவருக்கும் போதித்தும், வருகிறபடியினாலே, அவர்கள் சமயம் எத்தேசங்களிலும் வளர்ந்தோங்கி வருகின்றது.

நம்முடைய சைவ சமயிகள் சைவநூல்களைக் கல்லாமையினாலும், எங்கேயாயினும் சிலர் கற்றாலும், அவர்கள் பிறருக்குக் கற்பித்தலும் யாவரும் எளிதில் அறிந்து உய்யும்படி சமயாசாரங்களைப் போதித்தலும் இல்லாமையாலும், நமது சற்சமயமாகிய சைவசமயம் வரவரக் குன்றுகின்றது.

ஆதலால், நமது தமிழ்நாடெங்கும் பாடசாலைகளைத் தாபித்து, பிள்ளைகளுக்குச் சமயநூல்களையும், அவைகளுக்குவேண்டுங் கருவிநூல்களையும், "முனிவரும் மன்னரும் முன்னுவ பொன்னுன் முடியும்." எ-ம். "வறியார் இருமையறியார்," எ-ம். திருக்கோவையாரில் அருளிச்செய்தபடி இம்மை மறுமைப் பயன்களுக்குத் துணைக் காரணமாய் உள்ளபொருளை ஈட்டுதற்கு வேண்டும் லௌகிக நூல்களையும், கற்பித்தலும், திருக்கோயில்கள்தோறும், சனங்களுக்குச் சமயநெறியைப் போதிப்பித்தலும், மிக மேலாகிய புண்ணியங்களாம்.

எல்லாத் தருமங்களையும் அறிந்து விதிப்படி சிரத்தையுடனே செய்து பயன்பெறுதற்குச் சமயநூலுணர்ச்சியே ஏதுவாதலால், அப்படிப்பட்ட சமயநூலுணர்ச்சியை வளர்த்தலாகிய இந்தத் தருமமே எல்லாத் தருமங்களிலும் மிக மேலானது என்பதும், எல்லாத் தருமங்களுக்கும் மூலம் என்பதும், சொல்லவேண்டுமா!

வேதாகமங்களை ஓதுதலும், அறிவுநூல்களைப் பிறருக்கு விரித்துணர்த்துதலும், தருமங்களை எடுத்துப் போதித்தலும், பள்ளிக்கூடங் கட்டுதலும் பெரும்புண்ணியங்கள் என்பது ஞானமிர்தம் என்னும் ஞானநூலில் வகுத்துச் சொல்லப்பட்டது.

இன்னும், கன்மயாகம், தபோயாகம், செபயாகம், தியானயாகம், ஞானயாகம் என ஐவகை யாகங்கள் உண்டு. அவைகளுள், கன்மயாகமாவது சிவனை விதிப்படி பூசித்து அக்கினிகாரியம் முதலியன செய்தல்; தபோயாகமாவது சரீரம் வாடச் சாந்திராயணம் முதலிய விரதங்களை அனுட்டித்தல்; செபயாகமாவது மந்திரங்களை விதிப்படி உச்சரித்தல்; தியானயாகமாவது மனசை வேறொரு விடயத்திலும் பொருந்தாதவண்ணம் நிறுத்திச் சதாசிவாதி விக்கிரகங்களை அன்பினாலே தியானித்து, அந்தத்தியானத்திலே இடைவிடாது கலந்துநிற்றல்; ஞானயாகமாவது சிவனை அறிவிக்கும் திவ்வியாகமங்களைத் தாம் ஓதுதலும் பிறரை ஓதுவித்தலும், அவைகளிலே சொல்லப்படும் பொருளைத் தாம் தெளிதலும், பிறரைத் தெளிவித்தலும், அந்தப்பொருளை நாடோறும் மறவாமல் மனசிலே தரித்தலுமாம். இந்த ஞானயாகமே பக்குவான்மாக்களுக்கு வைப்புமாய்ப் பிறவிநோய்க்கு மருந்துமாய், உயர்வொப்பின்றி நிற்குந் தலைமையுடையது. இதற்குப் பிரமாணம்: சிவதருமோத்தரம் மூன்றாவது ஐவகையாகவியல். "கரும மென்று தவமென்று கற்பாற் பயின்மந் திரமென்று - பரிவால் வருபா வனையென்று பரம ஞானமகமென்று - தெரியு மகமோ ரைந்தினையுஞ் சிறந்த விவற்றின் பலத்தினையும் - பரம யோகர் நிலையுடனே பரிவான் முனிவ பகர்வாமே. செய்து சிறக்கச் சிவபூசை செந்தீ வளர்க்கை முதல்கருமம் - நையவுடலம் விரதத்தை நவிற்ற லாதிதவஞ்செபமும் - பையப் பயிற்றல் பிறர்செவியிற் படாது பயிற்றின் மந்திரத்தை - மைய லகல மனத்தாலும் வகுக்கை யென்மூ வகைத்தாமே. பற்றிப் பரமன் திருவுருவைப் பரிவாலொருமைப் படவுள்ள - மற்றோர் பொருளின்

மன்பற்று வண்ணந் தின்ன முறமயக்க - மற்றே தொடர்ந்து விச்சின்ன மடையா வறிவு பாவனைநீ - ரெற்றே யொழுகு மிறை வன்பா லற்றே யஃதென் றெண்ணுகவே. ஒப்பி லமலன் றனையு ணர்த்து முறைமையையோத, லோதுவித்தல் - செப்பும் பொருளைத் திரிவறத் தெளிகை பிறரைத் தெளிவிக்கை - தப்பா ததனை மனத் தகத்தே தரிக்கை யெனவுந் தானெந்தாம் - வைப்பா யருந்தா மீருந் தாகிச் சிறந்த ஞான மகவினையே." எனவரும்.

எல்லாத் தருமங்களுக்கும் மூலமாய், அவ்வெல்லாத் தருமங் களையும் தன்னுள் அடக்கி, அவ்வெல்லாத் தருமங்களுக்கும் மேற் பட்டு விளங்கும் இச்சிவதருமம் நமது தமிழ்நாடெங்கும் வளர்ந் தோங்கல் வேண்டும் என்னும் பேராசையானது என்சிறுவயசில் என்னுள்ளத்திலே தோன்றி நாடோறும் பெருகிப் பெருகி, இப் பொழுது அவ்வுள்ளத்தை விழுங்கித் தான்மேற்கொண்டு நிற்றலால், நான் என்மென்மையை நினைந்து நினைந்து தடைப்படாமல், உயிர்க் குயிராகிய சிவனது வன்மையை "ஆட்டுவித்தா லாரொருவ ராடா தாரே - யடக்குவித்தா லாரொருவ ரடங்கா தாரே, யோட்டுவித்தா லாரொருவ ரோடா தாரே-யுருகுவித்தா லாரொருவ ருருகா தாரே, பாட்டுவித்தா லாரொருவர் பாடா தாரே-பணிவித்தா லாரொருவர் பணியா தாரே, காட்டுவித்தா லாரொருவர் காணா தாரே-காண்பார் யார் கண்ணுதலாய் காட்டாக் காலே." என்னும் அருமைத் திரு வாக்கு வழியாக நினைந்து நினைந்து, அவருடைய திருவடியை முன்னி ட்டு நின்று, முன்னே, சிவஸ்தலங்கள் எல்லாவற்றுள்ளும் மிகமே லாகி, எல்லார்க்கும் பொதுவாயுள்ள சிதம்பரத்திலே சில முயர்ச்சி கள்செய்யக் கருதுகின்றேன். அவைகள் வருமாறு:—

க. சிதம்பரத்திலே திருவீதியில் விசாலமாகிய ஒருநிலம் வாங்க வேண்டும்.

உ. இந்த நிலத்திலே ஒரு பாடசாலையும், பூசைக்கட்டு, சாத்தி ரக்கட்டு, சமையற்கட்டு என மூன்றுகட்டுள்ள ஒரு திருமடமும் கட்டுவிக்கவும், சிவபூசைக்கு உபயோகமாகும்பொருட்டு ஒரு சிறு திருநந்தனவனம் வைக்கவும் வேண்டும்.

௩. இந்தப் பாடசாலையிலே கல்வியறிவொழுக்கங்களிற் சிறந்த உபாத்தியாயர்களை நியோகித்து, பிள்ளைகளுக்குப் பாலபாடங்கள்,

நிகண்டு, திருவள்ளுவர் முதலிய நீதிநூல்கள், சிவபுராணங்கள், இலக்கணம், கணிதம், தருக்கம், வெளிப்படையாகிய வசனநடையிற் செய்யப்பட்ட சைவசமயநூல்கள், பூகோளநூல், ககோளநூல், வைத்தியம், சோதிடம், வேளாண்மைநூல், வாணிகநூல், அரசநீதி, சிற்பநூல் முதலானவைகளைப் படிப்பிக்கவேண்டும்.

௪. சாமர்த்தியர்களாகிய ஓதுவார்களை நியோகித்து, சில பிள்ளைகளுக்குத் தேவாரமும் திருவாசகமுமாகிய தமிழ்வேதத்தைப் பண்ணுடன் ஓதவும், சுத்தாங்கமாக ஓதவும், பழக்குவிக்கவேண்டும்.

௫. திருக்கோயிலிலேனும் திருமடத்திலேனும், நாடோறும் இரவிலே, கேட்போர் யாவருக்கும் பயன்படும்பொருட்டு, இந்த உபாத்தியாயர்களைக்கொண்டு, பெரியபுராணம், திருவிளையாடற் புராணம், திருவாதவூரடிகள்புராணம், கோயிற்புராணம், கந்தபுராணம், உபதேசகாண்டம், வாயுசங்கிதை முதலிய சிவபுராணங்களையும், சிவதருமோத்தரத்தையும், படித்துப் பொருள் சொல்லுவிக்க வேண்டும்.

௬. சாயங்காலத்திலே, சிவதரிசனம் பண்ணுகிறவர்களுக்குச் சிவபத்திவிளையும்வண்ணம், இந்த ஓதுவார்களைக்கொண்டு சிவசந்நிதானத்திலே தேவாரத்தைப் பாடுவிக்கவும், சாரங்கியில் வாசிப்பிக்கவும் வேண்டும்.

௭. தமிழ்நாட்டார் உய்யும்வண்ணம், தமிழ்வேதஞ்செய்தருளிய திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் முதலிய சமயகுரவர் நால்வருக்கும் பெரியபுராணஞ்செய்தருளிய சேக்கிழார் நாயனாருக்கும், தமிழ்ச்சித்தாந்தஞ் செய்தருளிய மெய்கண்டதேவர் முதலிய சந்தான குரவர் நால்வருக்கும், இந்தத் திருமடத்திலே வருடந்தோறும், அவரவர் பரிபூரணத்தசையடைந்தருளிய திருநக்ஷத்திரத்திலே குருபூசைசெய்து, அவரவர் மகிமையை யாவருக்கும் விரித்துரைக்கவேண்டும்.

௮. இந்தப்பாடசாலையிலே கற்றவர்களுள்ளும், பிறருள்ளும், கல்வியறிவொழுக்கங்களிற் சிறந்த பரிபக்குவர்களுக்குச் சைவாசாரியரைக்கொண்டு நிருவாணதீக்ஷை செய்வித்து, இந்தத் திருமடத்திலே ஞானநூல்களாகிய சைவசித்தாந்த சாத்திரங்களைப் படிப்பிக்கவேண்டும்.

கூ. சிதம்பராலயத்திலே கட்டளைவைத்திருக்கும் மகிமைபொருந்திய மடாதிபதிகளும், பிரபுக்களும், நாடோறும் தங்கள் தங்கள் கட்டளையன்னத்திலே சிறிது இந்தத் திருமடத்துக்குக் கொடுப்பிப்பார்களாகில், அந்த அன்னத்தை இங்கே படிக்கும் துறவிகளுக்கும் வித்தியவர்களுக்கும் உபயோகப்படுத்தவேண்டும்.

ய. இங்கே படிக்கும் மாணாக்கர்கள் கற்ற கல்வியை, வருஷந்தோறும் மடாதிபதிகளும் வித்துவான்களும் பிரபுக்களும் கூடிய சபையிலே, பரீக்ஷை பண்ணவேண்டும்.

யக. வருஷந்தோறும் இந்தத் தருமத்தின் வரவு செலவு கணக்கும், இது நடத்தப்படுங் கிரமமும், பிறவும், விரமாய் அடங்கிய அறிவிப்பை இந்தச் சபையார்முன் படித்து, பின்பு அச்சிற்பதிப்பித்து, எங்கும் பிரகடனஞ் செய்யவேண்டும்.

யஉ. இந்தப் பாடசாலையிலே சிலகாலங் கற்றுக்கொண்டு போய் இங்கிலீசு கற்பவர்களுள்ளும், லௌகிகங்களிலே பிரவேசித்தவர்களுள்ளும், தங்களுக்கு ஒழிவுள்ள காலத்திலே வந்து யாதாயினும் கற்கவிரும்புகிறவர்களுக்குக் கற்பிக்கவேண்டும்.

யங. இங்கே கற்றுத் தேர்ந்த மாணாக்கர்களை, இந்தச்சபையாருக்கு முன்னே பரீக்ஷைசெய்து, சீற்றுவல்லர்களென நன்குமதிக்கப்பட்டவர்களுக்கு, அவரவர் தகுதிக்கு ஏற்ற பெயரும் சின்னமும் கொடுக்கவேண்டும்.

யச. இப்படிக் கல்வியறிவொழுக்கங்களால் நன்குமதிக்கப்பட்டவர்களுள், தங்கள் வாழ்நாளைப் பிறருக்குப் பயன்படும் வண்ணம் போக்கல்வேண்டுமென்னுங் கருத்துடையவர்களைச் சிதம்பர சபாநாதர் சந்நிதியிலே சங்காபிஷேகஞ் செய்வித்து, சைவப் பிரசாரகர்களாக நியோகித்து, அவரவர் தகுதிக்கு ஏற்ற சம்பளம் நியமித்து, தமிழ்நாட்டில் உள்ள ஊர்கள்தோறும் அனுப்பி, அவர்களைக்கொண்டு அங்கங்கு உள்ள திருக்கோயில்களிலே சனங்களுக்குச் சமயநெறியைப் போதிப்பிக்கவேண்டும்.

இந்த நன்முயற்சிகளை விரைவிலே தொடங்கி இடையூறில்லாமல் நடத்துகில், நம்மது தமிழ்நாடெங்கும் சைவசமயம் தழைத்து இனிதோங்கும்; ஒங்கில், அநேகர் பரமபதியாகிய சிவனது மகிமை

யையும், புண்ணிய பாவங்களையும், அவைகளின் பலன்களையும் அறிந்து, பாவங்களை ஒழித்து, புண்ணியங்களைச் செய்து, அவரை மெய்யன்போடும் விதிப்படி வழிபட்டு, நித்தியானந்த முத்தியை அடைவார்களே!

நமது சற்சமயமாகிய சைவசமயம் குன்றுகின்றதே என்றும், இச்சமயத்தை வளர்த்தற்குவேண்டும் முயற்சிகளைச் செய்யவேண்டுமே என்றும், அவைகளுக்கு உதவிசெய்பவர்கள் இல்லையே என்றும், ஐயையோ இதற்கு என்னசெய்வேன் என்றும், நெடுங்காலமாக இரவும் பகலும் நினைந்து நினைந்து பெருமூச்செறிதலும் மனுருக்குப் பிதற்றுதலுமே தொழிலெனக்கொண்ட என் உண்மையை நெடுங்காலமாக அறிந்திருக்கின்ற என்னிஷ்டர்களும் மாணுக்கர்களும், இந்தச் சிவபுண்ணியத்தின்பொருட்டு, இப்பொழுது தங்கள் தங்களால் இயன்ற பொருளுதவி செய்யும்பொருட்டும், தங்கள் தங்கள் சீவனோபாயம் உள்ளவரையும் காலந்தோறும் யாதாயினும் நிபந்தத் திரவியம் கொடுத்துவரும்படி சங்கற்பித்து, அந்தச்சங்கற்பம் தவறாமல் நடத்தி வரும்பொருட்டும், "வேண்டுவார் வேண்டியதேயீ" யும் பரமகருணாநிதியாகிய நடேசர் அவர்கள் உள்ளத்தைக் கனிவித்தருளுவரென்று விசுவசிக்கின்றேன். என்னுண்மையை அறியாத மற்றவர்களுக்கு இந்தச் சிவபுண்ணிய முயற்சிகளைத் தெரிவித்தல் மாத்திரஞ் செய்கிறேன். இதற்கு உதவி செய்யும்படி அவர்களை நான் இப்போது கேட்பதில்லை. அவர்கள் தாமே இதற்கு உதவி செய்வார்களாகில், அவர்களைத் தடுப்பதுமில்லை.

இதற்கு உதவப்படும் பொருளை வட்டிக்குக் கொடுத்துவைத்து, சிதம்பரத்திலே திருவீதியில் ஒருநிலம் வாங்கத்தக்கபொருள் சேர்ந்தவுடனே, நிலம் வாங்கிக்கொண்டு, பாடசாலையைக் கட்டுவித்து, பிள்ளைகளைப் படிப்பித்தும், தமிழ்வேதம் ஓதுவித்தும், சிவபுராணப் பிரசாரம் செய்வித்தும் வரலாம்.

பின்பு இந்த நன்முயற்சியைச் சிதம்பரதரிசனத்துக்கு வந்தபோது கண்டறிந்தவர்களுள்ளும், அவர்களாலே கேள்வியுற்றறிந்தவர்களுள்ளும், புண்ணியவான்களாயுள்ளவர்கள் தங்கள் தங்களால் இயன்ற பொருளுதவிசெய்து, இந்நன்முயற்சியைக் குறைவற

நிறைவேற்றி, நமது சைவசமயத்தை வளர்ப்பார்களென்று நம்புகிறேன்.

ஆதலால். இப்பொழுது பொருளுதவிசெய்து, இந்த நன்முயற்சியைத் தொடங்கும்படி செய்கிறவர்கள், இதனது நயத்தைப் பின்பு அநேகர் கண்டுங் கேட்டும், பொருளுதவிசெய்து, இதை நிறைவேற்றி வளர்ச்செய்தற்குக் காரணர்களாய் இருத்தலால், அவர்கள் அடையும் புகழினும் மறுமையின்பத்தினும் பார்க்கப் பெரும் புகழையும் பேரின்பத்தையும் அடைவார்களென்பதற்குச் சந்தேகம் இல்லை.

சைவசமயத்தை வளர்க்குங் கடமையையும் அதற்குவேண்டும் பெரும் பொருளையும் உடைய மகிமைபொருந்திய மடாதிபதிகளும், தமிழ்நாடெங்கும் உள்ள அறிவொழுக்களிற் சிறந்த பிரபுக்களும், இக்காலத்திலே சிவபுண்ணியங்களில் மிக்க முயற்சியும் ஒற்றுமையும் பொருட்செல்வும் உடைய நாட்டுக்கோட்டையார்களும், வருஷந்தோறும் திருக்கோயில்களிலே பெரும்பொருள் செலவிட்டுச் சிவபுராணங்களை நியமமாகக் கேட்போர்களாயும் சிதம்பர சபாநாதர் மேல் மிக்க பத்தியுடையவர்களாயும் உள்ள நமது யாழ்ப்பாணத்தார்களும், இந்தச் சிவபுண்ணியத்தின் பெருமையை அறிந்து, இதற்கு உதவி செய்வார்களாயின், இது எவ்வளவு தழைத்தோங்கும்!

அன்னதானம் முதலிய தானங்களைச் சற்பாத்திரத்திலே செய்வது புண்ணியம்; அசற்பாத்திரத்திலே செய்வது பாவம். சற்பாத்திரங்களுள்ளும், கரும யாகஞ்செய்வோர்க்குக் கொடுத்தது ஒரு பிறப்பளவு நிற்கும்; தபோயாகஞ் செய்வோர்க்குக் கொடுத்தது நூறுபிறப்பளவு நிற்கும்; செபயாகஞ் செய்வோர்க்குக் கொடுத்தது ஆயிரம்பிறப்பளவு நிற்கும்; தியானயாகஞ் செய்வோர்க்குக் கொடுத்தது கற்பமளவு நிற்கும்; ஞானயாகஞ் செய்வோர்க்குக் கொடுத்தது மகாசங்கார காலமளவு நிற்கும். இதற்குப் பிரமாணம். சிவதருமோத்தரம். நான்காவது பலவிசிட்ட காரணவியல். "கருமிகட்கீகை நிற்குங் கலந்தொரு பிறப்பிற் கற்ற - பெரியராந் தவத்தோர்க்கீகை பிறப்பொரு நூறு நிற்கு - மரியமந் திரத்தார்க்கீகை யாயிரம் பிறப்பு நிற்கு - மரியயோ கிக்கு ஞானிக் கூழியே, மூழி நிற்கும்." எனவரும்.

ஆதலால், அன்னதானஞ் செய்யும் பிரபுக்கள், இந்தச் சிவதருமம் நடந்து வரும்பொழுது, இந்தத் திருமடத்திலே சமய சாத்திரங்களைப் படிக்குந் துறவிகளுக்கும் வறியவர்களுக்கும் அன்னதானம் பண்ணுவார்களாயின், அது எவ்வளவு பெரும் புண்ணியமாகும்! அப்புண்ணியம், அநேகர் இடையூறில்லாமல் சமய சாத்திரங்களைக் கற்று வல்லவர்களாகி, தாங்கள் உய்தற்கும், தமிழ்நாடெங்கும் ஊர்கள்தோறும் திருக்கோயில்களிலே அநேக சனங்களுக்குச் சமய நெறியைப் போதித்து, அவர்களை உய்வித்தற்கும், ஏதுவாகுமல்லவா? இதை யாவரும் சித்தசமாதானத்தோடு சிந்திக்கக் கடவர்கள்.

* * * * *

சிவதருமோத்தரம் எட்டாவது சனனமரணவியல்.

பாம்பழல் வாயினுற் பற்ற மண்டுகந்
தேம்பிடுந் துயருறுஞ் சீவன் றேயுநாள்
ஓம்பிட வல்லரோ வுற்ற மற்றையார்
போம்பொழு தருந்துணை புரிந்த புண்ணியம்.

திருவள்ளுவர்குறள்.

அன்றறிவா மென்னா தறஞ்செய்க மற்றது
பொன்றுங்காற் பொன்றாத் துணை.

திருச்சிற்றம்பலம்.

சென்னபட்டணம்
ரௌத்திரி ஹு
வைகாசி மீ உ௪ வ

இங்ஙனம்,
யாழ்ப்பாணம்,
நல்லூர் - ஆறுமுகநாவலர்."

இந்த விக்கியாபனத்திற் சொல்லப்பட்டபிரகாரம் நடத்துதற்குப் போதிய பொருள் சேராமையினால், யாழ்ப்பாணத்தவர்கள் உபகரித்த சொற்ப பொருள்கொண்டு யாழ்ப்பாணத்திலுள்ள வித்தியாசாலைபோல ஒரு வித்தியாசாலை சிதம்பரத்திலும் இரத்தாக்ஷி ஹு ஐப்பசி மீ உ௮ வ தாபித்தார். அதன் இராசிசக்கரம் முதலியன:—

| | | | |
|---|---|---|---|
| சந் | கேது | செவ் | |
| | சிதம்பர சைவப்பிரகாச வித்தியாசாலை இராசிசக்கரம். | | |
| | | | |
| | லக் குசுபு | சூரிய சனி-ரா | |

| | | | |
|---|---|---|---|
| சுக் | | | சூரி |
| ராகு | சிதம்பர சைவப்பிரகாச வித்தியாசாலை அம்சசக்கரம். | | புத |
| | | | செவ் கே |
| | | குரு சனி | |

இந்த இரண்டு வித்தியாசாலைகளாலும் உண்டாகிய பயனைக் கண்டு, மாயூரம் வேதாரணியம் முதலிய ஸ்தலங்களிலும் ஒவ்வொரு வித்தியாசாலை தாபிக்க வேண்டுமென்கின்ற ஆசை கொண்டார். அவற்றிற்கு உபாத்தியாயர்களாகத் தக்கவர்களை முதலிற் சேர்த்துக் கற்பித்தற்குச் சிதம்பரத்திலே தாம் முன் தாபிக்கக் கருதிய பெரிய வித்தியாசாலையைத் தாபிக்க விட்டும் ஆசைகொண்டு, விபவ வருஷத்திலும் பிரமோதூத வருஷத்திலும் இரண்டு விக்கியாபனங்கள் எழுதி வெளியிட்டார். அந்த விக்கியாபனங்கள் இவை:—

"நான் ஜயவருஷ முதலாகப் பீற்றர் பார்சிவல் துரையுடைய இங்கிலிஷ் வித்தியாசாலையிலே இங்கிலிஷ் கற்றேன். பிலவருஷ பார்சிவல் துரைக்குத் தமிழ்ப்பண்டிதனாயினேன். பிதிரார்ச்சிதம் நான் பெறவில்லை; என்னுடைய தமையமார்கள் நால்வரும் இயன்றமட்டும் பொருளும் உத்தியோகமும் உடையவர்களாயிருப்பவும், அவர்கள் பொருளுதவியும் நான் பெறவில்லை. இங்ஙனமாகவும், மேற்கூறப்பட்ட விருத்தியை நான் கீலகவருஷ புரட்டாதிமீ பரித்தியாகஞ்செய்தேன். பார்சிவல் துரை "நான் தங்களுக்கு உயர்வாகிய வேதனம் தருவேன்; தாங்கள் என்னை விடலாகாது" என்று பலதரம் வற்புறுத்திச் சொல்லியவழியும், நான் அவ்விருத்தியில் விருப்பம் வைக்கவில்லை. நான் இங்கிலிஷிலே அற்பவிற்பத்தியாயினும் பெற்றிருந்தும், என்னோடு இங்கிலிஷ் கற்றவர்களுள்ளும் எனக்குப் பின் இங்கிலிஷ் கற்றவர்களுள்ளும் அநேகர் தங்கள் தங்கள் சத்திக்கேற்ற உத்தியோகம் பெற்று வாழ்ந்திருக்கக் கண்டும், நானும் என்சத்திக்கேற்ற உத்தியோகத்தின்பொருட்டு முயற்சி செய்யின்

அது தப்பாது சித்திக்கும் என்றறிந்தும், அஃதில்லாமையால் விளையும் அவமதிப்பைப் பார்த்தும், உத்தியோகத்தை விரும்பவில்லை. தமிழ்க்கல்வித் துணைமாத்திரங்கொண்டு செயப்படும் உத்தியோகம் வலிய வாய்த்த பொழுதும், அதையும் நான் விரும்பவில்லை. கன்னியை நாயகனிடத்து ஒருதுட்டாயினும் வாங்காது வீடு விளைநிலம் தோட்டம் ஆபரணம் முதலியவற்றோடு விவாகஞ்செய்து கொடுக்கும் வழக்கமேயுடையது என் சென்மதேசமாகவும், நான் இல்வாழ்க்கையிலே புகவில்லை. இவைகளெல்லாவற்றிற்குங் காரணம் சைவசமயத்தையும் அதன்வளர்ச்சிக்குக் கருவியாகிய கல்வியையும் வளர்த்தல்வேண்டும் என்னும் பேராசையேயாம்.

இப்பேராசையினால் இருபதுவருஷகாலம் நான் செய்த முயற்சிகள் பல; அவைகளுள்ளே சித்தி பெற்றவை மிகச் சில. சைவசமயிகள் யாவரும் சைவசமயத்திலே சிரத்தையுடையர்களாகித் தங்கள் தங்களால் இயன்ற உதவி செய்தார்களாயின், நான் எடுத்த முயற்சிகளெல்லாம் இதற்கு முன்னரே நிறைவேறிவிடும்; நிறைவேறின், என்னைப் போலவே பிறரும் அங்கங்கே நன்முயற்சிகளைச் செய்வர்கள்; செய்யிற் கல்வியும் சமயமும் தழைத்தோங்கும்.

தன்னிம்மைப்பயன்களெல்லாம் இழந்தும் கைம்மாறு வேண்டாதும் இருபதுவருஷகாலம் சுவசமயவிருத்தியின்பொருட்டு முயற்சி செய்பவன் ஒருவன் மற்றைச்சமயத்தார்களுள் இருப்பானாயின், அவன் எடுத்த முயற்சிகளுள் யாது சித்தி பெறாது. நம்முடைய சைவசமயிகள், தங்கள் சமயமும் பாஷையும் விருத்தியடையும்பொருட்டு நான் செய்யும் முயற்சிகளுக்கு உதவிசெய்யாமை மாத்திரையின் அமையாது, பெரும்பான்மையும் அவமதிப்பும் இடையூறுமே செய்கின்றார்கள். இதனால் எனக்கு யாதாயினும் ஓர் குறைவு உண்டு என்னுங் கவலை எனக்குச் சிறிதும் இல்லை. எனக்குச் செயப்படுவனவற்றைக் காணுந்தோறும் கேட்குந்தோறும், பிறருக்குத் தமிழ் கற்றலின்கண்ணும் தமிழ்க்கல்வியையும் சைவசமயத்தையும் வளர்த்தலின்கண்ணும் ஊக்கங்கிளராவண்ணம் தடைவிளைகின்றதே என்னுங்கவலை எனக்குப் பெரிதுமுண்டு. பூர்வகாலத்திலே சைவசமயவிருத்திப்பொருட்டு முயன்ற பெரியோர்களுக்குச் சுவசமயிகளாலே நன்குமதிப்பும் பரசமயிகளாலே இடை

யூறும் செயப்பட்டன. தற்காலத்திலே சைவசமயவிருத்திப்பொருட்டு முயலும் சிறியேனுக்குச் சுவசமயிகளாலேயே அவமதிப்பும் இடையூறும் செயப்படுகின்றன. பரசமயிகளோ எனக்கு இடையூறு செய்யவுமில்லை, என்னை அவமதிக்கவுமில்லை. இஃதென்னையாச்சரியமே!!! சைவசமயவிருத்திப்பொருட்டு முயலும் எனக்கு நம்மவர்களாலே அவமதிப்பும் இடையூறும் செயப்பட்டபோது, நான் தமிழ்க்கல்வியிலும் தமிழ்க்கல்வியையும் சைவசமயத்தையும் வளர்த்தற்கு வேண்டும் முயற்சிகளிலும் போக்குங்காலத்தை முன் பயின்ற இங்கிலிஷிலேயே போக்கி உத்தியோகமும் செல்வமும் பெற்று நம்மவர்களாலே நன்குமதிக்கப்படல்வேண்டும் என்று விரும்பாவண்ணம் திருவருள் சுரந்த சிவபெருமானது பெருங்கருணைத்திறத்தை மறவாதிருத்தலே எனக்கு வாய்ப்புடைத்தாயதோர் பெருஞ்செல்வம். இஃதிங்ஙனமாக.

நிலையில்லாத என்சரீரம் உள்ள பொழுதே என்கருத்து நிறைவேறுமோ நிறைவேறாதோ என்னுங்கவலை என்னை இரவும் பகலும் வருத்துகின்றது. அக்கருத்து இது. தமிழ்க்கல்வியும் சைவசமயமும் அபிவிருத்தியாதற்குக் கருவிகள் முக்கியஸ்தலந்தோறும் வித்தியாசாலை தாபித்தலும் சைவப்பிரசாரணஞ் செய்வித்தலுமேயாம். இவற்றின்பொருட்டுக் கிரமமாகக் கற்று வல்ல உபாத்தியாயர்களும் சைவப்பிரசாரகர்களும் வேண்டப்படுவர்கள். ஆதலினாலே, நல்லொழுக்கமும் விவேகமும் கல்வியில் விருப்பமும் இடையறு முயற்சியும் ஆரோக்கியமும் உடையர்களாய்ப் பரீக்ஷிக்கப்பட்ட பிள்ளைகள் பலரைச் சேர்த்து, அன்னம் வஸ்திரம் முதலியவை கொடுத்து, உயர்வாகிய இலக்கணவிலக்கியங்களையும் சைவசாத்திரங்களையுங் கற்பித்தல்வேண்டும். அவர்களுள்ளே தேர்ச்சியடைந்தவர்களையே உபாத்தியாயர்களாகவும் சைவப்பிரசாரகர்களாகவும் நியோகிக்கலாம்.

இதன்பொருட்டு ஏறக்குறைய மாசம் ஒன்றுக்குச் செல்லத்தக்க செலவு வருமாறு:—

போசனம், விளக்கெண்ணெய், க்ஷௌரம்,
வஸ்திரம், புத்தகம் இவற்றின்பொருட்டுப்
பிள்ளை - க இ க௨ ௫ வீதம் பிள்ளைகள் க00 இ ரூபா ௫00

| | | |
|---|---|---|
| முதற்றமிழுபாத்தியாயர் வேதனம்............ | ,, | ௫0 |
| இரண்டாந்தமிழுபாத்தியாயர் வேதனம்......... | ,, | ௩0 |
| மூன்றாந்தமிழுபாத்தியாயர் வேதனம்......... | ,, | ௨0 |
| சமஸ்கிருத உபாத்தியாயர் வேதனம்.......... | ,, | ௨0 |
| சிவாகமபண்டிதர் வேதனம்................. | ,, | ௨0 |
| ஓதுவார் வேதனம்........................ | ,, | ௪0 |
| இலேககர் வேதனம்........................ | ,, | ௭ |
| கணக்கப்பிள்ளை வேதனம்.................. | ,, | ௫ |
| சேவகன் வேதனம்......................... | ,, | ௫ |
| தோட்டக்காரன் வேதனம்................... | ,, | ௩ |
| புத்தகாதி சம்பாதனம்.................... | ,, | ௩0 |
| | ஆக ரூபா | ௭00 |

இவ்வுத்தமோத்தம தருமத்தின்பொருட்டு எண்பதினாயிரம் ரூபா வேண்டும். எழுபதினாயிரம் ரூபாவைக்கொண்டு நீர்ப்பாய்ச்சலுள்ள நல்ல கிராமம் வாங்கிவிடல்வேண்டும். பதினாயிரம் ரூபாவைக்கொண்டு வித்தியாசாலையும் மடமுங் கட்டுவித்தல்வேண்டும். நம்மவர்கள் பலர் சிறிது சிறிதாக உபகரிப்பினும், "ஆயிரமாகாணி அறுபத்திரண்டரை" என்றபடி இத்தொகை சேர்ந்துவிடும். இத்தொகை சேராதொழியினும், சேர்ந்த தொகைக்கிசையவாயினும் நடத்தலாமே. சைவசாத்திரங்களைக் கற்போரும், கற்பிப்போரும், அவர்களுக்கு அன்னம் வஸ்திரமுதலியவை கொடுப்போரும், சைவாகமவுணர்ச்சி நிலைபெறும்பொருட்டுத் தனராசிகளையும் பூமிகளையுங் கொடுப்போரும் பெறும்பயன், சுப்பிரமணியக்கடவுள் அகத்திய மகாமுனிவருக்கு உபதேசித்தருளிய சிவதருமோத்தரம் என்னும் உபாகமத்திலே, சொல்லப்பட்டிருக்கின்றது.

இதுவே எல்லாத்தருமங்களுக்கும் மூலமாகிய உத்தமோத்தம தருமம் என்பது சாத்திரம் யுத்தி அநுபவம் என்னும் மூன்றுக்கும் ஒத்த துணிவு. இது ஒருவராலும் மறுக்கப்படமாட்டாது. இது சத்தியமே எனக் கொள்ளினும், இத்தருமத்தை நடத்துதற்கு நான் யோக்கியனல்லேன் என்னுங் கருத்து அநேகருக்கு உண்டு. அக்கருத்துடையவர்கள் தாங்களே நடத்தக்கடவர்கள்; அது கூடாத வழி யோக்கியராகிய பிறரைக்கொண்டாயினும் நடத்துவிக்கக்கட

வர்கள். இத்தருமத்தை நானே நடத்தல்வேண்டும் என்னுங்கருத்து எனக்கு இல்லை. "யாவர் குத்தினும் அரிசியானாற்போதும்" என்ற படி யாவர் நடத்தினும் இத்தருமம் நிறைவேறினாற்போதும் என் பதே என்கருத்து.

மேற்கூறியபடி ஒருவித்தியாசாலை நடத்தப்படுமாயின், அதிலே தேர்ச்சியடைந்தவர்களைத் திருக்கோயிலதிகாரிகளெல்லாரும் தங்க ளாலே நடத்தப்படுந்திருக்கோயில்களிலே சைவப்பிரசாரகர்களாக நியோகித்து, அவர்களைக்கொண்டு சனங்களுக்குச் சைவசமயத் தைப் போதிப்பிக்கலாமே. தேவாலயந்தோறும் சனங்களுக்குச் சைவசமயத்தைத் தேசபாஷைகளிலே போதித்தல்வேண்டும் என்று காமிகாகமத்திலே சிவபெருமானால் விதிக்கப்பட்டிருக்கின்றது. நம் முடைய சைவமடாதிபதிகள், இவ்வுண்மையை அறிந்திருந்தும், தங்களால் நடத்தப்படுந் திருக்கோயில்களிலாயினும் சைவப்பிர சாரணம் நடத்தியருளாததென்னையோ! அவர்கள் செய்தருளின், அது கண்டு பிறரும் அவ்வாறு செய்வார்களே. இங்ஙனஞ்செயப் படிற் சற்சமயமாகிய சைவசமயம் எங்கும் தழைத்தோங்குமே. இதனை எட்டுணையும் சிந்திப்பார் இல்லையே! ஏழை சொல் அம்பலத் துக்கேறுமா!!!

இது அவசியஞ் செயற்பாலதாகிய பரமதருமம் என்பது தமது கருத்திற்படினும், என்வாயிற் பிறந்தமைபற்றி இதனை அவமதிப் பவர் பலர். ஐயையோ இதற்கு யாது செய்யலாம்!!! இராசாவினு டைய ஆஞ்ஞை புலையன்வாயிற் பிறந்தமைபற்றி அதற்கு அமைந் தொழுகாது அதனை அவமதிப்பவர் இல்லையே. சருவலோகைகநாய கராகிய சிவபெருமானுடைய ஆஞ்ஞை புல்லனாகிய என் வாயிற் பிறந்தமைபற்றி அதற்கு அமைந்தொழுகாது அதனை அவமதிப்பது தகுதியாமா? ஆகாதே.

"அடியவர் குறைவு தீர்த்தாண் டருள்வதே விரதம் பூண்ட" பெருங்கருணைக்கடலாகிய சிவபெருமான், நான் நல்லறிவும் நல் லொழுக்கமும் தம்மாட்டு மெய்யன்பும் சற்றுமுற்றறியாப் பரம சண்டாளனேயாயினும், தமது சமயங்குன்றுதலைக் காண்டலின் கண்ணே பெருந்தவலையும் அச்சமயத்தை வளர்த்தலின்கண்ணே பேராசையும் உடைமையினாற்றானே என்னிம்மைப்பயன்களெல்லா

வற்றையும் இழந்தும் பலராலே பலவகையிடையூறுகளை அநுபவித்தும் வருத்தமுறும் உண்மையைத் திருவுளங்கொண்டிரங்கி, என்கருத்தை யான் எடுத்த தேகம் விழுமுன் நிறைவேற்றியருளும்பொருட்டு, அவருடைய திருவடிகளைப் பணிந்து பிரார்த்திக்கின்றேன்.

சென்னபட்டணம், விபவஹு சித்திரைமீ. } இங்ஙனம், நல்லூர் - க. ஆறுமுகநாவலர்.

---

பெருங்கருணைக்கடலாகிய சிவபெருமானது திருவருளினாலே, நான் யாழ்ப்பாணத்துள்ள புண்ணியவான்கள் சிலர் உபகரித்த பொருள்கொண்டு சிதம்பரத்திலும் யாழ்ப்பாணத்து வண்ணார்பண்ணையிலும் வித்தியாசாலை தாபித்து நடத்திக்கொண்டுவருதல் எல்லாருக்குந் தெரியுமே. அந்த வித்தியாசாலைகளின் வரலாறும், வரவு செலவு இருப்புக் கணக்கும், பிறவும், நான் அச்சிற்பதிப்பித்து வெளிப்படுத்திய ஆவேதனங்களினால் நன்றாக விளங்கும். இவ்வருஷம் கோப்பாயிலே ஒரு வித்தியாசாலை தாபித்திருக்கின்றேன். இந்தப்பிரகாரமே வடதேசத்திலும் இலங்கையிலும் ஊர்தோறும் வித்தியாசாலை தாபிக்கவும் தேவாலயந்தோறும் சைவப்பிரசங்கம் பண்ணுவிக்கவும் வேண்டும். இப்படிச் செய்யிற் கல்வியுஞ் சைவசமயமுந் தழைத்தோங்கும்.

வடதேசத்திலுள்ள பிரபுக்கள் பலர் தங்கள் தங்கள் ஸ்தலங்களிலே வித்தியாசாலைகள் தாபிக்கும்படி கேட்கின்றார்கள்; அவைகளுக்குப் பொருளுதவி தாங்களே செய்ய உடன்பட்டிருக்கின்றார்கள். மகிமைபொருந்திய சைவாதீனத்தார்கள் தங்கள் தங்களாலே நடத்தப்படுந் தேவாலயங்களிலே சைவப்பிரசாரகர்களை நியோகித்து வேதனங் கொடுத்துச் சைவப்பிரசங்கஞ் செய்விக்க உடன்பட்டிருக்கின்றார்கள். இவற்றின்பொருட்டுக் கிரமமாகக் கற்றுவல்ல உபாத்தியாயர்களும் சைவப்பிரசாரகர்களும் வேண்டப்படுவர்கள். ஆதலினாலே, நல்லொழுக்கமும் விவேகமு முடையவர்களாய்ப் பரீக்ஷிக்கப்பட்ட பிள்ளைகள் நூற்றுவரைச் சேர்த்து, தனித்தனி இருபது பிள்ளைகளையுடைய வகுப்பு ஐந்தாக வகுத்து, அன்னம் வஸ்திரம் முதலியவை கொடுத்துக் கல்விகற்பித்தல் வேண்டும். வருஷந்தோறுந் தேர்ச்சியடைந்த முதல்வகுப்புப்

பிள்ளைகள் இருபதின்மரும் வித்தியாசாலையை விடுக்க ஐந்தாம் வருப்பின்பொருட்டு இருபது பிள்ளைகள் சேர்க்கப்பட்டு வரல்வேண்டும். இப்படிக் கற்றுத் தேர்ச்சியடைந்தவர்களையே உபாத்தியாயர்களாகவும் சைவப்பிரசாரகர்களாகவும் நியோகித்தல்வேண்டும்.

இதன்பொருட்டு ஏறக்குறைய மாசம் ஒன்றுக்குச் செலவு வருமாறு:—

| | | |
|---|---|---|
| போசனம், விளக்கெண்ணெய், க்ஷௌரம், வஸ்திரம், புத்தகம் இவற்றின்பொருட்டுப் பிள்ளை ௧-இ கூ ௫ வீதம் பிள்ளைகள் ௧௦௦-இ | ரூபா | ௫௦௦ |
| முதற்றமிழுபாத்தியாயர் வேதனம்............ | ,, | ௫௦ |
| இரண்டாந்தமிழுபாத்தியாயர் வேதனம்........ | ,, | ௩௦ |
| மூன்றாந்தமிழ்பாத்தியாயர் வேதனம்...... ... | ,, | ௨௦ |
| சமஸ்கிருத உபாத்தியாயர் வேதனம்.......... | ,, | ௨௦ |
| சிவாகமபண்டிதர் வேதனம்.................... | ,, | ௨௦ |
| ஓதுவார் வேதனம்................................ | ,, | ௧௦ |
| இலேககர் வேதனம்................................ | ,, | ௭ |
| கணக்கப்பிள்ளை வேதனம்........................ | ,, | ௫ |
| சேவகன் வேதனம்................................ | ,, | ௫ |
| தோட்டக்காரன் வேதனம்........................ | ,, | ௩ |
| புத்தகாதி சம்பாதனம்.......................... | ,, | ௩௦ |
| | ஆக ரூபா | ௭௦௦ |

இவ்வுத்தமோத்தம தருமத்தின்பொருட்டு எண்பதினாயிரம் ரூபா வேண்டும். எழுபதினாயிரம் ரூபாவைக்கொண்டு நீர்ப்பாய்ச்சலுள்ள நல்லகிராமம் வாங்கிவிடல்வேண்டும். பதினாயிரம் ரூபாவைக்கொண்டு வித்தியாசாலையும் மடமுங் கட்டுவித்தல்வேண்டும். நம்மவர்கள் பலர் சிறிது சிறிதாக உபகரிப்பினும், "ஆயிரமாகாணி அறுபத்திரண்டரை" என்றபடி இத்தொகை சேர்ந்துவிடும். இத்தொகை சேராதொழியினும், சேர்ந்த தொகைக்கிசையவாயினும் நடத்தலாமே.

இவ்வித்தியாசாலையிலே சேரும் பிள்ளைகள் உயர்வாகிய இலக்கண இலக்கியங்களை நன்றாகக் கற்றுக்கொள்வார்கள். அம்மட்டோ, சிவதீக்ஷை பெற்றுக்கொண்டு ஓரதிபதிக்கும் அவ்வதிபதியின் அதி

காரத்துட்பட்ட உபாத்தியாயர்களுக்குங் கீழ்ப்பட்டிருந்து, அநுட்டானம், பஞ்சாக்ஷரசெபம், சிவபூசை, சிவாலயதரிசனம், தேவார திருவாசகமோதுதல், சிவபுராணம்படித்தல், சிவசாத்திரம்படித்தல் முதலிய சிவபுண்ணியங்களை நாடோறும் அவ்வவற்றிற்கு ஏற்படுத்தப்பட்ட நேரங்களிலே நியமப்பிரகாரஞ் செய்துகொண்டு வருவார்கள்; உற்சவகாலங்களிலே யாவருக்கும் சிவபத்தி செனிக்கும்படி பெருந்திருக்கூட்டமாகிச் சுவாமிக்குப் பின்னே தாளந்தட்டித் தேவாரம் பண்ணுடனே ஓதிக்கொண்டு வருவார்கள்; ஒழுக்கத்திலும் சமயாநுட்டானங்களிலும் தவறும்பொழுதெல்லாம் அதிபதியினாலும் உபாத்தியாயர்களாலும் கண்டிக்கப்பட்டுத் திருத்தமடைவார்கள். வித்தியாசாலையை விடுக்கும்பொழுது உபாத்தியாயர்களாகவும் சைவப்பிரசாரகர்களாகவும் நியோகிக்கப்பட்டு ஊர்தோறும் வித்தியாசாலைகளிலே கல்விகற்பித்துக்கொண்டும் திருக்கோயில்களிலே சைவசமயத்தைப் பிரசங்கித்துக்கொண்டும் சீவிப்பார்கள். இப்படியே தங்களுக்கும் பிறர்க்கும் பயன்படும் நற்செய்கைகளைச் செய்யும் இயல்புடையவர்களுக்கு அன்னதானம் முதலியவை செய்வது எவ்வளவு பெரும்புண்ணியம்.

மிக மேலாகிய இத்தருமத்தை நிறைவேற்றுதற்கு அங்கங்கே சபைகூட்டிப் பிரசங்கஞ்செய்து பொருளுதவிபெறும்பொருட்டு ஊர்தோறுஞ் சஞ்சரிக்கத் தொடங்கினேன். சைவசமயிகளே, சிவபெருமானுடைய திருநாமம் விளங்கும்பொருட்டு நான் எடுத்த முயற்சியை நீங்கள் அவமதியாது நன்குமதித்து உதவி செய்வீர்களென்று நம்பியே உங்கள் ஊருக்கு வருகின்றேன். சிவபெருமானே மெய்க்கடவுளென்று விசுவசித்து அவருடைய சின்னமாகிய விபூதியைத் தரிக்கிறவர் ஒவ்வொருவரும், இல்லையென்னாது, சிறிதாயினும் பெரிதாயினும் தங்கள் தங்களால் இயன்றது உதவுவாராயின், நான் எடுத்த முயற்சி நிறைவேறிவிடும் என்பதற்குச் சந்தேகம் இல்லை.

நீங்கள் இத்தருமத்தின்பொருட்டு உங்களுங்களால் இயன்றமட்டும், நிலமாகவேனும், பணமாகவேனும், பனைமரம் பாலைமரம் முதலிய மரங்களாகவேனும், உபகரிக்கும்படி கேட்டுக்கொள்கின்றேன். உபகரிப்பவர்கள் தங்கள் தங்கள் பெயரையும், ஊர்ப்பெயரையும், தந்தையர் பெயரையும், தொழிற்பெயரையும் அறிவித்தல்

வேண்டும். உபகாரகர்கள் பெயரும் அவரவர் உபகரித்த பொருட்டொகையும் ஆவேதனத்தில் அச்சிட்டு வெளிப்படுத்தப்படும்.

பிரமோதூத ஷ். } இங்ஙனம், "ஸ்ரீ நல்லூர் க. ஆறுமுகநாவலர்."

இந்தப் பெருமுயற்சி கைகூடுமுன் இவர் சிவபதமடைந்துவிட்டார்.

யாழ்ப்பாணத்திலே கொழும்புத்துறை, கந்தமடம், பருத்தித்துறை, மாதகல், இணுவில் முதலிய பற்பலவிடங்களில் இவருடைய ஏவுதலினலே அநேக வித்தியாசாலைகள் தாபிக்கப்பட்டன. இவர் தொடங்கிய வித்தியாசாலைகளிரண்டும் இவரும் சதாசிவப்பிள்ளையுஞ் சேர்ந்து அச்சிட்டு வெளிப்படுத்திய புத்தக வருமானத்தாலும், ஊரவர்கள் அக்காலத்திலுதவிய சிறுதொகைப் பொருளினாலும் போதிய முதலுடையனவாய்ச் செவ்வே நடைபெற்றுவருகின்றன.

பிரசோற்பத்தி வருஷக் கடைசியில், யாழ்ப்பாணத்திலுள்ள உவெஸ்லியன் மிஷன் அங்கில வித்தியாசாலைக்கு விபூதி பூசிக்கொண்டு கற்கப் போகும் சைவப் பிள்ளைகள் சகலரும் அப்பள்ளிக்கூடத்தின் அதிபதியாகிய பாதிரியினுல், ஒருநாள் வெளியே துரத்தப்பட்டார்கள். துரத்தப்பட்ட பிள்ளைகளெல்லாரும் இவரிடத்திலே வந்து, "விபூதி தரித்துக்கொண்டு போனமையால், பள்ளிக்கூடத்தினின்றும் துரத்தப்பட்டோம். விபூதி தரியாது போவோமாயின் அங்கே படிக்கலாம். விபூதி தரியாது போதல் எங்களுக்குச் சம்மதமன்று. ஆதலால், தாங்கள் எங்கண்மீதிரங்கி எங்களுக்காக ஒரு அங்கில வித்தியாசாலை தாபிப்பீர்களாயின், நாங்கள் எல்லாம் சமயாசாரத்துக்குப் பங்கமில்லாமல் வந்து கல்வி கற்றுக்கொள்ளுவோம். சைவசமயிகளாகிய எங்கள்பொருட்டு இப்பெரு நன்மையைச் செய்தல்வேண்டும்." என்று பிரார்த்தித்துக் கொண்டார்கள். ஓரங்கில - வித்தியா

சாலையை நடாத்துதற்கு வேண்டிய பொருள் ஒரு சிறிதுமில் லாதிருந்தும், பிள்ளைகள் கொடுக்கும் வேதனத்தைக்கொண் டும், கவர்ன்மெண்டாரிடத்திலே உதவி பெறலாமென்ற நம்பிக் கையைக்கொண்டும், பிரசோற்பத்தி வருஷம் தைமீ வண்ணார்பண் ணை சைவாங்கில வித்தியாசாலையென்று பெயர் கொடுத்து ஒரு வித்தியாசாலை ஸ்தாபித்தார். அவ்வித்தியாசாலை, பிள் ளைகளினுடைய வேதனத்தைக்கொண்டும் இவருடைய பொரு ள்கொண்டும் நான்கு வருஷ காலம் சிறப்பாக நடந்தது. பின் னர், பிள்ளைகளினுடைய வேதனங் குறைந்ததனாலும், சமீ பத்தில் வேறு பள்ளிக்கூடங்களிருக்கின்றன என்று போக்குச் சொல்லிக் கவர்ன்மெண்டார் உதவி செய்ய மாட்டோமென்று மறுத்ததினாலும், சைவசமயிகளுடைய உதவி சிறிது மில்லா திருந்ததினாலும், பிள்ளைகளில் அநேகர் இப்பள்ளிக்கூடத்திலே கவர்ன்மெண்டுப் பரீக்ஷை இல்லையென்று வேறு பள்ளிக்கூடங் களுக்குப் போயினமையாலும், அதில் வைத்த ஊக்கத்தைக் கைநெகிழ விட்டார்.

---

## ஆறும் அதிகாரம்.

### கிறிஸ்துமதகண்டனம்.

யாழ்ப்பாணம் சிறிய நாடாயிருந்தாலும், மற்றைக் கொழு ம்பு கண்டி முதலிய இடங்களைப் பார்க்கிலும் இதனையே விசே ஷமெனக் கருதிப் பாதிரிமார் வந்து சேர்ந்தார்கள். இங்கே நாவ லர் பிறந்தகாலத்தில், வேம்படி, சுண்டிக்குழி, நல்லூர், கோப் பாய், புத்தூர், வட்டுக்கோட்டை, மானிப்பாய், உடுவில், தெல் லிப்பழை என ஒன்பது முக்கியமான ஸ்தானங்கள் புரோ டெஸ்டாண்டுப் பாதிரிமாருக்கு உண்டு. கத்தோலிக்குப் பாதிரி மாருக்கும் சில ஸ்தானங்கள் உண்டு. இப்பாதிரிமாரின்கீழ் அநேக சுதேச போதகர்களும் போதகிகளும் கிறிஸ்துமதத் தைப் பரப்புதற்காக நியமிக்கப்பட்டிருந்தார்கள். இவர்களெல்

லாரோடும் ஒருவர் தனியே நின்று யுத்தஞ் செய்வது மிக அருமையன்றோ! இவருக்கு, முதலில் வேறு துணையுமில்லை; வேறு ஆதாரங்களுமில்லை; இங்கிலாந்து அமரிக்கா முதலிய இடங்களிற் கிறிஸ்துமதத்தைக் கண்டித்து எழுதப்பட்ட புத்தகங்களுமில்லை. அவையெல்லாந் தாதுவருஷத்துக்குப் பின்னே தான் இங்கு வந்தன. இப்பாதிரிமாரெல்லாந் தமது சமயத்தைப் போதித்தலினும்பார்க்கச் சைவ சமயத்தை இகழ்வதிலேயே அதிக கருத்துடையராயிருந்தனர். அவர்கள் சைவ சமயத்தை இகழ்ந்து செய்த பிரசங்கங்களோ அளவில்லாதன; அவர்கள் அச்சிட்டு வெளிப்படுத்திய குருட்டுவழி, மும்மூர்த்திலக்ஷணம் முதலாகிய துண்டுப் பத்திரிகைகளுமோ அளவில்லாதன. இவைகளாலே சைவ சமயத்தை இகழ்ந்து வெகு தந்திரமாகத் தமது சமயத்தைப் போதித்துப் பலரைத் தம் வசமாக்கினார்கள். அவர்கள் செய்த தந்திரங்களெல்லாம் இவருக்குச் சகிக்கலாற்றாதனவாய் இருந்தன. அதனாற் கிறிஸ்து மதத்திலுள்ள குற்றங்களையெல்லாம் தமது பிரசங்கங்களிலே பல முறைகளில் எடுத்துக் காட்டுவார். சுன்னாகத்திலிருந்த முத்துக்குமாரகவிராயர் இயற்றிய ஞானக்கும்மி யேசுமதபரிகாரம் என்னும் நூல்களை நல்லூர் விநாயகமூர்த்திச்செட்டியாரைக்கொண்டு அச்சிடுவித்தார். கிறிஸ்தவர்கள் சைவத்தின்மேலேற்றும் குற்றங்களெனப்பட்டவைகளுக்கெல்லாம், அக்குற்றங்கள் விவிலியநூலிற்றான் இருக்கின்றன என்று காட்டுமுகத்தாற் சமாதானமும், அவர்கள் சைவத்தின்மேற் சொல்லுக்கும் ஆக்ஷேபங்களுக்கெல்லாந் தகுந்த சமாதானங்களும் எழுதி அவைகளைச் சைவதூஷணபரிகாரம் என்னும் பெயரோடு ஆனந்தவருஷ வெளியிட்டார்.* சுப்பிரமணியக்கடவுளைத் தூஷித்துப் பாதிரிமார் எழுதிய பத்திரிகையொன்றுக்கு மறுப்பாகச் சுப்பிரபோதம் என்னும் பெயர் கொடுத்து ஒரு பத்தி

* இப்புத்தகத்தின் இறுதியில் இங்கிலிஷிலுள்ள முதலாம் அநுபந்தத்தைப் பார்க்க.

ரிகை எழுதி அச்சிட்டார். வச்சிரதண்டம் என்றொரு பத்தி ரிகையும் வெளிப்படுத்தினர். இவருடைய கிறிஸ்துமதகண் டனப் பத்திரிகைகளையும் பிரசங்கங்களையுங் கண்டுங் கேட்டு மறிந்த பாதிரிமார்கள், தமது Hindu Pastor என்னும் புத்த கத்தில் எழுதியிருக்கிறார்கள். *

இந்தக் காலத்திலே சுன்னாகத்து (பின்பு நீர்வேலி)ச் சங் கரபண்டிதரென்பவர் இவரோடு வந்து சேர்ந்தனர். அவருங் கிறிஸ்துமத கண்டனம் மிலேச்சமதவிகற்பம் என்னும் நூல் களை இவர் ஏவுதலின்படி செய்தார். அவைகள் பிற்காலத்தில் அச்சிடப்பட்டன. இவர் பின்னும் விவிலிய நூலிலுள்ள அசப் பியங்களை எடுத்துத் திரட்டி விவிலிய குற்சிதம் என்னும் பெயர் கொடுத்து சி. செந்திநாத ஐயரைக்கொண்டு அச்சிட்டு வெளிப்படுத்தினர். சங்கரபண்டிதரும், இவர் வடதேசம் போயி ருந்த காலங்களில், கிறிஸ்துமதத்தைக் கண்டித்து அநேக பிர சங்கங்கள் செய்தனர். யாழ்ப்பாணச் சமயநிலை என்னும் பத்திரி கையிலும் கிறிஸ்தவர்களுடைய தன்மைகளைப்பற்றி இவர் சிறிது சொல்லியிருக்கின்றார். இவருடைய வைராக்கியம் சைவ தூஷண பரிகாரத்தின் முற்பகுதியால் இனிது விளங்கும். அதிலுள்ள சில விடயங்களும் "மணிகொண்ட" என்னும் பாட் டும் இவர் மதவிஷயமாகத் தம்முடைய உயிரையும் விடத்தக் கவரென்பதைக் காட்டுகின்றன. அந்தக்காலத்திற் பாதிரிமாரை இங்குள்ளவர்கள் பலர், ஐயர் ஐயர் என்று சொல்லியும், அவர் களைத் தேவலோகத்திலிருந்து வந்தவர்களென்றும், பரமசாது க்களென்றும், அவர்களுக்கு விரோதமாக ஒன்றும் பேசக்கூடா தென்றுஞ் சொல்லி அவர்களை வணங்கியும், வந்தார்கள். சைவ தூஷணபரிகாரத்திற் "பாதிரியே" என்று பலவிடங்களில் விளித்திருப்பதைக் கண்டு சிலர், அப்பாதிரிமாருடைய ஏவுதலி

* இப்புத்தகத்தின் இறுதியில் இங்கிலிஷிலுள்ள இரண்டாம் அநுபந்தத்தைப் பார்க்க.

ஞலே இவர்மேல் வழக்குவைப்போம் என்று அச்சுறுத்தினர் கள். அது கேட்டு இவர் சிரித்துவிட்டு "பாதிரி முன்னின்று மொங்கான்* போடுவார், நான் பின்னின்று மொங்கான் போடுவேன்," என்று சொல்லி அவர்களை அனுப்பிவிட்டார்.

பார்சிவல் பாதிரியாருக்குப் பின் வந்தவருள் ஒருவராகிய ஜோன்வால்றன் (John Walton) என்னும் பாதிரியார், இவர் மேல் வழக்கு வைத்தல் வேண்டும் என்னுங் கருத்தாலோ அன்றி இவரைத் தம்வசமாக்கவேண்டும் என்னுங் கருத்தாலோ அறியேம், சைவதூஷணபரிகாரம் எழுதினவர் யார் என்பதைத் தமக்கு அறிவிக்கும்படி, ஒருகடிதம் இவருக்கு எழுதியிருந்தார். அதற்கு இவர், "இச்சைவதூஷணபரிகாரத்தைப் பற்றி 1855-ம் ஆண்டின் Wesleyan Methodist Report என்னும் உங்கள் பத்திரிகையில் இங்கிலாந்திலே ஒருவருஷத்துக்கு முன் பேசப்பட்டிருந்தும், அதனை அறியாது இப்போது நீர் கேட்பது மிக நூதனம்" என்றும், "அதனை எழுதினவன் நானே" என்றும், "அதில் ஏதும் ஆக்ஷேபம் இருந்தால் அதை நான் விளங்கப்படுத்துதற்கு ஆயத்தமாயிருக்கின்றேன்" என்றும், உடனே எழுதி அனுப்பினர். அதற்கு பாதிரியார் திரும்ப எழுதிய மறுமொழியில், அதனை எழுதினவன் "நான் அல்லன்" என்று மறுத்துவிடுதற்கு இஃது உமக்கு ஒரு நல்ல சமயமாயிருக்குமென்று நினைந்தேன் என்றும், புரோடெஸ்டாண்டுப் பாதிரிமாரோடு நெடுங்காலஞ் சம்பந்தப்பட்டிருந்த நீர் பாதிரிமாரைத் தூற்றி எழுதியது தமக்குத் துக்கமாயிருக்கின்றது என்றும், அப்புத்தகத்தில் ஏச்சு வார்த்தைகள் இருக்கின்றமையினால் தாங்கள் அப்புத்தகத்தைப் பொருட்படுத்திப் பார்க்கவில்லை என்றும் எழுதியிருந்தார். அதற்கு இவர், அப்பாதிரியாருக்கு உறைக்குமாறு பின்னரும் ஒரு நீண்ட கடிதம் எழுதித்

* அக்காலத்து மறியற்காரர் தெருவேலை செய்வது வழக்கம். தெருவேலையில் மொங்கான் போடுவதென்பது மண்ணைக் கொட்டிமரக் குற்றிகளைக் கொண்டு அதனை அடித்திறுக்குவது.

தம்முடைய அஞ்சாநிலையையும் பாதிரிமாருடைய உபாயங்களை யும் அதிலே காட்டி அனுப்பியிருந்தார். பாதிரியார் அதற்குப் பதில் ஒன்றும் அனுப்பவில்லை. நாலுமாசஞ் சென்ற பின்னரும் பாதிரியார் இச்சைவதூஷணபரிகாரத்தை இகழ்ந்துகொண்டி ருந்தமையினால், அதிலுள்ள குற்றங்களைக் காட்டும்படி பின்ன ரும் ஒரு கடிதம் எழுதி அனுப்பியிருந்தார். அதற்கும் பாதிரி யார் ஒருவிடையும் எழுதி அனுப்பவில்லை. இவர் சிறுவயசில், க. ஆறுமுகன் என்றும், நாவலர் என்னும் பட்டம் பெற்றபின் ஆறுமுகநாவலரென்றும் கையெழுத்திடுவது வழக்கம். பாதிரி யார் ஆறுமுகத்துக்கு என்று எழுதினமையினால், "நான் ஆறு முகம் அல்லன் ஆறுமுகன்; ஆதலால் இக்கடிதம் எனக்கன்று" என்று எழுதலாம்; எழுதினால் ஒருபோது இவன் பயந்து மறை க்கின்றானென்று பாதிரியாரைச் சேர்ந்தவர்கள் நினைப்பார்கள் என்று கருதி, அந்த ஆறுமுகம் என்னும் பெயரைத் தாம் ஏற் றுக்கொண்டு தாமும் ஆறுமுகநாவலர் என்று கையெழுத்தி டாமல் ஆறுமுகம் என்றே கையெழுத்திட்டுப் பதில் எழுதி அனுப்பினார். * இன்னும் இவருடைய மனத்தைரியத்தையும் அஞ்சாமையையும் பற்றிப் பின்னே விளங்கக் காட்டுவேன்.

இவர் காலத்திற் கத்தோலிக்க பாதிரிமாருடைய தலையெடு ப்புக் குறைவு.

பரசமய கோளரியாகிய இவர் அவதாரஞ்செய்திலராயின், யாழ்ப்பாணம் முழுதும் இப்போது கிறிஸ்தவ நாடாயிருக்கும். அக்காலத்திற் பெரிய உத்தியோகத்திலிருந்தவர்களெல்லாரும் அப்பாதிரிமாருக்குப் பலவகையாலும் அடிமைப்பட்டவர்களே யாம்; இவர்களுடைய அதிகாரத்தாற் சைவக்கோயில்களெல் லாங் கிறிஸ்தவ ஆலயங் (Churches) களாயேயிருக்கும்.

---

* இக்கடிதங்களினுடைய பிரதிரூபங்களில் அநேக வரிகள் சிதைந்துபோனபடியினால் அவைகளுக்கு இடம் விட்டு மற்றவை களை இப்புத்தகத்தினிறுதியில் சேர்த்திருக்கின்றேன்.

## ஏழாம் அதிகாரம்.

### பாட்டுப் பாடுதல் வசனமெழுதுதல்.

இவர் தமிழிற் சிறந்த வித்துவானாயிருந்தும், பத்தியரூபமாகச் செய்த நூல் ஒன்றுமில்லை. இவர் பாடிய தனிச்செய்யுள்கள், பாடுஞ் சத்தி இவருக்கு மிகவும் உண்டென்பதை நன்றாகக் காட்டும். வசனம்போலப் பாட்டுக்கள் இக்காலத்திற்குப் பிரயோசனமுடையவைகளல்ல என்று கருதியே பாட்டுப் பாடுதலை இவர் குறைத்துக்கொண்டார். ஒரு பெருஞ் சபையில் கல்விவிஷயமான காரியமொன்று செய்யும்போது எழுந்து நின்று தலையிலே கைகுவித்துக்கொண்டு, அங்கு நின்ற தம்முடைய மாணாக்கருள் ஒருவரை நோக்கி "விநாயகவணக்கமொன்று சொல்" என்றார். அம்மாணாக்கர் "தாங்களே முதலிற் சொன்னால் நல்லது" என்றார். அங்ஙனம் நின்றபடியே

சீர்பூத்த கருவிநா லுணர்ச்சி தேங்கச்
  சிவம்பூத்த நிகமாக மங்க ளோங்கப்
பார்பூத்த புறச்சமய விருள்க ணீங்கப்
  பரம்பூத்த சைவநிலை பாரோர் தாங்கப்
பேர்பூத்த சிவானந்தத் தினிது தூங்கப்
  பிறைபூத்த சடைமௌலிப் பிரானார் தந்த
வார்பூத்த வறிவிச்சை தொழிலென் றோதும்
  மதம்பூத்த விநாயகன்றாள் வணங்கி வாழ்வாம்.

என்னுஞ் செய்யுளை ஆசுகவியாக ஒருதடையுமின்றிச் சொல்லி முடித்தார். பின்னொருபோது, தம்முடன் கற்ற கார்த்திகேய உபாத்தியாயரோடு பேசிக்கொண்டிருக்குஞ் சமயத்தில், அவர் ஓர் ஓலையையும் எழுத்தாணியையுங் கையிலெடுத்துக்கொண்டு, "நல்லூரில் எழுந்தருளியிருக்கும் கைலாசபிள்ளையார் பேரிலும் சுப்பிரமணியக்கடவுள்பேரிலும் இரண்டு விருத்தஞ் சொல்

லல் வேண்டும்" என்று கேட்டுக்கொண்டார். அப்பொழுது சொல்லிய விருத்தங்களிவை:—

சீர்கொண்ட பரமவா னந்தசிற் சுகசொருப
 செகதீச திருமங்களம்
தெய்வசர வணபவசண் முகவற்கு முன்வந்த
 திகழீச திருமங்களம்
பேர்கொண்ட சதுர்மறையின் முதலிலகு பிரணவப்
 பிரகாச திருமங்களம்
பிறைநுதலொ டயில்விழிகொள் வலவையெனு மரிவையிற்
 பெருநேச திருமங்களம்
ஊர்கொண்ட பரிதிமணி யெனவிலகு முதரமதி
 லொளிர்தேச திருமங்களம்
ஒருவெண்ணெய் நல்லையமர் மெய்கண்ட தேசிகற்
 குபதேச திருமங்களம்
கார்கொண்ட கரடதட கயமுகவ வங்குசக்
 கராச திருமங்களம்
கருணேச நல்லையங் கைலாச புரிவாச
 கவினேறு கணராசனே.

அருணவிகசிதகமல மலரைநிகர் தருவதன
 மாறுமனு தினமும் வாழி
அமரர்தொழு கனகசபை நடனமிடு பரமசிவ
 னருண்முருகர் சரணம் வாழி
கருணைமழை பொழிபனிரு நயனமதி னெடுவலிய
 கவினுலவு தோள்கள் வாழி
கனகிரியை யிருபிளவு படவுருவு நெடியவயில்
 கரதலத் தினிது வாழி.
வருணமா கதவழகு திகழவரு மவுணனெனு
 மயிலினொடு சேவல் வாழி

வனசரர்த மரசனுத வியகுறமி னெடுகடவுண்
மயிலிவர்க டினமும் வாழி
தருணமிது வெனவுமரர் பணிநல்லை யமர்கந்தர்
தமதடியர் நிதமும் வாழி
சகசநிரு மல்பரம சுகிர்தபரி பூரண
சடட்சரம் வாழி வாழி.

இப்படி அநேக தனிச்செய்யுள்களும் ஆகமங்களில் வருஞ் சில தியானச்சுலோகங்களின் மொழிபெயர்ப்புச் செய்யுள்களும் கிரியாத்திரைவிளக்கம் என்னும் நூலிற் சில செய்யுள்களுஞ் செய்திருக்கின்றார்.

தமிழ்ப்புலவர்களுள்ளே மனிதர்களைப் பாடிப் பரிசு பெறுதவர்கள் மிக அரியர். பத்துப்பாட்டு முதலிய பிரபந்தங்கள் செய்த புலவர்களும், கம்பர் ஒட்டக்கூத்தர் முதல் மீனாட்சிசுந்தரப்பிள்ளை ஈறாக உள்ள கவிவாணர்களும், ஆற்றுப்படை, கோவை, சீட்டுக்கவி முதலான்வைகளாலே மனிதரைப் புகழ்ந்தவர்களேயாவர். மனிதரைப் புகழ்ந்து பாடுபவர்கள் எப்பொழுதும் இரத்தற்றொழிலுடையரா யிருப்பாரென்பது மேலோர் கருத்து. இவர் ஒரு சிறப்புப்பாயிர வடிவமாகத்தானும் ஒருவரைப் புகழ்ந்து தமது வாயாற் பாடினதை நாம் கண்டதுமில்லை, கேட்டதுமில்லை. குரு, உபாத்தியாயர், கடவுள் என்னும் மூவருஞ் சமத்துவமுடையரென்னுங் கருத்தால், தமது உபாத்தியாயர் சரவணமுத்துப்புலவர் சிவபதமடைந்தபோது அவர் மீது ஒரு கவியும், தமது மாணாக்கர் சுப்பிரமணியபிள்ளை இறந்தபோது அவருடைய சிவபத்தி குருபத்தி முதலிய நற்குணங்களைக் குறித்துச் சில செய்யுள்களுஞ் செய்திருக்கின்றார். இவைகள் நரஸ்துதியுமல்ல; பொருளை அபேட்சித்தனவுமல்ல. பாட்டுக்கள் தோத்திரம் ஒன்றற்கேயல்லாமல் மற்றவைகளுக்கு அவ்வளவு சிறந்தன அல்ல என்பதும், பாட்டுவடிவமான நூல்களாற் சாமானிய சனங்களுக்குப் பிரயோசனமில்லை என்பதும்,

தற்காலத்தில் இங்கிலிஷ் சம்ஸ்கிருதம் முதலிய பாஷைகளி லும் வசன நூல்களே வழங்குகின்றன என்பதும்; இனித் தோத்திரத்துக்கும் தேவார திருவாசகம் முதலிய அருட்பாக் கள் இருக்கும்போது அவற்றிற்கு மேலாக நாம் என்ன தோத்தி ரத்தைச் செய்யப்போகிறேம் என்பதும் இவர் கருத்துக்களாம். அதனுற்றான் பாட்டுப் பாடுவதை ஒழித்துக்கொண்டார்.

இவர் தாம் ஒரு வித்துவானுயிருந்ததேயன்றிப் பிரபு வாயும் இருந்ததினல், நந்தனர் முதலிய அடியவர்மேலும் சுவாமிமேலும் பாடிக்கொண்டுவந்த கோபாலகிருஷ்ண ஐயர் முதலானவர்களுக்கு இவர் கொடுத்த பரிசுகள் பல.

வசனரூபமான நூல்கள் பல செய்திருக்கின்றார். இவர் செய்த அளவு வசனநூல் வேறொருவரும் முன் செய்யவில்லே. சிவஞானமுனிவருடைய வசனங்கள் மிகச் சிறந்தனவாயினும் அவையெல்லாஞ் சமயவிஷயம் ஒன்றைக் குறித்து எழுதப்பட் டன. இவருடைய வசனங்களோ அச்சிறப்பமைதியோடு பல விடயங்களுங் குறித்தெழுதப்பட்டன. இவர் எழுதிய பெரிய புராணவசனம்போல இனிமையானநூல் இன்னுந் தமிழிற் பிறக்கவில்லே. இவர் பெரியபுராணவசனத்தைத் தமது அச்சுக் கூடத்தில் முதற் பதிப்பித்தபோது, அதனைக் காகிதத்தில் வச னமாக முன் எழுதிக்கொள்ளாமல், ஏட்டைக் கையிலே வைத் துக்கொண்டு பாட்டுக்களைப் பார்த்துப் பார்த்து வசனமாக்கி ஒரே முறையிற் சொல்லுவார்; அடுக்குவோர் அச்சில் அடுக் கிக்கொள்வர். இவருடைய வசனம் முழுவதும் சுத்தமான செந்தமிழ் நடையேயாம். இவர் வேறொரு பாஷையிலே நினை த்து மீளத் தமிழில் எழுதுகிறவரல்லர். தமிழிலே நினைத் துத் தமிழிலே எழுதுகிறவர். தமிழுக்கு அந்நியமாகிய சில வடசொற்களேயன்றி வேறு பாஷைச் சொல் ஒன்றும் இவ ருடைய வசனங்களில் வந்ததில்லே. வசனங்களும், ஒன்றற் கொன்று சம்பந்தமுடையனவாய், வீண் சொற்களும் வீண்

27 MAR 1

அடைகளும் இல்லாதனவாய், தர்க்கரீதியுடையனவாய், இன்னோசையுடையனவாய் இருக்கும். சைவதூஷணபரிகாரம், வச்சிரதண்டம் முதலான ஆதியிற் செய்த சில நூல்கள் கடினமானவைகளாயிருந்தாலும், பெரியபுராணவசனமும், பிற்காலத்திலெழுதிய ஏனைய நூல்களும், மிக எளிதில் விளங்குந்தக்க இயற்சொற்களே பெரும்பாலும் விரவிய நூல்களாம். வடசொற்களை இவர் பிரயோகிக்கும் வகை, மிகச் சுத்தமாயும், இனிமையாயு மிருக்கும். சிலேடையாக இவர் எழுதிய வசனங்கள் பலவுள. அவற்றை வச்சிரதண்டம் மித்தியாவாத நிரசனம் முதலியவற்றிற் காண்க.

---

## எட்டாம் அதிகாரம்.

### புத்தகங்கள் அச்சிடுதல்.

பாதிரிமார் மானிப்பாயில் ஓர் அச்சியந்திரம் வைத்து, உதயதாரகை என்னும் கிறிஸ்துமத பத்திரிகையையும், கிறிஸ்து மதத்துக்கு அனுகூலமான பிற துண்டுப் பத்திரிகைகளையும், புத்தகங்களையும், சைவத்தைத் தூஷிக்கும் பத்திரிகைகளையும், புத்தகங்களையும் அதில் அச்சிட்டு வெளிப்படுத்திக்கொண்டு வந்தார்கள். இப்பத்திரிகைகளுக்கும் புத்தகங்களுக்கும், மறுப்பு எழுதி வெளிப்படுத்தவேண்டி இருந்தமையாலும், சைவர்களுக்கு உபயோகமாகப் பல நூல்களை அச்சிடவேண்டியிருந்தமையாலும், இவர் சௌமியவருஷம் சென்னபட்டணத்துக்குப் போய் ஓர் அச்சியந்திரம் வாங்கிக்கொண்டு வந்து "வித்தியாநுபாலனயந்திரம்" என்னும் பெயர் கொடுத்து, வண்ணார்பண்ணையிலே தாபித்தார். அதிலே தாமியற்றிய முதலாம் இரண்டாம் பாலபாடங்களையும், ஆத்திசூடி கொன்றைவேந்தன் என்பவைகளுக்குத் தாமியற்றிய உரைகளையும், சிவாலயதரிசனஞ் செய்பவர்கள்பொருட்டுத் தாமியற்றிய சிவாலயதரிசனவிதி என்னும் நூலையும், சைவசமயத்தின் சாரங்களையெல்லாந் திரட்டித்

தாமியற்றிய சைவசமயசாரம் என்னுந் துண்டுப் பத்திரிகையையும், கொலைமறுத்தல் என்னும் நூலுக்குத் திருப்போரூர்ச் சிதம்பரசுவாமிகள் செய்த உரையையும், சைவதூஷணபரிகாரம், வச்சிரதண்டம், சுப்பிரபோதம் என்னும் கிறிஸ்துமத கண்டன நூல்களையும், திருமுருகாற்றுப்படை திருச்செந்தினிரோட்டக யமகவந்தாதி என்னும் இரண்டிற்குந் தாமியற்றிய உரைகளையும், தாமெழுதிய பெரியபுராண வசனத்தையும், நன்னூல் விருத்தியுரையையும் அச்சிட்டு வெளிப்படுத்தினர். இவர் அச்சிட்ட புத்தகங்களில் எழுத்துப் பிழைகள் சிறிதுமில்லாதவகையும் அதிக கல்வியில்லாதவரும் எளிதாக வாசித்தற்கும் விளங்குதற்கும் ஏறுவாகச் சொற்கள் பிரிக்கப்பட்டுச் சந்திவிகாரமின்றி இருந்த வகையும், குறியீடுகள் செவ்வையாக இடப்பட்டு இருந்த வகையும் ஆகிய இவைகள் இந்தியாவிலுள்ள பலருக்கும் ஆச்சரியத்தை விளைத்தன. இவ்வச்சியந்திரந் தம்முடைய வேலைகளுக்குப் போதாமையால், சில வருடங்களின் பின் அதனை விற்றுவிட்டுச், சென்னபட்டணத்துக்குப் போய்க் கூலி கொடுத்து அச்சிடுவித்து வந்தனர். பின் பெரிதான ஓர் அச்சியந்திரம் விலைக்கு வாங்கி முந்தின அந்தப் பெயரோடு சென்னபட்டணத்திலே வைத்திருந்தார். இவருடைய கல்வித்திறமையையும் புத்தகங்கள் அச்சிடுந் திறமையையும் அறிந்த இராமநாதபுரம் பொன்னுச்சாமித்தேவர் இவரைக்கொண்டு திருக்குறள் பரிமேலழகருரை, திருச்சிற்றம்பலக்கோவையுரை, தருக்கசங்கிரகவுரை, சேதுபுராணம் என்னும் நூல்களைப் பரிசோதிப்பித்து அச்சிடுவித்தார். சி. வை. தாமோதரம்பிள்ளை தொல்காப்பியம் சேனாவரையத்தை இவரைக்கொண்டு பரிசோதிப்பித்து அச்சிட்டார்.

பொன்னுச்சாமித்தேவர் குமாரர் பாண்டித்துரைத்தேவர் சிதம்பர வித்தியாசாலையிலும் பிறவிடங்களிலும் இவர் புத்தகம் அச்சிடுந் திறமையையும் பரிசோதிக்குந் திறமையையும் மிகப் பாராட்டிப் பேசியிருக்கின்றார்.

கும்பகோணத்துக்குப் போயிருந்தபோது, திருவாவடு துறை ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணியதேசிகரவர்கள், மகாவித்துவான் மீனாட்சிசுந்தரப்பிள்ளையையும் சில ஓதுவார்களையும் அங்கே அனுப்பி, இவரையழைப்பித்து, மடத்திற் சிலகாலம் வைத்திருந்து, இலக்கணக்கொத்து, தொல்காப்பியச்சூத்திரவிருத்தி முதலிய இலக்கண நூல்களை இவரைக்கொண்டு பரிசோதிப்பித்து அச்சிடுவித்தார்கள்.

இவர் செய்த உரைகள் கோயிற்புராணவுரை, சைவசமய நெறியுரை, நன்னூற்காண்டிகையுரை, சிவதருமோத்தரவுரை, மருதூரந்தாதியுரை, திருச்செந்தி னிரோட்டக யமக வந்தாதியுரை முதலியவைகளாம். புதிதாகச் செய்த நூல்கள் முதலாம் இரண்டாம் நான்காம்பால பாடங்களும், முதலாம் இரண்டாஞ் சைவவினாவிடைகளும், இலக்கணவினாவிடையும், இலக்கணச் சுருக்கமும், குருசிஷ்யக் கிரமமும், நித்தியகருமவிதியும், சிராத்தவிதி தருப்பணவிதிகளின் மொழிபெயர்ப்பும், திருவிளையாடற்புராண வசனமும், பெரியபுராணவசனமும், பெரியபுராண சூசனமும் பிறவுமாம். இவர் எழுதிய சில விஷயங்கள் உதய தாரகைப் பத்திரிகையிலும் இலங்காபிமானியிலும் இலங்கை நேசன் பத்திரிகையிலும் வந்திருக்கின்றன. *

இவர் செய்தனவும் அச்சிட்டனவுமாகிய நூல்களிலே சில விசேஷங்களுண்டு. அவைகளாவன: க. பிரதிகளின் ஆதாரமில்லாமல் ஒன்றனையுந் தாமாகத் திருத்தாமை. உ. பாடபேதங்களொன்றும் அச்சிடாமை. [சிறந்தபொருள் இதுவென்று துணிந்தவருக்கு அந்தப்பாடத்தைக் கொள்வதேயல்லாமல் வேறு சிறப்பில்லாத பாடத்தைக் கொள்ளவேண்டிய அவசியமில்லை. ஆனாற் பரிமேலழகர் முதலிய பழைய உரையாசிரியர்களும் பாட

* இவர், பத்திரிகைகளில் எழுதியவைகளும் தனிப் புத்தகங்களில் எழுதியவைகளும் "ஆறுமுகநாவலர் பிரபந்தத்திரட்டு" என்னும் பெயர்கொடுத்து அச்சிடப்படுகின்றன.

பேதங்களை ஏற்று உரை செய்திருக்கிறார்கள்.] ௩. இவர் தமக்கு முன்னிருந்த ஆசிரியர்களது துணையில்லாமல் சித்தாந்தத்திலாவது, இலக்கணத்திலாவது, வேறு எவற்றிலாவது தமது யுத்தியினாலே ஒன்றையுஞ் சொன்னதேயில்லை. இவர் "ரோசா" ப்பூவில் மிக்க பிரீதியுடையவர், அதனை அதிகமாக உட்பயோகித்துத் தமது பூசையைச் செய்கின்றவர். அப்படி அவ்வளவு விருப்பமுடையவராயிருந்தும், இரண்டாம் சைவவினாவிடை எழுதும்போது அதிற் பூசைக்குரிய புட்பங்கள் எழுதுமிடத்து, இந்த "ரோசா" வுக்கு ஜபா முதலிய பெயர்கள் சமஸ்கிருத அகராதிகளிலிருந்தும், அதனைப் பூசைக்குரிய புட்பங்களோடு சேர்க்கலாமோ சேர்க்கலாகாதோ என்று பலமுறை ஆலோசித்து, இறுதியிற் புட்பவிதி முதலிய நூல்களில் இல்லாமையினாலே சேர்க்காதுவிட்டார். இவர் அச்சிட்ட புத்தகங்களுள் பாரதம், சூடாமணிநிகண்டு என்னுமிரண்டனையும் நாம் மிகவும் மெச்சிக்கொள்ள வேண்டும். சென்னையில் வீராசாமிச் செட்டியார் மாணாக்கர் இராசகோபாலபிள்ளை என்பவர் வில்லிபுத்தூராழ்வார் பாரதத்தை முழுதும் மாற்றி அச்சிடவாரம்பித்தார். அதனை அறிந்த இவர் வில்லிபுத்தூராழ்வார் பாடியவாறே அப்பாரதத்தை அச்சிட்டார். இவருடைய பதிப்பு வராதிருந்தாற் பாரதங் கெட்டேபோய்விடும். இவருடைய பதிப்பே சரியானதென்பதை, காட்டாவூர் ஸ்ரீ சுந்தர சிவாசாரியர் தமது சிவாதித்ய ரத்நாவளியில் எழுதிய "மேல்நியாயங்களால் வில்லிபுத்தூராழ்வார் பாரதம் சைவவிஷயங்களை இடம் வந்துழிக் கூறிவருமென்றும், அப்படிக் கூறுதாகப் பிதற்றியது தூரஹங்காரத்தெழுந்த மூடாபிமானம் என்றும் மேதாவியர் நிச்சயிப்பரென்க. இவ்வுண்மையை ஸ்ரீ ஆறுமுகநாவலரவர்கள் வெளியிட்ட பாரதத்தாற் கண்டுணர்க" என்னும் வசனத்தானும், பிற்காலத்தில் மதுரைச்சங்கத்தார் அச்சுவித்த பதிப்பானும் அறிக.

முன்னிருந்த உண்மையான தமிழ்ப்புலவர்கள் தமது செய்யுள்களிலே தமிழ்ச்சொற்களை எதுகை முதலிய தொடை நோக்கியும், ஓசை நோக்கியும், விகாரப்படுத்தி வழங்கினார்கள். போலிப் புலவர்களும், வடமொழிகளின் இயல்பு அறியாமையினாலும், ழகர ளகரங்களுடைய பேதம் அறியாமையினாலும், சொற்களைப் பிழைப்படுத்தி வழங்கிவந்திருக்கிறார்கள். ஏடுகள் எழுதுகிறவர்களும் மேன் மேலும் பிழைகளை உண்டாக்கிவிட்டார்கள். இவைகளாலே தமிழ்ச் சொற்களினுடைய உண்மையான சொரூபம் தெரியாமற்போயிற்று. பரிதியைப் பருதியென்றும், சிவப்பைச் சிகப்பு என்றும், கொத்துமலியைக் கொத்தமல்லியென்றும், ஒளியை ஒழியென்றும், ஒழியை ஒளியென்றும், அரிணத்தை அருணமென்றும், அருணத்தை அரிணமென்றும், கர்ப்பூரத்தைக் கற்பூரமென்றும், குங்குலியத்தைக் குங்கிலியமென்றும், கத்தரித்தலைக் கத்திரித்தலென்றும், தொடையைத் துடை என்றும், உத்தராயணத்தை உத்தராயனம் என்றும், இப்படியே அநேக பிழைகளை உண்டாக்கிவிட்டார்கள். இச்சொற்களுடைய சரியான ரூபத்தை அறிந்து நிகண்டிற்றிருத்துதல் பிரயாசமான வேலையாகும். சில வித்துவான்கள் தாம் அச்சிடும் நூல்களிலே பிழைகள் வந்தாலும் "இனி என்ன நம்முடைய வித்துவான் பண்டிதன் என்னும் பட்டங்கள் போய்விட்டப்போகின்றனவா" என்பார்கள். இவரோ அப்படிப்பட்டவரல்லர், ஒருநாட் போசன விதி எழுதும்போது இவர் சொல்லச் சொல்ல அடியேன் எழுதி வந்தேன். அப்போது "பரிகாமுத்திரையைச் செய்து" என்று இவர் சொல்ல, அதனை அடியேன் எழுதிவிட்டுச் "சைவசமய நெறியுரையிற் பரிகாரமுத்திரை என்று எழுதியிருக்கிறதாக ஞாபகம் இருக்கிறது" என்றேன். உடனே இவருக்கு உடம்பு முழுதும் வெயர்த்துவிட்டது, எழும்பச் சத்தியற்றுப்போய்விட்டது. வேறொருவரைக்கொண்டு சைவசமயநெறியுரையை எடுப்பித்துப் பார்க்க அதிற் பரிகாமுத்திரை என்று சரியாக இருந்தது. புத்தகங்கள் அச்சிடுவதிற் பிழை வருவதைக் குறித்து இவ்

விளவு பயம் இவருக்கு இருந்தது. இவர் அச்சிடும் புத்தகங்களிற் பிழைகள் இல்லாமையையும் அவைகள் வாசிப்பவர்களுக்கு இலகுவாயிருத்தலையுங் கண்ட திருவாவடுதுறை ஆதீனத்து ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிகரவர்கள் இவரைக் கூடவிருத்திப் போசனம் பண்ணும் அக்காலங்களிலும் புகழ்ந்து புகழ்ந்து பாராட்டுவார்கள்.

---

## ஒன்பதாம் அதிகாரம்.

### சிவாகமமும் சிவதீக்ஷையும்.

வேதம் சிவாகமம் என்னும் இரண்டும் ஈசுர வாக்கென்பதும், அவற்றுள்ளே வேதம், வைஷ்ணவர், வேதாந்திகள், சாங்கியர், யோகர், மீமாஞ்சகர், நையாயிகர் முதலிய பலர்க்கும் பொதுவாகலின் பொதுநூல் என்பதும், சிவாகமம் சைவருக்கே உரியநூல் ஆதலின் சிறப்புநூல் என்பதும், இதிற் சொல்லப்பட்ட சிவதீக்ஷையே முத்திக்குச் சாதனம் என்பதும், வேதம் உலகர்பொருட்டும் ஆகமம் சத்திநிபாதமுடையவர்பொருட்டும் செய்யப்பட்டன என்பதும், ஆதலின் வேதத்தினும் ஆகமஞ் சிறந்தது என்பதும், சிவாகமத்திற் சொல்லப்பட்ட பிரகாரமே சைவாலயங்கள் நடத்தப்படல் வேண்டும் என்பதும், சைவ நூற்றுணிபு. இவற்றிற்குப் பிரமாணம் சூதசங்கிதை, பத்ம புராணம், சிவஞானசித்தியார், ஞானப்பிரகாசசுவாமிகள் இயற்றிய சிவாகமாதிமான்மியம், புண்டரீகபுராணம் முதலியவற்றிற் காண்க.

இங்ஙனமாதலின், இவர் சிவதீக்ஷையில்லாத வைதிகப் பிராமணர் கையாலே விபூதி வாங்காத நியமம் உடையவர். சிவதீக்ஷையுடையோர் அஃதில்லாதாரை வணங்குதலும், அவர்களைச் சிராத்தமுதலியவற்றிலே வரித்தலும், அவர்கள் கையாலே விபூதி வாங்குதலும், சிவாகமப்பிரகாரங் கூட்டிப் பிரதிட்டை செய்யப்பட்ட கோயில்களிலே அவர்களைக்கொண்டு பூசை திரு

விழாக்கள் செய்வித்தலும் பிறவுமாகிய இவைகளெல்லாஞ் சிவா கம விரோதம் என்பதையும், இப்படிச் செய்வோர் யாதொரு பயனையும் அடையமாட்டார் என்பதையும் விரித்துச் சனங் களுக்குப் பிரசங்கங்களிலே சொல்லிவந்தார். இப்படி நிகழு நாளிலே, யாழ்ப்பாணத்திலுள்ள வைதிகப் பிராமணர்களுள்ளே சிலர், தம்மிடத்திலே விபூதி வாங்காமையினால் இவர்மேற் கோப ங்கொண்டு, புறம்பே இவரைத் தூஷித்தார்கள். அம்மட்டினில் லாது சிவாகமங்களையும் நிந்தித்தல் செய்தார்கள். அவர்கள் செய்யும் நிந்தைகளைச் சில போலிப்பிரபுக்கள் கேட்டு, மேலும் மேலும் அவ்வாறு செய்யும்படி அவர்களை ஏவிவிட்டார்கள். தம் மைத் தூஷித்தலைப் பொறுப்பினும், சிவாகமநிந்தை சிவனடி யார்நிந்தைகளை ஒருபோதும் பொறுக்கமாட்டாதவராகிய இவர், துந்துபிளு மாசிமீ கசுஉ தமது வித்தியாசாலையிலே, வேதம் பொதுநூலென்றும், ஆகமஞ் சிறப்பு நூலென்றும், வைதிக மார்க்கத்திலொழுகுவோர் புண்ணியலோகங்களை அடைவார்க ளென்றும், சைவமார்க்கத்திலொழுகுவோர் சாலோகம் சாமீபம் சாரூபம் என்னும் பதமுத்திகளையும், சாயுச்சியமாகிய பரமுத் தியையும் அடைவார்களென்றும், அநேக பிரமாணங்களை எடுத் துக் காட்டிப் பிரசங்கித்தார். அந்தப்பிரசங்கத்துக்கு விரோ தமாக வைதிகப்பிராமணர் சிலர், அப்பிரபுக்களுடைய உதவியி னாலே, வைதிகமார்க்கத்திலொழுகுவோரே உயர்ந்தோரென்றும், அவர்களைச் சைவமார்க்கத்திலொழுகுவோர் வழிபடலாமென் றும், வைதிகராகிய தாங்கள் பரார்த்தபூசை செய்ய விதியிருக் கின்றதென்றும், தாபிப்பதாக, பல முறை சனங்களைக் கூட்டி, அவர்கள் மெச்சும்படியாகப் பொன்மலாங் கொடுத்த பல இங்கி லிசுப் புத்தகங்களைக் கொண்டுவந்து, அவைகளிலே தாங்கள் சொல்லியவைகளுக்குப் பிரமாணங்கள் இருக்கின்றன என்று பிதற்றினார்கள். அவர்களெல்லாரும், சபைகளிலே எழுந்து பேசு தற்குச் சத்தியில்லாதவராயிருந்தபடியாலும், தாங்கள் எடுத்த விஷயத்தைத் தாபித்தற்கு ஆதாரமில்லாமையாலும், மற்றக்

கிழமை இவ்விஷயம் பேசப்படுமென்று ஒவ்வொரு கிழமையி லுஞ் சொல்லிச் சொல்லி, ஒரு கிழமையிலும் பேசாது சனங் களைப் பலமுறை அலைத்துவிட்டார்கள். இவைகளையெல்லாம் அறிந்த சனங்கள், நாவலர் சொல்வதே சாத்திர சம்மதமென வும், தங்களை அலைத்தவர்களாகிய வைதிகப் பிராமணர் சொல் வது சாத்திர விரோதமெனவுந் தெளிந்துகொண்டார்கள்.

பின் அவர்கள் வைதிகப் பிராமணருக்கு அஞ்சலிவந்த னம் பண்ணுவதை நிறுத்திக்கொண்டார்கள்; சிராத்தம் விவா கம் முதலிய கருமங்களிலே அவர்களுக்குத் தானஞ் செய்தலை யும் நிறுத்திக்கொண்டார்கள்; வைதிகப் பிராமணரைக்கொண்டு பரார்த்தபூசை செய்வித்த கோயிலதிகாரிகளில் அநேகர், அவர் களை நீக்கிச் சிவதீக்ஷை பெற்ற பிராமணரைக்கொண்டு பூசை செய்விக்கத் தொடங்கினர்கள்; வைதிகப் பிராமணர் கையாலே விபூதி வாங்கும் வழக்கத்தையுடைய சிவதீக்ஷை பெற்றவர் அநேகர், அதனை நிறுத்திக்கொண்டார்கள். இந்தப்பிரகாரஞ் சிவதீக்ஷை பெற்றோருக்கு மரியாதை நடத்தலையும், தாங்கள் சிவதீக்ஷை பெற்றவருக்கு விபூதி கொடுப்பது தகுதியன்றென் பதையும் அறிந்த வைதிகப்பிராமணருள் அநேகர், சிவதீக்ஷை பெற்றுச் சிவபூசை எழுந்தருளப் பண்ணிச் சிவாகம நெறியிலே ஒழுகத் தொடங்கினர்கள். சிவாகம ஆராய்ச்சியும், சிவபூசை யும், தேவார திருவாசக பாராயண ஓசையும், சிவபூசைக்கு இன்றியமையாச் சிறப்பினதாயுள்ள பூசைமணியினோசையும் யாழ்ப்பாணமெங்கும் பரவத் தொடங்கின. வைதிகமார்க்கத்தி னும் அதிகமாகச் சைவமார்க்கந் தழைத்தோங்கியது.

இச்சிவாகம நிந்தை சிவதீக்ஷை நிந்தனைகளைச் சிதம்பரா லய பூசகர்களுள்ளுஞ் சிலர் செய்துவந்தனர். அவர்களையுங் கண் டித்துச் சிதம்பரத்தில் ஒரு பிரசங்கஞ் செய்தனர். அதன் வர லாற்றை இவர் எழுதிய சிதம்பர சைவப்பிரகாசவித்தியாசாலை

முதலாம் ஆவேதனத்தினின்றும் எடுத்துக் காட்டுகின்றோம். அது இது:—

"சிதம்பராலய பூசகர்களுள்ளே சிலர் சைவாகமங்கள் பிரமாண்மல்ல என்றும், சிவதீக்ஷையினால் உயர்ச்சி இல்லை என்றும், சிவதீக்ஷை பெற்றவர்கள் பிரஷ்டர்கள் என்றும், சிதம்பராலயக்கிரியைகள் வைதிகக்கிரியைகளே என்றும், சிதம்பராலயக் கிரியைகளுக்குச் சிவதீக்ஷையில்லாதவர்களே அருகர்கள் என்றும், துர்ப்போதனைசெய்து பலரையும் மயக்கிக்கொண்டு திரிந்தார்கள். மார்கழிமீ ரதோற்சவதினத்துக்கு முதற்றினமாகிய உஎவ சோமவாரத்திரவிலே, நமது வித்தியாசாலையிலே, வெகுஜனசமூகத்திலே, அவர்கள் கூற்றுக்களெல்லாவற்றையுங் கண்டித்து, சைவாகமங்கள் முக்கியப்பிரமாணம் என்றும், சிவதீக்ஷயே உயர்வுடையது என்றும், கர்ஷணுதிப்பிரதிஷ்டாந்தம் பிரதிஷ்டாதியுற்சவாந்தம் உற்சவாதிப் பிராயச்சித்தாந்தம் என்னுந் தேவாலயக்கிரியைகள் சிவாகமத்திலன்றி வேதத்தில் இல்லை என்றும், யாவர்க்கும் சிவதீக்ஷையின்றிச் சிவாகமம் படித்தல் கூடாது என்றும், சிதம்பராலயக்கிரியைகளின்பொருட்டுப் பதஞ்சலி மகாமுனிவர் வேதசிவாகம முறைப்படியே பத்ததி செய்தருளினர் என்றும், ஆதியில் இருந்த தில்லைவாழந்தணர்கள் சிவதீக்ஷையும் சிவாகமவுணர்ச்சியும் சிவாகமாநுஷ்டானமும் உடையர்கள் என்றும், தற்காலத்தில் உள்ள பூசகர்கள் சிவதீக்ஷையும் சிவாகமவுணர்ச்சியும் சைவாநுஷ்டானமும் இல்லாதவர்களாய் இருந்துகொண்டு சிதம்பராலயக்கிரியைகளைச் செய்தல், சிவவாக்கும் நடேசர் திருமேனியுமாகிய சிவாகமத்துக்கும் வியாக்கிரபாதமுனிவர் பதஞ்சலிமுனிவர் தில்லைமூவாயிரமுனிவர் என்பவர்களுடைய அநுஷ்டானத்துக்கும் விரோதமே என்றும், பல சாத்திரப்பிரமாணங்கள்கொண்டு விரித்துப் பிரசங்கித்தேன்."

இப்போதுள்ள பூசகர்கள் இன்னும் சிவதீக்ஷை பெற்றுக் கொள்ளாதவராயிருந்தாலும், இவர் சொல்லியவைகளெல்லாம் உண்மை என்பதை ஒத்துக்கொள்ளுகிறார்கள்.

---

## பத்தாம் அதிகாரம்.

### அருட்பாவழக்கு.

இந்தியாவிலே சிதம்பரத்துக்குச் சமீபத்தில் கருங்குழி என்றோர் இடமுண்டு. அங்கே இராமலிங்கபிள்ளை என்று ஒருவர் இருந்தார். அவர் ஏதோ ஒரு வைராக்கியத்தினாலே சுவாமியாகிச் சென்னபட்டணத்திற் போயிருந்தனர். அங்கே அவர் தாம் சிவானுபூதி பெற்றவரென்று உலகத்தார் நம்பித் தம்மை வழிபடும் பொருட்டுச் சில பாடல்களைப் பாடி அவைகளுக்குத் திருவருட்பாவென்றும், தமக்குத் திருவருட்பிரகாச வள்ளலாரென்றும் தாமே பெயரிட்டுக்கொண்டும், தம்முடைய மாணாக்கரொருவராலே தமக்குத் திருவருட்பா வரலாறென ஒரு புராணஞ் செய்வித்து இறுதியிற் சேர்த்துக்கொண்டும், அச்சிற் பதிப்பித்து விக்கிரயஞ் செய்வித்தனர். அது கண்ட அறிவிலிகள் சிலர், அவ்விராமலிங்கபிள்ளை முன்னிருந்த சமயாசாரியர்களோடு சமத்துவமுடையவரென்றும், அவர் பாடல் தேவார திருவாசகங்களோடு சமத்துவமுடையதென்றும், பாராட்டிக் கொண்டும், பூசித்துக்கொண்டும், அனுட்டானம் பூசை சிவதரிசனம் முதலியன செய்யுங் காலங்களில் ஓதிக்கொண்டும் வந்தார்கள்; சிலபோது சென்னபட்டணத்திலுள்ள சில ஆலயங்களில் உற்சவத்திலே தேவாரம் முதலிய அருட்பாக்களை நிறுத்திவிட்டு இராமலிங்கபிள்ளை பாடலையே ஓதுவித்தார்கள்.

இராமலிங்கபிள்ளைக்கும் நாவலருக்கும் முன்னே வேறு யாதொரு விரோதமும் இல்லை. இவர் வித்துவான்களைக் கண்டு அழுக்காறு கொள்பவருமல்லர். இவர் காலத்திலிருந்த சிறந்த

வித்துவான்களாகிய மகாலிங்கையர் விசாகப்பெருமாளையர் மீனு ட்சிசுந்தரப்பிள்ளை முதலானவர்களெல்லாரும் இவரோடு மிக்க நண்புடையவர்கள். இவரும் அவர்களை மிகவும் பாராட்டிக் கொள்பவர். இவரித்தன்மையாகிய குணமுண்டையராயிருந்தும், இராமலிங்கபிள்ளையும் அவர் மாணுக்கரும் செய்தவைகற்றை மாத்திரம் சகித்திலர். உலகத்தில் எத்தனையோ மூடர்கள் எத்தனையோ பிழைகள் நிறைந்த நூல்களை இயற்றினுர்கள். அவைகளையெல்லாம் இவர் பொருட்படுத்திக் கண்டிக்கவில்லை. இராமலிங்கபிள்ளை இவருக்கு ஒரு அபராதமும் செய்யாதவராயிருந்தும், அவரையும் அவருடைய பாடல்களையும் கண்டித்துப் போலியருட்பா மறுப்பென ஒரு நூல் எழுதி, அதனை மாவண்டூர்த் தியாகேசமுதலியாரைக் கொண்டு வெளிப்படுத்தினுர்.

இந்தப் போலியருட்பா மறுப்பென்னும் பத்திரிகையில், சமயாசாரியர்களுடைய பெருமைகளையும் அவர்களுடைய பாக்களின் பெருமைகளையும் அவர்கள் பெற்ற அருளின் திறங்களையும் ஸ்பஷ்டமாகக் காட்டியிருக்கின்றுர். அத்தன்மையையுடைய ஆசாரியர்களோடு இவ்விராமலிங்கபிள்ளையைச் சமத்துவப்படுத்துவது தகாதென்பதே இவர் கருத்து. இராமலிங்கபிள்ளை அவர்களோடு சமத்துவப்படுத்தப்படின், அவர்களும் இவ்விராமலிங்கபிள்ளை போன்ற ஒழுக்கமுடையவர்களாயே இருந்திருப்பார்களென்றும், அவர்கள் அருள் பெற்றுர்களென்பதும் இவ்விராமலிங்கபிள்ளை அருள் பெற்றது போலத்தானே பொய்யாயிருக்குமென்றும் பரசமயிகளும் நம்மவருட் பலரும் எண்ணுதற்கிடஞ்குமன்றே! இதுபற்றியே கருங்கழி இராமலிங்கபிள்ளையையும் அவருடைய நூலையும் இவர் கண்டித்தார்.

இப்படியிருக்கும்போது, ஒருமுறை இவரும் இராமலிங்கபிள்ளையும் சிதம்பரத்துக்கு ஒரே காலத்தில் வர நேர்ந்தது. அப்போது, சைவாகமவிஷயமாகவும் சிவதீக்ஷை விஷயமாகவும் இவரோடு வெறுப்புக் கொண்டிருந்த தீக்ஷிதர் சிலர், அவ்விராம

லிங்கபிள்ளையைக் கொண்டு இவரை இகழுவிக்கலாமென்று கருதி, சிதம்பராலயத்தில் பேரம்பலத்திலே அவ்விராமலிங்க பிள்ளையையும் அழைத்து ஒருகூட்டம் சுக்கிலஹூ ஆனிமீ உத்தரத்தன்று கூட்டினார்கள். அதில் இராமலிங்கபிள்ளை உட்பட எல்லாரும் இவரை வாயில் வந்தபடி தூஷித்து, இவரை அடிக்க வேண்டுமென்று தீர்மானித்துக் கொண்டு போய்விட்டார்கள். இக்கூட்டத்தின் வரலாறு "பேரம்பலப்பிரசங்கம்" என்னும் பெயர் கொடுத்து சி. சொ. சண்முகப்பிள்ளை, சி. அ. வேலாயுதபிள்ளை, சி. இரா. ஆறுமுகப்பிள்ளை என்னும் மூவரும் வெளிப்படுத்திய பத்திரிகையிற் காணப்படும். இராமலிங்க பிள்ளை பேசிய தூஷணைகள் அப்பத்திரிகையில் இருக்கின்றன.

இந்தக் கூட்டவிஷயமாகச் சில 'கிறிமினல்' வழக்குக்கள் மஞ்சக்குப்பக் கோட்டிலே தொடுக்கப்பட்டன. இராமலிங்க பிள்ளை தம்மேற்றொடுக்கப்பட்ட வழக்கில் தாம் இவரை எவ்வாற்றானும் அவமதித்துப் பேசவில்லையென்று அழித்துவிட்டார். அவர் சொன்னது முழுதும் பொய்யென்று அறிந்த இவர், பலரெதிரே தாம் பேசியதைப் பேசவில்லையென்று இராமலிங்க பிள்ளை சொல்லி மறுத்ததே போதுமென்றெண்ணி, அவர்மேற் கொண்டுவந்த வழக்கை விடுவித்தார். இராமலிங்கபிள்ளை பேரம்பலத்திலேயிருந்து இவரை அவதூறாகப் பேசியது சுக்கிலஹூ ஆனிமீ உத்தர தரிசனத்தன்றும்; அவர் தாம் அப்படிப் பேசவில்லையென்று மஞ்சக்குப்பக்கோட்டிலே அழித்துச் சொன்னது அடுத்த மார்கழித் திருவாதிரைத் தரிசனத்தன்றும். இதிலும் ஏதோ ஒரு தெய்வச்செயல் இருக்கிறதுபோலத் தோன்றுகின்றது.

தீக்ஷிதர்கள் இவர்மேற்றொடுத்த ஒரு வழக்கில், தாம் சிக்ஷிக்கப்படுவாரென்றே இவர் எண்ணியிருந்தார். விசாரணை நடக்குந் தினத்தில் காலையிற் பூசை முடித்துக்கொண்டு, உடையவரைத் தமது மாணாக்கர் சதாசிவப்பிள்ளையிடங் கொடுத்து "நான்

இன்று சிக்ஷிக்கப்படின் என்னுயிரை விட்டுவிடுவேன், நீ இவ்வுடையவரைக் கங்கையிலே விட்டுவிடு" என்று சொல்லிவிட்டுக் கோட்டுக்குப் போயினர். விசாரணையில் மற்றைக் கட்சியார் கேட்ட முட்டுப்பாடான ஒரு கேள்விக்கு மறுமொழியும் கண்ணீரும் இவருடைய நாவினுங் கண்களினும் நின்று ஒருங்கே வந்தன. கோட்டில் இவர் நின்ற நிலையும் பேசிய திறமையும் நீதிபதிக்குப் பேராச்சரியத்தை விளைத்தன. இவ்வழக்கில் வழக்காளிகளுக்கே அபராதம் விதிக்கப்பட்டது.

இவ்வழக்குக்களில் யாழ்ப்பாணம் சௌந்தரநாயகம்பிள்ளை யென்னும் வைக்கீல் சிரத்தையோடுகாட்டிய திறமைகள் பல உண்டு.

---

## பதினொராம் அதிகாரம்.

### பொதுச்செயல்கள்.

பிரசங்கம், கல்வி கற்பித்தல் முதலிய இவைகளே யல்லாமல், உலோகோபகாரமாக இவர் செய்த காரியங்கள் வேறும் பலவுள.

#### க. பதிபுண்ணிய பரிபாலனசபை.

சென்னபட்டணத்திலுள்ள சிவபத்திமான்களிற் சிலர், தொண்டைநாட்டிலுள்ள தேவாரம் பெற்ற சிவஸ்தலங்கள் சிலசிலமாயிருந்ததனால், அவைகளைச் சீர்ணோத்தாரஞ் செய்யும் பொருட்டு, பொருள் சேர்க்க விரும்பி, பிரபவஞு மாசிமீ உஉவ சென்னபட்டணத்திலே, பெத்துநாயக்கன் பேட்டையிலே, சுப்பிரமணிய முதலியார் தெருவிலே, கோ. வி. ஐயாசாமிமுதலியார் வீட்டிலே, ஒருசபை கூட்டி, அதற்கு இவரை அக்கிராசனாதிபதியாக வீற்றிருக்கும்படி கேட்டுக்கொண்டார்கள். அச்சபைக்குத் திருத்தொண்டைநாட்டுப் பதிபுண்ணிய பரிபாலன சபை என்பது பெயர்.

அன்று இவர் அச்சபையிற் செய்த பிரசங்கத்தின் சுருக்கம் இப்புத்தகத்தின் இறுதியில் அநுபந்தமாக அச்சிடப்பட்டிருக்கின்றது.

உ. நல்லூர்க் கந்தசுவாமிகோயில்.

தமது சென்ன ஸ்தானமாகிய நல்லூரிலே சிங்கையாரியச் சக்கிரவர்த்தியின் மந்திரியாகிய புவனேகவாகுவினாலே ஒரு சுப்பிரமணிய ஆலயம் ஆகமப்பிரகாரங் கட்டிப் பிரதிட்டை செய்யப்பட்டிருந்தது. அதனைப் போர்த்துக்கேசர் இடித்துவிடப் பின் ஒல்லாந்தர் காலத்தில் இரகுநாதமாப்பாணரென்பவர் அந்த இடத்தில் ஒரு சிறு கோயிலைக் கட்டி ஒருவேலாயுதத்தைப் பிரதிட்டை செய்திருந்தார். அக்கோயிலுக்குத் தூபியில்லாமை முதலிய பல குற்றங்கள் இருந்தன. இவைகளெல்லாம் குற்றங்கள் என்றும், கோயிலை விதிப்படி கட்டல் வேண்டும் என்றும், கந்தசுவாமி கோயிலானால் மூலமூர்த்தி சிலையாலமைக்கப்பட்ட சுப்பிரமணிய மூர்த்தியாயிருத்தல் வேண்டும் என்றும், அக்கோயிலதிகாரிகளுக்குத் தாம் சிறுபிராயமாயிருக்குங் காலத்திலேயே போதித்தார். அவர்கள் அதற்குச் செவி கொடுக்கவில்லை. வண்ணார்பண்ணைச் சிவன்கோயிலில் ஒருமுறை செய்த பிரசங்கத்திலும் இதனைக் குறித்து ஊரவர்களும் அறியுமாறு சொன்னார். சைவர்கள் உருத்திராக்ஷம் அணியவேண்டும் என்று இவர் பிரசங்கித்ததைக் கேட்டு, உருத்திராக்ஷமணிந்துகொண்டு தங்களுடைய கோயிலுக்கு வந்தவர்களை நகைத்து, தம்மவர் வேறு சிலருக்கு பனங்காய்ப்பணிகாரத்தை மாலையாகக் கோத்துக் கட்டிக் கழுத்திலிட்டு அவர்களோடு கூடவிட்டுப் பரிகாசம் பண்ணின இக் கந்தசுவாமி கோயிலதிகாரிகள், இவர் சொல்லைக் கேட்பது எங்ஙனம்! ஆயினும் பின்னாளிலிருந்த கந்தையமாப்பாணர் என்னும் அதிகாரி இவரை அடைந்து, "தாங்கள் எங்கள் கோயிலில் வந்து தெய்வயானையம்மை திருமணப்படலத்திற்குப் பொருள் சொல்லல் வேண்டும்" என்று பிரார்த்தித்தார்.

அதற்கு இவர் "சிவாகமவிதி ஒன்றுமில்லாத கோயிலுக்கு நான் வாரேன்" என்று சொல்லி மறுத்துவிட்டார். அவ்வதிகாரி பின்னும் பலமுறை இரந்து "கோயிலைத் தங்கள் எண்ணப்பிரகாரமெல்லாம் நடத்துதற்கு எனக்குச் சம்மதம்" என்று சொல்லி அழைத்துக்கொண்டு போனார். இவர், பொருள் சொல்லி முடிந்தபின், அக்கோயிலிலுள்ள குற்றங்களையெல்லாம் திரும்பவும் எடுத்துப் பிரசங்கித்தார். அவைகள் உண்மையாகவே குற்றம் என்று அவ்வதிகாரியினுடைய மனசிலும் பட்டபடியால், அவ்வதிகாரி ஒரு விளம்பரம் எழுதி அச்சிட்டு ஆங்கிரசஞூ தைமீ எஉ அக்கோயிற் சந்நிதானத்திலே ஒரு பெரிய சபை கூட்டினர். அதற்கு இவரையும் அழைத்துக்கொண்டு போயிருந்தார்கள். அங்கே சுப்பிரமணியக்கடவுளுடைய இலக்கணத்தைப் பற்றியும், கோயில்கட்டப்படவேண்டிய முறையைப் பற்றியும் ஒரு பிரசங்கம் இவராற் செய்யப்பட்டது. அப்பொழுது சபையிலிருந்தவர் பலர் இன்றைக்கன்றோ சுப்பிரமணியக் கடவுளுடைய இலக்கணங்களை உண்மையாக அறிந்தோம் அறிந்தோம் என்று சொல்லிக் கூத்தாடினார்கள். அச்சபையிற் கோயிற் கட்டடத்திற்காக ஆறாயிரம் ரூபாவரையில் கையொப்பஞ் சேர்ந்தது. இவர் கருவூரிலிருந்து மூவாயிரம் ரூபாவுக்குக் கருங்கற்களும் எடுப்பித்துக் கொடுத்தார். பவஞூ ஆவணிமீ அங்கே பக்கத்திலுள்ள மடத்திற் போயிருந்து உற்சவத்தைச் சிறப்பாக நடத்துவித்தார். அம்மடத்திலே தினந்தோறும் மாகேசுர பூசையும் நடப்பித்தார்.

இப்படியெல்லாம் இவர் செய்தும், அக்கோயிலதிகாரி தாம் அக்கோயிலில் வழக்கப்பிரகாரம் நடந்துவந்த ஆட்டுக்கொலையை இனிச் செய்யமாட்டேனென்று இவருக்குச் செய்துகொடுத்த சத்தியத்துக்கு மாறாக, தேர்த்திருவிழாவுக்கு முதனாள் மீளவும் அதனைச் செய்து விட்டார். உடனே இவர் கோபங்கொண்டு அம்மடத்தைவிட்டு, நீங்கித் தம்மிடத்துக்கு வந்து, சிலநாளின் பின் அக்கோயிற் குற்றங்களையெல்லாம் இரண்டு பத்திரிகை

களிலே எழுதி வெளியிட்டார். பின்னரும், சிலபிரபுக்கள், இவ்வதிசாரி அக்கேயிலிற் செய்யுங் குற்றங்களை எடுத்துக் காட்டி எழுதி இவருக்குக் கொடுக்க, இவர் தாதுவருஷம் மார்கழிமாசத்தில் வண்ணார்பண்ணைச் சிவன்கோயிலில் ஒருகூட்டங் கூட்டி, அங்கே அவைகளைப்பற்றிப் பேசியபோது, அக்கோயிலதிகாரியை விலக்குதற்காக ஒரு வழக்கு வைக்கும்பொருட்டுச் சிலரை அக்கூட்டத்தார்கள் நியமித்தார்கள். வழக்கு விசாரணை செய்யப் படுவதற்கு முன் இவர் சிவபதமடைந்துவிட்டார்.

## ௩. திருக்கேதீச்சரம்.

இலங்கையிலுள்ள தேவாரம் பெற்ற ஸ்தலங்களுள் ஒன்றாகிய திருக்கேதீச்சரம் அழிந்துபோனபடியால், அந்த நிலம் அரசினருக்காய் விட்டது. அந்த நிலத்தைத் திரும்ப அரசினரிடம் வாங்கி அதிலே அக்கோயிலை முன்போலக் கட்டிவைக்க வேண்டும் என்னும் ஆசை இவருள்ளத்திலே புகுந்தது. அதனை ஆங்கீரசவரு ஐப்பசிமீ "யாழ்ப்பாணச் சமயநிலை" என்னும் பத்திரிகையினிறுதியில் எழுதி வெளிப்படுத்தினர். அந்நிலத்தைக் கொடுக்கும்படியாக அரசினருக்கு விண்ணப்பமுஞ் செய்தார். இப்படியிருக்குங் காலத்தில், அப்போது கவர்மெண்டு ஏசண்டாயிருந்த சேர் துவைனந்துரைக்கும் இவருக்கும் சிறிது மனவிரோதத்தை அத்துரையின் கீழுள்ள உத்தியோகத்தர்கள் சிலர் உண்டாக்கிவிட்டார்கள். அதனால், அந்த நிலம் இவர் காலத்திற் கிடையாமற் போயிற்று. பின்பு அந்தத் துவைனந்துரையுடைய உதவியினாலேயே சைவர்களுக்காயிற்று. இவர்காலத்தில் அது கிடைத்திருந்தால், பெருஞ் சிவாலயம் ஒன்று முன்னேயே உண்டாயிருக்கும்.

## ௪. துவைனந் துரை

ஈசுரவருஷத்தில் யாழ்ப்பாணத்திலே பஞ்சமும் பேதியும் உண்டாயின. பேதி நோயாளிகளுக்கெல்லாம் அங்கங்கே கொட்

டில்கள் போட்டு அவைகளிலே அவர்களை வைத்துத் தகுந்த உணவுகள் மருந்துகள் முதலானவை கொடுக்கும்படி அரசினர் உத்தரவு செய்திருந்தனர். அவைகளைக் கீழுத்தியோகத்தர்கள் கிரமமாகச் செய்யாமையும், துவைனந்துரை* அவைகளை மேற் பார்வை செய்யாமையும் ஆகிய இவைகள் புதினப்பத்திரிகை களில் வெளிப்படுத்தப்பட்டிருந்தன. அப்படிச் செய்யாமையை நேரே கண்டவர்கள் இவருக்கு வந்து சொல்லியுமிருந்தார்கள். கரையூரில் துவைனந்துரை பேதியுண்டானவர்களுடைய வீடு களில் நுழைந்து சில இம்சைகள் செய்தாரென்னுங் கதையும் உண்டாயிற்று. இவைகளைக் கேட்டு மனம் பொறுக்காமையால் தமது வித்தியாசாலையில் ஒரு கூட்டங் கூட்டி அக்கூட்டத்தில், ஒரு விண்ணப்பம் எழுதி 1878-ம் ஆண்டு ஜனவரிமீ தேசாதி பதி "சேர் லோங்டன்" என்பவர் யாழ்ப்பாணம் வந்தபோது அவருக்கு ஒரு உபசபை (டேப்பியுற்றேசன்) மூலமாகக் கொடுத்தார். அந்த டெப்பியுற்றேசனுக்கு முதல்வராகத் தாமும் போயிருந்தார். தேசாதிபதி அவ்விண்ணப்பத்தை உற்றுக் கேட்டு அதிற் சொல்லப்பட்டவைகளுக்காக மனம் வருந்து பவர்போலக் காட்டி, இவைகளையெல்லாம் விசாரணை செய்வோ மென்று சொல்லியும் பின் மெல்ல நழுவவிட்டுவிட்டார். திருவன ந்தபுரத்தில் நீதிபதியாயிருந்த தா. செல்லப்பா பிள்ளை, அப்புக் காத்து நாகலிங்கம் முதலானவர்கள் இவ்விஷயத்தைக் குறித் துச் சீர்மையி லுள்ள (Secretary of State) என்னும் உத்தி யோகத்தருக்கு எழுதியும் நன்மை பிறக்கவில்லை. துவைனந் துரையோ இவ்விஷயத்தில் இவரோடு வெறுப்புங் கோபமு முடையவராயிருந்தும், இவரது இரக்கக் குணத்தையும், ஏதொ ன்று செய்யினும் இவர் மனமொன்று வாக்கொன்றாயிராமல் உண்மையாகவே திரிகரணமுமொத்துச் செய்கின்றவர் என்பத னையும், இவர் ஒன்றுக்கும் அஞ்சாத சுத்தவீரர் என்பதனையும், இவர்போலும் யோக்கியர் இல்லை என்பதனையும், தம் கீழுள்ளா ரால் தாம் அணுப்பப்பட்டார் என்பதனையும், பின் அறிந்து

கொண்டார். அதனாலே டைவனந் துரைக்கு இவரிடத்தே பெருமதிப்பும் விருப்பும் பின் உண்டாயின. இவர் சிவபதமடைந்த சங்கதியைக் கேள்விப்பட்டவுடனே மிக மனம் வருந்தித் தங்கீழுள்ள உத்தியோகத்தர்களையெல்லாம் "இன்று நீங்கள் கச்சேரி வேலை பார்க்கவேண்டியதில்லை, நாவலர்வீட்டுக்குப் போகவேண்டும்" என்று சொல்லி அவர்களை அனுப்பிவைத்தார்.

## ரு. கீரிமலைச் சிவன்கோயில்.

யாழ்ப்பாணத்திற் கீரிமலையிலே ஒரு சிவாலயம் முற்காலத்திலிருந்து அழிந்துபோயிற்று. அந்தஸ்தலத்திலே வேறொரு சிவாலயம் அமைக்கவேண்டுமென்று நினைந்து "கீரிமலைச் சிவன் கோயில்" என்னும் பெயர் கொடுத்து ஒரு பத்திரிகை எழுதித் தமது கையெழுத்தோடு வெளிப்படுத்தி, அதற்காக அங்கே போய் இடமும் பார்த்து வகுத்து, அவ்விஷயத்தில் முயற்சிசெய்யும்படி பிராமண குருமாரையுந் தூண்டிவிட்டார். இப்போது அங்கே அமைக்கப்பட்டிருக்குங் கோயிலும் அதுவே, இடமும் அதுவே.

சூ. சிதம்பரத்தைச் சார்ந்த சிவபுரியிலிருந்த வெள்ளந்தாங்கி ஆறுமுகப்பிள்ளை என்பவர் இவரிடத்து அத்தியந்த பக்தியுடையவர். இந்த ஆறுமுகப்பிள்ளை சிதம்பரம் சிவகாமியம்மையாருக்குரியதாய் வெள்ளந்தாங்கிக் கிராமத்திலுள்ள 40 வேலியின் நிலத்தைத் தம் வசப்படுத்தி அநுபவித்துவந்தார். இந்த ஆறுமுகப்பிள்ளை நாவலர் வசிக்குமிடத்துக்குக் காற்கட்டை தூரத்தில் தமது பல்லக்கினின்றும் இறங்கி மரியாதையோடு போய் இவரை வழிபட்டுவரும் அன்பராயிருக்கவும், அவர் செய்த சிவாபராதத்துக்காக வெறுப்புற்று ஷை விளை நிலத்தையும் அதனாலடைந்த ஊதியத்தையும் சிவகாமியம்மையாருக்குச் சமர்ப்பித்துவிடும்படி அவருக்குப் பலவாறு வற்புறுத்திக் கூறினார். கூறியும் அவர் கேளாமை கண்டு, கோபாவேசத்தால் அவரை வைது,

கோட்டில் அந்த வைவுகளைத் தாம்செய்ததாகவே ஒப்புக்கொண்டு ஏழுரூபா அபராதங் கொடுத்தார். அதற்கு அப்பீல் செய்யும்படி பல அன்பர்கள் இரந்து வேண்டியும் இவர் செய்யவில்லை. பின் அந்தச் சிவகாமியம்மையார் விளைநிலத்துக்காகச் சிவபுரி மடத்துக்கு வார்சுகாரரான வைத்தியலிங்கப்பிள்ளை என்பவரைக் கொண்டு பாப்பர் வியாச்சியம் செய்வித்து அந்த விளைநிலங்களையும் அநுபவித்தகாலத்து வரும்படியையும் சிவகாமியம்மையாருக்குக் கொடுப்பித்தார். அந்தக்காலத்தில் அந்த வழக்கை வக்கிலாயிருந்து மிஞ்சக்குப்பக் கோட்டில் நடத்தினவர் பின் மலையாளம் கோட்டில் ஜட்சாயிருந்த தா. செல்லப்பாபிள்ளை. இன்றைக்கும் அந்தச்சொத்து சிவகாமியம்மையாருக் குரியதாய் அத்தரும பரிபாலன மடாதிபதித்துவம் பூண்ட சிவபுரிமடத்தார் விசாரணையிலிருக்கின்றது. 1867-ம்ஹ மஞ்சக்குப்பக் கோட்டு அசல் நெம்பர் 2-ல் இது நடந்தது.

ஷெ வியாச்சியத்தில் வாதியாயிருந்தவருக்கு வாதி பாப்பர் வைத்தியலிங்கம்பிள்ளையென்று இன்றைக்கும் பெயர் வழங்குகின்றது.

எ. ஸ்ரீ மூலட்டானேசுரருக்கு முதல் முதல் பாற்காவடித் தர்மம் நியமித்தவரும் இவரே. அது இன்றும் ஒழுங்காக நடந்து வருகிறன்து.

இன்னும், உதயபானு என்னும் பெயரோடு ஒரு சைவப் பத்திரிகை நடத்த முயன்று விளம்பரம் விடுத்திருந்தார். சேமநிதிகள் உண்டாக்கவேண்டுமென்று நினைந்து அதற்கு வேண்டிய விதானங்கள் எழுதிவைத்தார். தமிழிலே பரீக்ஷைகள் செய்து பட்டங்கள் கொடுத்தற்கு வேண்டிய ஏற்பாடுகள் எழுதிவைத்தார். பொ. இராமநாதர் என்பவரை இலங்கைச் சட்டநிரூபணசபையில் ஒருவராக்குவதற்குப் பலர் விரும்பாமல் பிறிற்றோ (Brito) என்பவரை ஏற்படுத்த விரும்பியகாலத்தில், இவர் இராமநாதருக்காகப் பல கூட்டங்கள் கூட்டிமிகு முயற்சிசெய்து அவரையே நியமிக்கும்படி செய்தார். இப்படிப் பொதுநன்மை குறித்துச் செய்தன இன்னும் பலவுள.

## பன்னிரண்டாம் அதிகாரம்.

### சிவபூசை.

இவருடைய செய்கைகளெல்லாம் பிறருடைய நன்மை குறித்தவையேயாக, இவர் கற்ற கல்வியும் செய்த பூசையுமாகிய இரண்டுமே சுவநயங் கருதியனவாம். சிவபூசை எழுந்தருளப் பண்ணிக்கொள்ள வேண்டும் என்னும் ஆசை இவருக்குச் சிறு வயசிலேயே உதித்தது. தமது பரம்பரைக் குருவாகிய விளைவேலி ஸ்ரீ வேதக்குட்டிக் குருக்களிடம் சிறுவயசிலேயே சமய தீக்ஷை பெற்றுக்கொண்டார். முப்பத்திரண்டாம் வயசில், நிர்வாணதீக்ஷை பெற்றுச் சிவபூசை எழுந்தருளப் பண்ணிக்கொள்ளும்பொருட்டுக் குறுநாட்டுக்குச் சென்று, ஆசாரியருக்குத் தமது கருத்தை அறிவித்துக்கொண்டு அங்கே இருந்தார். பல தலங்களுக்கும் போகவேண்டும் என்னும் ஆசையும் இருந்தபடியால், உடையவர் பூசை எழுந்தருளப்பண்ணிக்கொள்ள இவர் விரும்பவில்லை. இவருடைய சமயசாஸ்திர உணர்ச்சியைக் கண்ட ஆசாரியர், "தாங்களேயல்லாமல் வேறு யார் உடையவர் பூசை பண்ணத்தக்கவர்" என்று சொல்லி, அதனைப் பலமுறையும் வற்புறுத்தினர். இப்படி இவர்கள் பேசிக்கொண்டிருக்கும்போது, தூரதேசத்தாரொருவர் இரண்டு ஸ்படிகலிங்கங்கள் விற்கக் கொண்டுவந்தார். அதனைக் கண்ட ஆசாரியர் "பார்த்தீர்களா, இது நல்ல அடையாளம். ஸ்படிகலிங்க பூசையே தாங்கள் செய்யவேண்டும்" என்றார். "பஞ்சசூத்திரவிதி தவறாதிருப்பின் தங்கள் சொற்படி எழுந்தருளப் பண்ணிக்கொள்ளுகிறேன்." என்று சொல்லி, இவர் தாமாகவே பரீட்சிக்கும்போது, ஒன்று விதி தவறாததாயும் ஒன்று குற்றமுடையதாயும் இருந்தன. குணமுடைய இலிங்கத்தை ஆசாரியர் எழுந்தருளப்பண்ணிக் கொடுத்தார். இவருடைய மாணாக்கர் சதாசிவப்பிள்ளையும் நிர்வாணதீக்ஷை பெற்று க்ஷணிகலிங்கபூசை இவரோடு கூட எழுந்தருளப்பண்ணிக்கொண்டு, இவருக்குப் பூசைத் துணைவராயி

ருந்தார். பூசைக்கிரமத்தினும், ஆசாரத்தினும், ஒருகாலத்தும் இவர் தவறினதில்லை. புறப்பூசை முடிவிலே தினந்தோறும் "உறவிலேன் உனையன்றி மற்றடியேன்" என்றும், "ஆரெனக் குறவமரர்களேறே" என்றும், "அன்றே என்றனுவியு முடலு முடைமை யெல்லாமுங் - குன்றே யனையாய் என்னையாட் கொண் டபோதே கொண்டிலையோ" என்றும், தோத்திரம் பண்ணும் போது, கேட்டு நிற்பவர்களுக்குங் கண்ணீர் சொரியும். சிவ பூசையை மாத்திரமன்றிச், சமயாசாரியர் குருபூசைகளையும், இடையிடையே மாகேசுரபூசைகளையுஞ் செய்துவந்தார். சிவரா த்திரி சோமவாரம் கந்தசட்டி முதலிய விரதங்களையும் அநுட் டித்து வந்தார். நைட்டிகப்பிரமசாரியாய்ச் சுற்றக்கலப்பில்லாத வராயிருந்ததினாலே ஆசௌசங்களைமாத்திரங் காத்திலர். அகோ ரசிவாசாரியர் பத்ததி, பதஞ்சலி பத்ததி, ஆன்மார்த்தபூசாவிதி என்னும் நூல்களை அநுசரித்து மந்திரக் கிரியைகளோடு கூடிய நித்தியகருமவிதி என ஒருநூலுஞ் செய்தார்.

இவருடைய தாயார் பிங்களஞு மார்கழிமீ சுக்கிலபட்ச ஏகாதசி திதியிற் சிவபதமடைந்தனர். தகப்பனார் தாயார் என் னும் இருவருடைய வருஷ சிராத்தங்களையும் மிக்க சிரத்தை யோடுஞ் செய்துவந்தனர்.

---

## பதின்மூன்றும் அதிகாரம்.

### சிவபதப்பேறு.

பிரமாதிஞு ஆடிமீ சுந்தரமூர்த்திநாயனார் குருபூசைத் தினத்திலன்று இவர் செய்த பிரசங்கத்தைப்பற்றி முன் சொல் லியிருக்கின்றோம். இவர் வாக்கில் வந்தபடியே, அதன்பின் பிர சங்கங்கள் செய்யப்படவில்லை. இந்த வயசிற் சிவபதமடைவா ரென்று ஒருவரும் எண்ணியிருக்கவில்லை. அடுத்த கார்த்திகை மாதத்தில், இவர் சிவபதமடைதற்கு ஒருவாரத்தின் முன் ஒரு நாள் அடியேனை நோக்கி "நாளைக்கு உதயத்தில் வா, சில விஷ

யங்கள் எழுதவேண்டும்" என்றார். அவ்வாறே அடியேனும் போய் நின்றேன். அப்போது தமது மாளிகையின் நடு அறையில் அங்குமிங்கும் உலாவி உலாவி "அல்லிக்கமலத் தயனுமாலு மல்லாதவரு மமரர்கோனுஞ்—சொல்லிப் பரவு நாமத்தானைச் சொல்லும் பொருளுமிறந்த சுடரை—நெல்லிக்கனியைத் தேனைப்பாலை நிறையின்னமுதை யமுதின் சுவையைப்—புல்லிப் புணர்வ தென்றுகொல்லோ வென் பொல்லா மணியைப் புணர்ந்தே" என்னுந் திருவாசகத்தைப் பலமுறை ஓதிக்கொண்டு, அடியேன் போய் நின்றதுந் தெரியாமற் பரவசமாயிருந்தார். அன்றைக்கு ஏதோ ஒருகுறி இவருக்குத் தெரிந்திருத்தல்வேண்டும். அடுத்த கஅவ செவ்வாய்க்கிழமை இரவு இவருக்கு நோய் உண்டாயிற்று. மற்றைநாட் புதன்கிழமை ஸ்நானம் பண்ணக் கூடாதிருந்தமையால், வேதாரணியத்துச் சைவாசாரியர் ஒருவரால் இவருடைய பூசை செய்யப்பட்டது. அப்போது தாம் அந்தரியாகஞ் செய்து, புற மண்டபத்தினின்று புஷ்பாஞ்சலித் திரயஞ் செய்திருந்தனர். மற்றை நாளும் அவ்வாறே செய்தனர். மற்றைநாள் அந்தரியாகஞ் செய்து, புறமண்டபத்தினின்று பூக்களைக் கை நிறைய ஏற்று அப்பூக்களை ஒவ்வொன்றாக எடுத்து, தமது சிரசிலேபோட்டுக்கொண்டு, அஞ்சலி செய்து, திரும்பி வந்து சயனத்தின்மீது படுத்தனர். அன்றிராத்திரி ஐந்து நாழிகை வரையில், அறிவிற் சற்றேனும் பேதமில்லாதவராயிருந்து, தேவார முதலிய அருட்பாக்களை ஓதும்படி கட்டளையிட்டு, அவைகளோதப்படும்போது, சிதம்பரம், காசி, மதுரை, திருச்செந்தூர் முதலிய புண்ணிய தலங்களின் விபூதியணிந்து, உருத்திராக்ஷம் பூண்டு, கங்காதீர்த்தம் உட்கொண்டு, கைகளைச் சிரசின்மேற் குவித்து, உயிர்க்குயிராயுள்ள சிவபெருமானுடைய திருவடிகளிலே சிந்தை வைத்து, சாலிவாகன சஅ௦உ-க்குச் சமமாகிய பிரமாதிவருஷ கார்த்திகைமீ" உகஉ, சுக்கிர வாரமும் மக நக்ஷத்திரமுஞ் சத்தமி திதியுங் கூடிய புண்ணிய காலத்திலே, இரவு பத்து நாழிகையிலே, வண்ணார்பண்ணையிலே தாமிருந்த வீட்டில் ஸ்ரீ நடராஜப்பெருமானுடைய குஞ்சிதபாத நிழலையடைந்தார். அப்போது இவருக்கு வயசு ருகூ, மாசம் கக, நாள் கரு. இருபத்திரண்டாந் தேதியாகிய சனிக்கிழமை இவருடைய திரு

மேனியை, விபூதி உருத்திராக்ஷ முதலிய சிவசின்னங்களாலும் பிறவற்றாலும் அலங்கரித்து விசித்திரமான ஸ்ரீதேரின்மேல் ஏற்றி, எண்ணில்லாத சைவசமய பத்தர்கள் சூழ்ந்து செல்ல, அருட்பாக்களை ஓதுவார்கள் ஓதிக்கொண்டு வர, வனத்தின் கண்ணே கொண்டுபோய், அங்கே வரணிகரனுவாய் ஆதீனத்தார் முன்னிலையில், வேதாரணியத்து அப்புக்குருக்களெனப் படும் நமச்சிவாயதேசிகரால் நிர்வாண அந்தியேட்டி செய்யப் பட்டபின், அன்றிராத்திரி எட்டு நாழிகைவரையிற் பரிமளம் மிகுந்த சந்தனக் கட்டைகளாலே தகித்தனர். பாஷாணஸ்தாபனம் முதலிய கிரியைகளும் முறையே செய்யப்பட்டன.

இவருக்கு நோய் அதிகப்படுதலைக் கண்ட மாணாக்கர்களும் சுற்றத்தார்களும், சமீபத்திலே போய் வித்தியாசாலை விஷயங்களைக் குறித்து என்ன செய்யவேண்டும் என்று வினவினார்கள். அதற்கு "கைலாசபிள்ளையைக் கூப்பிடுங்கள்" என்றார். இதுவே இவர் சொன்ன கடைசியான வார்த்தை.

பிற்காலத்தில்,இவருடைய உருவத்தில் தலையும் நெற்றியும் மிகப் பெரியன; காதுகள் கொஞ்சஞ் சிறியன; கைகளும் கால்களும் மெல்லியன; உடல் கொஞ்சம் பெருத்தது; முகரோமங்கள் மிக்க பெலமுடையன; கழுத்துக்கு மேலே உள்ள பெலமும் மனப் பெலமுமன்றி, சரீரம் ஒருகாலத்தும் வேலை செய்யாமையாற் பெலனற்றது, மிக மிருதுவுமானது; நிறம் பொது நிறம்; புருடாகிருதி நன்றாயிருக்கும்; உயரம் சாமானியமானது; ஆகாரம் அற்பம்; இவருக்குப் பிரியமான உணவு இன்னதென்று சொல்ல முடியாது, பால் கற்கண்டு இவைகளே அதிகமாக உண்பது. இங்கிலிசுகாரர் சொல்லும் புத்திசாதுரியம் (Wit) என்பது இவருக்குத் தலையிலே உள்ளது.

இவருடைய கையெழுத்து மாதிரி

[illegible]

[illegible]

இவரைச் சைவர்கள் பலர் சைவப்பிரசாரகர் என்றும், ஐந்தாங்குரவர் என்றும், சற்குருநாதசுவாமிகள் என்றும் சொல்வார்கள்.

---

## பதினலாம் அதிகாரம்.

### குணாதிசயங்கள்.

இவரிடத்தே கொலை, களவு, வஞ்சனை, காமம் முதலிய குற்றங்கள் எள்ளளவேனும் இருந்தன என்று இவருடைய சத்துருக்களுஞ் சொன்னதேயில்லை; சொல்லவும் மாட்டார்கள். கோபம் என்னுங் குணம் மாத்திரம் இருந்ததுண்டு. அதனையே சிலர் குற்றமாக எடுத்துச் சொல்வார்கள். இவர், தமக்குத் தீங்கு செய்தவர்களைக் கோபித்ததை நாம் ஒரு காலத்துங் கண்டதில்லை. இவர் கோபிப்பது சிவநிந்தை சிவசாத்திரநிந்தை முதலிய சிவாபராதங்களைச் செய்தவர்களையேயாம். அக்கோபமும் அவர்கள் மேற் கொண்ட வைரத்தினாலாயதன்று; அவர்களைத் திருத்திப் பின் நல்வழிக்குக் கொண்டுவரல் வேண்டும் என்னும் நல்லெண்ணத்தினாலாயதேயாம். கோபித்துக் கண்டிப்பதும், பெரும்பாலும் அவரவர்கள் முன்னிலையிலேயாம். இவரால் இப்படிக் கண்டிக்கப் படாதவர்கள், குருமார், பிராமணர், சினேகிதர், பிரபுக்கள், சுற்றத்தார் முதலானவர்களுள்ளே மிக அரியர். இவருடைய கோபம் நற்கோபமே என்பதனை மித்தியாவாதநிரசனத்திலுங் காண்க. இவரிடத்தில் எவ்வளவு கோபமுண்டோ அவ்வளவிற் பதின்மடங்கு இரக்கமுமுண்டு. கோபமுங் கணப்பொழுதினுள்ளே ஆறிவிடும். ஆறினவுடனே முன்போல அவரவர்களுக்குச் செய்ய வேண்டிய மரியாதையைச் செய்வார்.

தம்மை வந்து அடைக்கலம் புகுந்தவர்களைக் காப்பதும், தாங்கள் செய்த குற்றத்தை அறிந்து பச்சாத்தாபப்பட்டுத் தம்மை வந்து க்ஷமை வேண்டினவர்களைக் காப்பதும் இவருக்குரிய விசேட குணங்களாம். இவர் ஒருநாள், சாப்பிட்டுக்கொண்

டிருக்கும்போது, தவசிப்பிள்ளை யொருவன் பைத்தியத்தினாலே சாதத்தை அள்ளி இவருடைய இலையில் எறிந்துவிட்டான். அதற்காக அவன்மேற் கோபங்கொள்ளாது பொறுத்துக்கொண்டனர்.

ஒரு தைச்சங்கிராந்தியில் யாழ்ப்பாண வித்தியாசாலையில் இவர் இருக்கும்போது, அதற்குச் சிறிது தூரத்திலுள்ள ஒரு வீட்டில் நெருப்புப் பற்றியது. அப்போது எவ்வழியாற் போனாரென்று ஒருவருக்குந் தெரியாமற் சட்டென்றுபோய் மற்றவர்களோடு தாமும் ஒருவராய் நின்று கூரையைப் பிடுங்கி நெருப்பை அவித்தார்.

இவருடைய மாணாக்கரொருவருக்கு வைசூரி நோயுண்டானபோது, பலர் தடுக்கவுங் கேளாது தனியே அவர் வீட்டுக்குப் போய்ப்பார்த்துவந்தார். மற்றொரு மாணாக்கராகிய சுப்பிரமணிய பிள்ளை என்பவர் நிருவாணதீக்ஷை பெற்று இவரிடத்தே ஞான சாத்திரங்கள் படிக்க வேண்டுமென்று விண்ணப்பஞ்செய்து மிக்க அன்பு காட்டி நடந்தமையால், அவருக்கு நோயுண்டானபோது அடிக்கடி போய்ப் பார்த்துவந்தார்; வைத்தியஞ் செய்வித்தார்; அவரிறந்தபோது அவருடைய அந்தியக் கிரியைகளைத் தாமும் உடனிருந்து செய்வித்தார்; அவருடைய சரித்திரத்தை ஒரு சிறு புத்தகமாக எழுதினார்; அவருடைய பிள்ளையை வித்தியா சாலையிற் படிக்கச் செய்தார். இப்படிப் பல காரியங்களை இவர் தம்மை நம்பின அநேகருக்குச் செய்திருக்கின்றார். இவைகளால் இவருடைய இரக்கம் என்னுங் குணம் நன்றாக வெளிப்படுகின்றது. சிலர்பொருட்டுக் கண்ணீர்விட்டழுததையும் பார்த்திருக்கின்றோம். கோபிக்கப்பட்டவர்மேல் இரங்குவது இவருக்குப் பரம்பரைக் குணம்போலும். இவருடைய சுற்றத்தார் பலருக்கும் இக்குணமுண்டு.

அஞ்சாமை ஆண்மை என்பவைகளும் இவரிடத்து மேற்பட்டுத் தோன்றிய குணங்களாம். அதனைச் சைவதூஷணபரி

காரத்தில் முதலில் உள்ள சில வசனங்களாலும், பல செய்கைகளாலும் அறியலாம். இவ்வஞ்சாமைக்குக் காரணம் தாம் குற்றமான தொழில்கள் ஒன்றும் செய்திராமையேயாம். தக்க வித்துவ சபைகளைக் காணுமிடங்களிலும், பெரிய சத்துருக்களைக் காணுமிடங்களிலுந்தான் இவருடைய அஞ்சாமை நன்றாகத் தெரியும்.

இவர் அச்சியந்திரந் தாபித்த காலத்தில், அச்சியந்திரந் தாபிப்பவர் கவர்ன்மெண்டு ஏசண்டு மூலமாக அர்சினருடைய உத்தரவு பெற்றுத் தாபிக்கவேண்டும் என்பது சட்டம். தாம் அச்சியந்திரந் தாபிக்க எண்ணியபோது, அதற்கான விண்ணப்பம் எழுதிக்கொண்டு ஒருநாட் காலையில் அப்போது ஏசண்டாயிருந்த "டைக்துரை" யிடம் போனார். அவர் இவ்விண்ணப்பத்தை வாங்கிப் பார்த்துவிட்டு, தாபிக்கலாம் என்றேனும், தாபிக்கக் கூடாது என்றேனும் வாயாற் சொல்லாமற் கைவிரலாற் காட்டிப் போகலாம் என்று அறிவித்துவிட்டார். அவருடைய உட்கருத்தை விளங்காமல் இவர் மனவருத்தத்தோடு வீட்டுக்குத் திரும்பினார். அன்று மத்தியானம், "நீர் இப்பொழுதே அச்சியந்திரந் தாபிக்கலாம். கொழும்பிலிருந்து மறுமொழி வரும்வரையுந் தாமதிக்கவேண்டியதில்லை. அனுமதி நான் வாங்கித்தருவேன்" என்னுங் கருத்தமைய ஒரு கடிதம் எழுதி, அவர் இவருக்கு அனுப்பியிருந்தார். பின் அஃது இவருக்குப் பெருஞ் சந்தோஷமாயிற்று. இதற்குச் சில மாசங்களின் பின் ஒருநாள், இவருடைய தமையனாரொருவர் வீட்டுக்குச் சமீபத்திலே, தெருவிலே, இவரை அந்தத் துரை கண்டபோது, இவரைச் சோதித்தற்பொருட்டு "ஆராய்ச்சியார் தம்பு வீடு எது" என்று கேட்டார். தமக்கு வாயாற் சொல்லாமல் முன்னே கைகாட்டிவிட்டதனை நினைந்தும், அந்தத் துரையைத் தமது தமையனாராகிய ஆராய்ச்சியார் வீட்டிற் பலமுறை தாங் கண்டிருந்தமையால் ஏதோ அவர் தம்மைச் சோதித்தற்பொ

ருட்டு இக்கேள்வியைக் கேட்டாரென்று நினைந்தும், தாமும் வாயாற் பதில் சொல்லாமற் கையாற் சுட்டி இதுவென்று காட்டி விட்டுப் போனார்.

இந்த "டைக்துரை" யும் இவருஞ் சாப்பிடுவது ஒரே வகையான அரிசி. மேற்பிரிவிற் சொல்லிய சங்கதி நடந்து சில நாளாயினபின், அந்தத் துரையிடத்தில் அந்த அரிசி இல்லாமற் போயிற்று; கடைகளிலும் இல்லாமற் போயிற்று. இவரிடத்தில் மாத்திரம் இரண்டு மூட்டைகள் இருந்தன. அத்துரை அதனை யறிந்து பணமுங் கொடுத்து ஒருபுசல் அரிசி வாங்கி வரும்படி ஆளனுப்பினர். இவர் பணத்தைத் திருப்பிக் கொடுத்துவிட்டு ஒருமூட்டை யரிசி அனுப்பியிருந்தார். துரையோ அதன் விலைப் பணத்தை இவருக்குச் சேர்ப்பிக்கத் தம்மாலியன்றளவு பிரயா சப்பட்டார். இவர் வாங்கவில்லை.

ருதிரோற்காரிலே மதுரைக்குப் போகும் வழியிலே இராமநாதபுரத்திலே தங்கியபோது, அந்தச் சமஸ்தான பதி யாகிய பொன்னுச்சாமித்தேவரை, முன்னிருந்த ஒரு விரோ தத்தினலே இவர் காண விரும்பவில்லை. இவர் வந்திருந்ததை அறிந்த தேவர், தமது சமஸ்தானத்துக்கு வந்த வித்துவான் களுள் ஒருவராவது தம்மைக் கண்டு பரிசு பெற்றுப் போகா தவர் இலராகவும், இவர்மாத்திரம் அங்ஙனம் போவது தமக் குப் பெரியதோர் அவமானம் என்றெண்ணி, தமது சமஸ்தான வித்துவானெருவரை இவரை அழைத்துவரும்படி பலமுறை அனுப்பினர். இவர் உடன்பட்டிலர். அது கண்டு "நம்மிடத் திற் சில வைஷ்ணவ வித்துவான்கள் வந்து விஷ்ணுமதப் பிர சங்கஞ் செய்கின்றார்கள். அவர்களைக் கண்டித்துச் சைவஸ்தா பனம் செய்தல் வேண்டும்" என்று உபாயமாகச் சொல்லி அவ் வித்துவானை யனுப்பினர். அதற்கும் இவர் உடன்படாமை கண்டு, அவ்வித்துவான் இவரை நோக்கித் "தாங்கள் தேவ ரைப் போய்ப் பாராமல் இந்தச் சமஸ்தானத்தை விட்டு உயிர்

கொண்டுபோதல் அரிது" என்று அச்சுறுத்திச் சொன்னார். அதுகேட்ட இவர், தேவருடைய பல அக்கிரமங்களையும் எடுத்துச் சொல்லி "இவைகளெல்லாவற்றையும் இங்கிலிஷ் கவர்ண்மெண்டுக்கு அறிவித்துவிட்டபின்னர்த்தான், நாவலன் மறவன் கையால் இறப்பது" என்று சொல்லி அனுப்பிவிட்டார். இவைகளெல்லாவற்றையும் அறிந்த தேவர், இனித் தாம் இவரை அழைத்து உபசரியாதொழியின், தமக்குக் கேடுண்டாகுமென்று நினைந்து, பசுக்கன்று தாயை விட்டுப் பிரிந்தாலும், தாயானது தனது கன்று நிற்குமிடந் தேடி அதனைச் சென்றணைந்து, அதற்கு மிக்க அன்போடும் பாலைச் சுரந்து கொடுத்தல் போல, தாங்களும் நாம் அறியாது தங்களுக்குச் செய்திருக்குங் குற்றங்களைப் பொறுத்து இது கண்டவுடன் எழுந்தருளிவரல் வேண்டும் என்னும் பொருளை உள்ளடக்கிய ஒரு கவியைப் பாடிப் பின்னும் அந்த வித்துவானிடத்திலேயே கொடுத்தனுப்பினார். அதன்பின், தேவர் எழும்போதெல்லாம் எழாமை, தேவரிடத்தே பரிசு பெறாமை, தேவர்முன் அங்கவஸ்திரம் எடாமை, பாதரக்ஷையோடு போதல், தம்மோடு வருபவரெல்லாம் அரண்மனையிற் சேறல் என்னுங் கட்டுப்பாடு ஐந்தும் அவருக்கு உடன்பாடாயின் வருவோம் என்று சொல்லியனுப்ப, அவைகளுக்கெல்லாந் தேவர் உடன்பாடு என்று சொன்னபின், தம்முடைய பரிசனங்களோடும் தேவருடைய சபைக்குப் போனார். தேவர் எதிர்கொண்டு அழைத்துக்கொண்டுபோய் ஆசனத்திருத்திப் பேசிக்கொண்டிருக்கும்போது, இவருடைய சாமர்த்தியத்தைக் கண்டு, இப்போது ஒரு பிரசங்கஞ் செய்தல்வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். "சைவசமயமே சமயம்" என்னுந் தாயுமானசுவாமிபாடலைப் பீடிகையாகக் கொண்டு சைவத்தின் மேன்மையையும், வைஷ்ணவத்தின் குறைவையும், அப்பதீக்ஷிதர் அரதத்தாசாரியர் முதலானவர்களுடைய நூற்பிரமாணங்கள் கொண்டு பிரசங்கித்தார். தேவர் அந்தப் பிரசங்கத்தைக்

கேட்டு மிக மகிழ்ந்து மற்றெரு வித்துவானுக்குஞ் செய்யாத உபசாரங்களை யெல்லாஞ் செய்தார்.

கேள்விகளுக்கு ஆலோசனையின்றிச் சடிதியில் மறுமொழி சொல்லுந் திறமையும் இவரிடத்தே உண்டு. கும்பகோணத்தில் மகாமகத்துக்குப் போயிருந்த காலத்தில், பரிசனங்களோடு ஸ்நானத்துக்குப் போகும்போது, அப்பரிசனங்களுள் ஒருவராயும், தம்மோட்டு அன்புடையவராயுமுள்ள ஒரு வைஷ்ணவர், வழியிலே சாம்பரால் மூடப்பட்டுக் கிடந்த பவ்வீயைத் தம்மோடு கூட வந்த மற்றெருவருக்குக் காட்டி "உங்களுடைய விபூதியைப் பாரும்" என்று இரகசியமாகச் சொன்னர். அதனைக் கேட்ட இவர் ஒரு யோசனையுமின்றி "ஐயங்காரே! ஏன் அப்படிப் போடப்பட்டிருக்கின்றதென்று தெரியுமா? உங்களுடைய விஷ்ணுமூர்த்தியின் வராக அவதாரம் உட்கொள்ளாத படிக்கன்றே" என்றார்.

தமக்கென ஒன்றை யாசியாத அயாசகத் தன்மையும் இவருக்கு உரிய குணங்களுள் ஒன்றுகும். அதற்கு அநேக கதைகள் இருப்பினும் இரண்டை மாத்திரம் இங்கே எடுத்துக் காட்டுகின்றேம். முதலாவது இவருடைய வசனமே. அது இது:—

"ஆனிமீ மகோற்சவதரிசனத்தின்பொருட்டுத் திருவாவடுதுறையாதீனத்து ஸ்ரீமத் அம்பலவாணதேசிகர் சுப்பிரமணிய தேசிகர் என்னும் உபயகுருமூர்த்திகளும் சிதம்பரத்துக்கு எழுந்தருளிவந்தார்கள். அவர்கள் வரவு முன்னே அவர்கள் நமசிவாயத்தம்பிரான் வைகாசிமீ கஅஉ எனக்கு எழுதிய கடிதத்தினல் அறிந்தமையாலும், அவர்கள் சிதம்பரத்துக்கு எழுந்தருளின் வித்தியாசாலைக்கும் எழுந்தருள்வார்கள் என்பது அவர்களுள்ளே துவிதீய குருமூர்த்திகள் குரோதனவூ பங்குனிமீ உஅஉ எனக்கு எழுதியருளிய திருமுகத்தினலே தெரிந்தமை

யாலும், அவர்கள் வரவை எனக்கு எழுதும்பொருட்டு அவர்கள் பொன்னம்பலத்தம்பிரான் வித்தியாசாலையத்தியக்ஷரை வேண்டிக்கொண்டமை அவர்கடிதத்தினால் உணர்ந்தமையாலும், அவர்களுக்கு வித்தியாசாலையில் உபசாரம் நான் இல்லாதவழித் தவறுமோ என்னும் ஐயத்தாலும், அவர்களுக்கு வித்தியாசாலையைக் காட்டி அவர்களாலே செயற்பாலனவற்றை வெகுஜன சமூகத்திலே பிரசங்கிக்கின் அவர்கள் இனியாயினும் தங்கள் தலங்களில் இப்படி வித்தியாசாலைகளைத் தாபித்துக் கல்வியறிவொழுக்கங்களையும் சமயத்தையும் வளர்த்தல்கூடுமே என்றெழுந்த பேராசையாலும், நான் சென்னபட்டணத்தை விடுத்தலால் எனக்கு விளையும் நட்டத்தை எட்டுணையேனும் நோக்காது, புறப்பட்டுச் சிதம்பரத்தை அடைந்தேன்.

உபயகுருமூர்த்திகளும் ரதோற்சவதினத்துக்கு முதற்றினமாகிய உ௩ உ சுக்கிரவாரத்திரவிலே ஏழுமணிக்கு வித்தியாசாலைக்குத் திருக்கூட்டத்தோடும் எழுந்தருளிவந்தார்கள். பரீக்ஷையைப் பார்க்கும்பொருட்டும் பரீக்ஷை முடிவிலே குருமூர்த்திகளாலே செயற்பாலதாகிய பிரசங்கத்தைக் கேட்கும் பொருட்டும் வெகுசனங்கள் வந்து கூடினார்கள். பிரதமகுருமூர்த்திகள் ஆசனத்திலே தக்ஷிணாபிமுகமாக வீற்றிருப்ப, துவிதீயகுருமூர்த்திகள் ஆராதனை செய்தார்கள். ஆராதனை முற்றியவுடனே, பலர் நமஸ்கரித்து விபூதி பெற்றுக்கொண்ட பின், எல்லாரும் வரிசையாக இருந்தார்கள். அதன்பின் நான் கீழ்வகுப்புப்பிள்ளைகளைப் பரீக்ஷை செய்துகொண்டு மேல்வகுப்புப்பிள்ளைகளைப் பரீக்ஷை செய்யும்பொழுது, உபயகுருமூர்த்திகளும் பரீக்ஷையை விரைவில் நிறுத்தும்பொருட்டுப் பலதரம் குறிப்பாலும் பின் வெளிப்படையாலும் உணர்த்தினார்கள். அதனாலே பரீக்ஷை செவ்விதின் முற்றுப்பெறாது நிறுத்தப்பட்டது. அது அவ்வகுப்புப் பிள்ளைகளுக்கும் அங்கிருந்த வித்துவான்கள் பிரபுக்கள் முதலாயினோருக்கும் மனவருத்தத்தை விளைவித்தது.

பரீக்ஷை நிறுத்தப்பட்டவுடனே, பிரதமகுருமூர்த்திகள் எனக்கு ஒரு சால்வையும் இரண்டு சருகைவேட்டியும், உபாத்தியாயர்கள் நால்வருக்கும் வாமதேவபட்டாரகருக்கும் ஒவ்வொரு சோடு வேட்டியும் சமர்த்தர்களாகிய மாணாக்கர்களுக்குப் புத்தகப்பரிசின்பொருட்டு ௫0 ரூபாவும் உபகரித்துவிட்டு, மடத்துக்கு எழுந்தருளினார்கள். பிரசங்கஞ் செய்யப்படவில்லை. அது பிரசங்கத்தை அவாவிக்கொண்டிருந்த சனங்களுக்குப் பெருந்துக்கத்தை விளைவித்தது. பரிசாகக் கொடுத்த புத்தகவிலை ரூபா ௧௩ - அணா ௧௨. சேஷம் ரூபா ௩௬ - அணா ௪. இத்தொகை மேல்வருஷத்துப் பரிசின்பொருட்டு வைக்கப்பட்டிருக்கின்றது.

எனக்குத் தந்தருளப்பட்ட சால்வை வேட்டிகள் விலையைக்கொண்டு சிதம்பரத்தைச் சார்ந்த திருக்களாஞ்சேரியில் மறைஞானசம்பந்த சிவாசாரியசுவாமிகளுடைய சமாதித்திருக்குறட்டையும் திருமதிலையும் ஜீர்ணோத்தாரஞ் செய்வித்தருளும் பொருட்டு, அவைகளைத் துவிதீயகுருமூர்த்திகளிடத்தே சமர்ப்பித்துவிட்டேன். அக்குருமூர்த்திகள் தாங்கள் சிதம்பரத்தை விடுத்தருளும்பொழுது, யாது கருதியோ எனக்கு ௮0 ரூபா அனுப்பினார்கள். நான் சென்னபட்டணம் சேர்ந்தவுடனே, அதற்கு உண்டிகை வாங்கி அக்குருமூர்த்திகளுக்கு அனுப்பிவிட்டேன்."

சென்னபட்டணத்திலிருந்த பிரபு ஒருவர் தமக்குத் தாசிவயிற்றிலே பிறந்த பிள்ளையொன்றற்குத் தமது வீட்டிலே இவர் வந்து அக்ஷராரம்பம் செய்து வைத்தால் ஆயிரம்ரூபா தருவேம் என்று இவரைக் கேட்டார். இவர் அதற்கு உடன்படவில்லை. பின்னும் அவர் வருந்தி இவருடைய சிதம்பர சைவப்பிரகாசவித்தியாசாலைக்குப் பதினாயிரம் ரூபா தருவேம் என்றும் கேட்டார். அதற்கும் இவர் உடன்படவில்லை.

அடியார்பத்திக்கும் ஓர் உதாரணங் காட்டுகின்றோம். இவர் சிவபூசை செய்யும்போது தேவார திருவாசகங்களை ஓதுவார்கள் ஓதுவது வழக்கம். ஒருநாள், ச. பொன்னம்பலபிள்ளை ஓதும்போது "ஓவுநாளுணர்வழியுநாள்" என்னுந் திருப்பாட்டில் "நவ்வுலாவுனை" என்ற சொல் வந்தவுடனே, அதைச் சொன்னால் ஒருபோதீ இவர் மனம் வருந்துவரோ என்று நினைந்து, அச்சொல்லை மிக மெதுவாகச் சொன்னார். உடனே, இவன் என் பொருட்டுத் தேவாரத்தை அவமரியாதை செய்தானென்று நினைந்து, தமது பூசை நியமமுந் தவறிக் கோபக் குறிப்போடும் அவரைப் பார்த்தார். பூசைநியமந் தவறாதவர் இந்த இடத்தில் நியமந் தவறியதற்குக் காரணம் அடியார்பத்தியாலுண்டான பெருங்கோபமேயாம்.

இவர் வேதனம் வாங்கிக்கொண்டு எவருக்காவது கல்வி கற்பித்ததில்லை. ஆயினும் இவருடைய மாணக்கருள் ஒருவராகிய கு. ஆறுமுகச்செட்டியாரென்பவர், இவருடைய யாழ்ப்பாணத்து வித்தியாசாலைக்காக ரூபா $197\frac{1}{2}$ விலை மதிப்புள்ள $1\frac{13}{16}$ பரப்பு நிலம்* தமது மாதாமகரைக்கொண்டு தருமசாசனம் செய்வித்தனர். இவர் சென்னபட்டணத்துக்கு ஒருமுறை போக வேண்டி வந்தபோது இந்த ஆறுமுகச்செட்டியாருக்கு யாழ்ப்பாண வித்தியாசாலையை நடத்தும் அதிகாரத்தையும் அவ்வித்தியாசாலைக்குரிய பணங்களையும் கொடுத்துவிட்டுப்போனார். அந்த ஆறுமுகச்செட்டியார் தமது வியாபாரத்தால் மிகவும் நஷ்டமடைந்தபடியினால் அப்பணங்களைத் திருப்பிக் கொடுக்கச் சக்தியற்றவராய் விட்டார். அவரைச் "சிவில்வாரென்றில்" பிடித்தால் அப்பணங்கள் முழுவதும் அறவிடக்கூடியதாயிருந்தும், அவர் முன் அந்தநிலம் கொடுப்பித்த நன்றியை நினைந்து இவர் அது செய்யாது அப்பணத்தை இழந்துவிட்டார்.

---

* இங்கே பரப்பு என்றது ஒரு ஏக்கரில் பதினறிலொன்று.

இவர் எழுதுங் கடிதங்கள்தாமும், சாத்திரக் கருத்தும் நற்புத்தியும் பொதிந்துள்ளன என்பதற்குச் சான்ருக இவர் எழுதிய பல கடிதங்களுள் ஒன்றை இங்கே காட்டுகின்றோம்.

அது இது:—

உ

சிவமயம்.

ஸ்ரீமத் அண்ணு அவர்களுக்கு விஞ்ஞாபனம்.

பரமகருணாநிதியாகிய நடேசருடைய திருவருளினாலே இவ்விடத்தில் அனைவரும் க்ஷேமம். அவ்விடத்தில் தாங்களும் சகோதரர் சகோதரிகள் முதலிய சமஸ்தரும் க்ஷேமமாயிருக்குஞ் சமாசாரம் அறிய விரும்புகிறேன்.

இந்தமீ உ௦உ தாங்கள் எழுதிய காகிதம் நேற்று வந்து சேர்ந்தது. அதற்கு முன் சதாசிவம் அனுப்பிய காகிதத்தினாலே தங்கள் புத்திரி தேகவியோகமடைந்த துக்க சமாசாரம் அறிந்தேன். தங்களுக்குப்போல எனக்கும் துக்கம்! துக்கம்! ஆயினும் என்ன செய்யலாம்! ஒருவர் முன்னும், ஒருவர் பின்னுமாக நாமெல்லாம் மரணிக்கவேபோகிறோம்!

தேவாரம்.

நடலைவாழ்வுகொண்டென்செய்நீர்நாணிலீர்
சுடலைசேர்வதுசொற்பிரமாணமே
கடலினஞ்சமுதுண்டவர்கைவிட்டால்
உடலினர்கிடந்தூர்முனிபண்டமே.

ஆதலால், நமது சரீரநிலையாமையை நாமெல்லாம் சிறிதேனும் மறவாமல் எப்போதும் இடைவிடாமல் நினைவிலே வைத்துக்கொண்டு, நமக்கு உள்ளபடி இனியபொருள் இன்னதென்று அறிந்து, அந்தப்பொருளைத் தேடவேண்டும். எல்லாவற்றிலும் பார்க்க நமக்கு இனிய பொருள் உயிர்க்குயிராயுள்ள பரமசிவம்.

தேவாரம்.

கனியினுங்கட்டி பட்டகரும்பினும்
பனிமலர்க்குழற் பாவைநல்லாரினும்
தனிமுடிகவித் தாளுமரசினும்
இனியன்றன்னடைந் தார்க்கிடைமருதனே.

இப்படி உள்ளவாறே நமக்கு இனிய பொருளை நாம் அடையாமல் வீணாள் போக்குவோமாயின் நமக்கு நாமே வஞ்சகரென்பதற்குச் சந்தேகமுண்டோ, இல்லை, இல்லை!

ஆகையால் நாமெல்லாம் நீர்க்குமிழிபோல நிலையில்லாததாகிய இச்சரீரம் உள்ளபோதே நமக்கினிய பரசிவனது திருவடிகளை மெய்யன்போடு வழிபட்டு உய்யவேண்டும். இந்தவழிபாட்டுக்கு அங்கம் பாவங்களை வெறுத்தலும் புண்ணியங்களைச் செய்தலும். இவையில்லாத வழிபாடு அபத்தியத்தைத் தள்ளாமலும் பத்தியங் கொள்ளாமலும் தின்கின்ற மருந்துக்குச் சமானமாகுமே.

ஆதலால், நாமெல்லாம் மனைவி மைந்தர் முதலிய சுற்றத்தார்களுடனே கூடியிருந்தாலும், வேளாண்மை வியாபாரம் உத்தியோகம் முதலிய லௌகிகங்களைச் செய்தாலும், சிவநிந்தை வேதாகமநிந்தை கொலை களவு முதலிய பாவங்களை வெறுத்து இரக்கம் முதலிய புண்ணியங்களை உடையர்களாய், நமக்கினிய கடவுளுடைய திருவடிகளை நின்றாலும் இருந்தாலும் கிடந்தாலும் நடந்தாலும் மறவாமற் சிந்தித்து வழிபட்டுவரவேண்டும். ஐயையோ! இப்படிச் செய்யோமாயின், நாம் எல்லாவுயிர்களுக்கும் ஏகநாயகராயிருக்கிற கடவுளுடைய ஆணையினாலே மறுமையிலே எவ்வளவு பெருந் தண்டனையை அடைவோம்!

நின்று மிருந்துங் கிடந்து நடந்துநினை
என்றுஞ் சிவன்றாளிணை.

தங்கள் வீட்டுக்குச் சமீபத்திலுள்ள கைலாசபிள்ளையார் கோயில் இன்னும் கும்பாபிஷேகஞ் செய்யப்படாமல் இப்படியிருப்பது இயன்றவரை இடம் பொருள் ஏவல்களுள்ள தங்களுக்கும் அப்படிப்பட்ட மற்றவர்களுக்கும் சிறப்புத்தானா? ஐயையோ! நாமெல்லாம் இவ்வுலகத்தை விட்டுப் போம்போது எது நம்முடனே கூடிவரும் நமது புண்ணியமன்றி? "I have lost except what I have given away" என்று Mark Antony என்ற ஒரு விவேகி தனது மரண காலத்திற் சொல்லிய அருமருந்தன்ன வாக்கியத்தை நினைவுகூருங்கள்.

உற்றாருளரோ! உயிர்கொண்டுபோம்பொழுது
குற்றாலத்துறை கூத்தரல்லால் நமக்
குற்றாருளரோ!

என்கின்ற அருமைத் திருவாக்கியத்தைச் சிந்தியுங்கள்! சிந்தியுங்கள்!

தாங்கள் தங்கள் அதிப்பிரியமுள்ள புத்திரியை நினைந்து, அவள்பெயரால் மேற்படி கோயிற்றிருப்பணியை நிறைவேற்றி அதி சீக்கிரத்திலே கும்பாபிஷேகத்தை முடிப்பீர்களாயின் பெரும்புண்ணியம்! பெரும்புண்ணியம்! நாளை நாளை என்பது தகாது! தகாது! நிறைவேற்றுவீர்களென்றே நம்புகிறேன்.

தாங்கள் தேகவியோகமடைந்த புத்திரியில் உள்ளபடி அன்புடையவர்களாயின், அவளுடைய ஆன்மாவுக்கு நற்கதி கிடைக்கும் பொருட்டும், மிக இளைய அக்குழந்தையினது பெயர் என்றும் நிற்கும்பொருட்டும், இதை நிறைவேற்றுவீர்களென்பதற்குச் சந்தேகமா!

யாழ்ப்பாணத்திலே உவாந்திக்கப்பட்ட அசுசிப் பிராணியாகிய நான் இச்சென்னபட்டணம் என் சென்மபூமியிற் சிறந்ததென்று சொல்லும் வண்ணம் கிருபாசமுத்திரமாகிப் பன்றிக் குட்டிக்கும் முலைகொடுத்தின சர்வசீவதயாபரராகிய நடேசரது

திருவருளினாலே, சற்றே சௌக்கியமாயிருக்கிறேன்.

| | | |
|---|---|---|
| சென்னபட்டணம் ரௌத்திரிஸு ஆடிமீ உஎஉ. | } | இப்படிக்கு, க. ஆறுமுகன். |

# அநுபந்தம்.

க.

To

C. ARUMUKAM Esq.,

Dear Sir,

....................................entitled சைவதூஷணபரிகாரம் ......................by one of our agents. There is nothing......... ..............me in my enquires as to (the author of the) work, but several persons have asserted to me that the production is yours, whilst others have as confidently assigned it to other parties.

In order that I (may) commit no mistake on this point I take the (liberty) of writing direct to yourself.

Will you, therefore, kindly inform me whether I am to regard you as the author of the work in question, and if not, can you inform me who the author is that I may put myself in communication with him ?

I am, Yours faithfully,

18th January, 1856. (Sd.) John Walton.

P. S. If the pamphlet referred to is the work of several writers, perhaps you can give me their names.

(Id.) J. W.

---

To

THE REV. JOHN WALTON.

DEAR SIR,

In reply to your letter of this date, I am (surprised to learn) from you that the Pamphlet (entitled) சைவதூஷண பரிகாரம் was put into your hands (only) a week since; and it is painful to my mind that you were not put in possession of the Pamphlet ere this, while it has had its circulation a year ago; and a remark touching this Pamphlet is found in your report for 1855.

It is true that the name of its author was not put in the title page, because the particular object of its author was purely to benefit the public but not to acquire a name. You say in your letter that "several persons have asserted to me that the production is yours, whilst others have as confidently assigned it to other parties". I have to inform you that the latter assertion assigning it to other parties is as false as it is uncharitable; and on your deep and impartial inquiry you will be able to know that I am the author of the work in question; and if you have anything to say on the subject contained in the Pamphlet I am always ready to accept and to have a friendly discussion.

I am, Yours faithfully,

18th January, 1856. (Sd.) C. ARUMUKAM.

---

## Extract from the Wesleyan Methodist Report printed in England for 1855, page 20.

"The most remarkable event of the year has been the publication in Tamil of a work of extraordinary literary and mytho.....................Saiva Dhushana Parikaram. It is.......

..............Saivism and antagonist to Christians.................. the peculiarity of forsaking the old.....................and attack, and adopting an entirely new and different strategy. It does not argue or assume that Christianity is theoretically illogical and unsustained, or practically weak and impossible; it does not dogmatically pronounce the doctrines and ritual of Saivism to be of Divine authority, or to be superior to those of Christianity. Neither does it adopt the old subterfuge that both Saivism and Christianity are from God, but the former intended for the Saivite and the latter for the Christian. It undertakes to prove that every one of the distinctive articles of Saivite belief and observance has its parallel and warrant in the Credenda and ceremonial set forth in the Christian Scriptures. Of the twenty-two articles which the author seeks thus to establish, oblations, ablutions, invocations, penance, pilgrimage, lingam worship, and merit are not the least conspicuous. The amount of Scripture brought to the defence of these particulars, is most surprising; and the adroitness with which every possible objection is anticipated and repelled belongs only to a first rate mind. The book is doing much mischief."

---

To

C. ARUMUKAM Esq.,

Dear Sir,

I am (in receipt of your reply) to my note. My object in (writing to you was to give) you an opportunity of repudiating the (authorship of the pamphlet) in question, for I did not believe that a person who owes so much to missionaries and (who has) been so long connected with them as yourself would have addressed them in such offensive terms. It is with deep regret that I learn from yourself that I was mistaken.

When an author becomes abusive he weakens his own position and precludes all reply. If your work had been

respectful in its terms, I think the parties addressed in it ought to have noticed it; as it is, I do not see that they could do so without sacrificing proper dignity.

As your acknowledgement of the authorship was made to me in a private letter, I am unwilling to make any public use of it without your permission; and I therefore ask whether you have any objection to my alluding to your admission either publicly or privately? It is immaterial now to mention the names of parties to whom the Pamphlet was attributed as I perfectly credit your word, but சங்கிலோசக்கர் and others were named.

Yours faithfully,

21st January, 1856. (Sd.) John Walton.

---

To

The Rev. JOHN WALTON.

Dear Sir,

Please excuse.........................reply to your favour of the 21st instant..........................to attend to it earlier. With regard (to the) several points touched upon by you in (your letter) I beg leave to say that:—

1. The Pamphlet in question..................with all its imperfections as to literary merits and..............with all its want of patronage and..............as a similar one from the Mission Press would enjoy, has been, and continues to be, the **means** of doing the amount of **good** which it was humbly **intended** to do, under the blessing of that Infinite Being...... for whose honour it made its appearance; and..........it **has done** that much and **continues to do so,** is acknowledged by its own **deadly opponents** as you will find by the **concluding words** of some one of your predecessors

in the Wesleyan Methodist Report, printed in England for the last year, page 20. Under so great an encouragement, I cannot, with **justice** to the subject, consent to **repudiate** it merely to gratify your whim. The more it does "mischief" to the **opposite cause**, the more it is faithful to its own duty and consequently becomes the more the **darling** object of my **love and care.** The exasperated feelings of one who might have been repelled with scorn and contempt by the virtuous resistance of chastity in his attempt to **rob** it may heap infamy upon infamy upon the conduct of his neighbour's spouse: and reproach her to her husband, but personal knowledge of **grudge** on **one side** and the **consistency** on the **other**, make the **union** more **intimate** and **knits** the **ties** of affection **closer.** This being my experience respecting my Pamphlet, I will not become guilty of.............................................as long as you are not..............her Fornication with infidels.

2. I am thankful to...... .......,...mysterious dispensation of even...........................with such a lengthened connexion with the Protestant missionaries in the Province as enabled me to acquire a **thorough** knowledge of their mode of teaching and proceedings which enabled me not only to (rescue) myself from falling into their traps but also to (warn) my countrymen of the evils of the enemy when I see them apt to traverse the prohibited grounds. "This is the true advantage" I acquired by my long connexion with the missionaries; during which period also I acquired a little knowledge of the English language, for which, in return, I have made ample retribution as known to the Public and as acknowledged by Mr. Percival, your predecessor. My services were worth £ 10 per mensem, should my head only be christened, for which disadvantage I was paid a maintenance only of Rs. 30. Here also you will see £. 7 per mensem was sacrificed even then a similar offer will be scorned now on **principle**, on persu-

ation that, to quote **your own** scripture, "**Godliness with contentment is great gain**". It is implied in your note, for the sake of my long connection with the mission-aries, **I should not speak** in favour of my religion. Sivan **forbid** that any human thoughts or **fears** persuade me to do so..................attempt therefore to..............or reproach one by suggesting......................like these and.................. desire one to..............of doing justice to his heart............... falls very much below the...........................of the antagonistic cause. Weapons...............good sense ought rather to be...... ..............subterfuges of vulgarity which are two weak to be depended upon in an enlightened age.

3. As respects the "**offensive** terms" as well as an "**abusive author** weakens his position" &c. I do not fully understand you. If you will point out to me the **offensive** terms and **abusive** language introduced into the work, I shall be glad to offer my explanation. But do not consider **your dignity** as of **greater** importance than the **trust** committed to your care and attention. Your "**engagement binds**" you "**fast**" to oppose and (repel) all **scandal** brought against your religion. If you have any concern about it, do the worst you can to obtain the victory over the Pamphlet by preventing its "**mischief.**"

4. Lastly you know that it is **modesty** that prohibited me to make a public use of my name in the Pamphlet. I therefore beg you will allow me to **reserve** it in **private** until I should (think) it fit to permit you to make a use of it in public.

Hoping that you will excuse the length of this note,

I remain,

Yours faithfully,

31st Jany. 1856.

(Sd.) C. Arumukam.

To

THE REV. JOHN WALTON.

DEAR SIR,

In my last letter of the 31st January, I requested you to be kind enough to point out the "offensive terms" and "abusive language" introduced into the சைவதூஷணபரிகாரம் of which you complained so much in your second note to me and of which as I learn from report, you still continue to complain. If you will be kind enough to point them out, I might be able to explain the nature of the terms complained of; as I fear a true explanation is not as yet given you by your assistants. Begging to be favoured with an answer at your earliest convenience.

I remain,

Yours faithfully,

26, May, 1856 (Sd.) C. ARUMUKAM.

---

உ.

## Extract from the "Hindu Pastors."

"They were not satisfied with essaying to train the young: they must endeavour to amuse and confirm the adult. Sivaist preachers and stewards appeared, and formed and worked a circuit somewhat on the Methodist model. In connection with the reading and recitation of passages from their sacred books, a lecture or sermon was delivered every Friday evening, in a spacious shed on the holy ground wthin the high wall round the temple of Siva at Wannarponne; and appointments, though not of such frequent occurrence, were also kept at the important villages of Chunnagam and Manipay. Before the delivery of the first lecture, December 31st 1847, the officiating priest

of the temple broke a cocoanut in honour of Pillayar and the undertaking; and at the close of the meeting he solemnly rose and said, that the omens for the association were remarkably auspicious. In the first place, the cocoanut had broken evenly into two equal parts; and secondly, at the commencement of the address, he had heard the sound of a bell within the temple. The principal orators, both of whom had been day-pupils in our Jaffna school, were Arumugavar, the first and most frequent, and the presiding genius through all the movement, and a friend of his, named Cattigasayar. The former of the Velala or agriculturist caste, good-looking, intelligent, studious, reserved, of grave demeanour and blameless life, not better acquainted with the Hindu Shastras than with the Christian Scriptures, had been for a long period, day after day, the worthy companion and valued assistant of the gifted and plodding Mr. Percival in preparing and editing treatises and hymns in Tamil, and translating the Prayer-Book and the Holy Bible. Cattigasayar, a round oily Brahmin, physically inferior to his colleague, and naturally less austere and resolute but equally learned in Hindu lore and quite as patriotic, would not alone have originated such an enterprise. He was the writer's respected and faithful moonshee."

௩.

சென்னையிலே திருத்தொண்டைநாட்டுப் பதிபுண்ணிய பரிபாலன சபையிற் செய்த பிரசங்கத்தின் சுருக்கம்.—

"கனம்பொருந்திய சைவசமயப்பிரபுக்களே!

தங்கள் தங்கள் சமயம் இது எனவும், அதற்குரிய கடவுள் இவர் எனவும், அக்கடவுள் ஆன்மாக்கள் செய்யும் வழிபாட்டைக் கொண்டருளும் முறைமை இது எனவும், அவரை ஆன்மாக்கள் வழிபடும் முறைமை இது எனவும், அறிதலும், அறிந்தபடி அநுட்டித்தலும், எல்லாச் சமயத்தாருக்குங் கடனாகும். ஆதலினால் நம்முடைய சமயக்கிரமத்தை அறிதலும், அறிந்தபடி அநுட்டித்தலும், சைவசமயிகளாகிய நமக்குக் கடனாமே.

நாமெல்லாம் சைவர்கள். சைவர் என்னுஞ் சொற்குச் சிவனை வழிபடுவோர் என்பது பொருள். ஆகவே, சிவனை வழிபடுவோர் யாவர், அவரெல்லாஞ் சைவரெனப்படுவர். சைவர் ஆதிசைவரும், மகாசைவரும், அநுசைவரும், அவாந்தரசைவரும், பிரவரசைவரும், அந்தியசைவரும் என ஆறுவகைப்படுவர். அவர்களுள்ளே ஆதிசைவராவார் அநாதிசைவராகிய சதாசிவமூர்த்தியுடைய ஐந்து திருமுகங்களினுந் தீக்ஷிக்கப்பட்ட பஞ்சருஷிகோத்திரத்துச் சிவப்பிராமணர். மகாசைவராவார் வைதிகப்பிராமணருள்ளே சிவதீக்ஷை பெற்றவர். அநுசைவராவார் க்ஷத்திரியருள்ளும் வைசியருள்ளும் சிவதீக்ஷை பெற்றவர். அவாந்தரசைவராவார் சூத்திரருள்ளே சிவதீக்ஷை பெற்றவர். பிரவரசைவராவார் அறுவகை யநுலோமருள்ளும் சிவதீக்ஷை பெற்றவர். ஒழிந்த சாதியாரெல்லாருள்ளும் சிவபெருமானை வழிபடுவோர் அந்தியசைவரெனப்படுவர். இதனாற் பிராமணர்முதற் புலையரீறாகிய எல்லாச் சாதியாருஞ் சிவபெருமானை வழிபடுதற்கு உரியர்கள் என்பது பெறப்பட்டது. ஆயினும்,

வழிபடற்கிரியைகள் வருணந்தோறும் சில வேறுபாடுடைய னவாம்.

சிவபெருமான் புறத்தே சிவலிங்கமுதலிய திருமேனியும் தமது மெய்யடியாருடைய திருவேடமும் இடமாகக்கொண்டு நின்றும், அகத்தே உயிர் இடமாகக்கொண்டு நின்றும், ஆன்மாக்கள் செய்யும் வழிபாட்டைக் கொண்டருளுவர். லிங என்னும் தாது சித்திரித்தல் எனப் பொருள்படுதலால், படைத்தல் காத்தல் முதலியவைகளினாலே உலகத்தைச் சித்திரிப்பதாகிய சிவத்தினுடைய பிரபாவமே இலிங்கம் எனப்படும். அவ்விலிங்கத்தினது விளக்கத்துக்கு இடமாகிய வாணம் சைலம் முதலியவைகளும் உபசாரத்தினால் இலிங்கம் எனப்படும்.

இலிங்கம் ஆன்மார்த்தலிங்கம் எனவும் பரார்த்தலிங்கம் எனவும் இரண்டு வகைப்படும். அவைகளுள் ஆன்மார்த்தலிங்கமாவது ஆசாரியரிடத்தே எழுந்தருளப்பண்ணிக்கொண்டு மரணபரியந்தம் தன்பொருட்டுப் பூசிக்கப்படும் இலிங்கமாம். இது இட்டலிங்கம் எனவும் பெயர்பெறும். பரார்த்தலிங்கமாவது பிறர்பொருட்டுச் சர்வசங்காரகாலமளவும் பூசிக்கப்படும் இலிங்கமாம். அதுவே திருக்கோயிலுள்ளிருக்கும் இலிங்கம். அது சுயம்பு, காணம், தைவிகம், ஆரிடம், மானுடம் என ஐவகைப்படும். சிவலிங்கம் அசைவில்லாததாதலினாலே தாவரம் எனப்படும்.

சைவசமயத்தை அடைந்தவர் சிவபெருமானுடைய திருவடியைச் சேர்தற்குரிய மார்க்கம் சரியை, கிரியை, யோகம், ஞானம் என நான்கு வகைப்படும். அவைகளுள்ளே, சரியையாவது புறத்தொழிலினாலே உருவத்திருமேனியை நோக்கிச் செய்யும் வழிபாடு. கிரியையாவது புறத்தொழில் அகத்தொழில் என்னும் இரண்டினாலும் அருவுருவத் திருமேனியை நோக்கிச் செய்யும் வழிபாடு. யோகமாவது அகத்தொழிலினாலே அருவத் திருமேனியை நோக்கிச் செய்யும் வழிபாடு. ஞானமாவது

புறத்தொழில் அகத்தொழில் என்னும் இரண்டுமில்லாமல் அறிவுத்தொழின் மாத்திரத்தினாலே அம் மூன்றுதிருமேனிக்கும் மேலாய் அகண்டாகார நித்த வியாபக சச்சிதானந்தப் பிழம்பாய் நிறைந்து நிற்கின்ற சிவத்தினிடத்தே செய்யும் வழிபாடு. இந்த நான்கு மார்க்கத்தில் ஒழுகுவோர்களே மெய்யடியார்கள். இவ்வடியார் திருமேனி அசைவுடையதாதலாற் சங்கமம் எனப்படும்.

சிவபெருமான், எங்கும் வியாபகமாய் நிற்பினும், சிவலிங்க முதலிய திருமேனியும் மெய்யடியார் திருவேடமுமாகிய இவ்விரண்டிடத்துமாத்திரமே தயிரில் நெய்போல விளங்கி நிற்பர். மற்றையிடங்களிலெல்லாம் பாலில் நெய்போல வெளிப்படாது நிற்பர். ஆதலினாலே, சைவசமயிகளாகிய நாமெல்லாம் நமது பரமபதியாகிய சிவபெருமானை இலிங்கமும் சங்கமுமாகிய இவ்விரண்டிடத்தும் விதிப்படி சிரத்தையோடு வழிபடல் வேண்டும்.

இவ்வழிபாடு மேற்கூறிய சரியை கிரியை யோகம் ஞானம் என்னும் நான்கு மார்க்கத்தாராலும் செயற்பாலதேயாம். மல நீங்கிய ஞானிகளும், பூர்வமலவாசனை தாக்காமைப்பொருட்டும், சிவானந்தம் மேன்மேல் வளர்தற்பொருட்டும், சிவலிங்க முதலிய திருமேனியையும், மெய்யடியார் திருவேடத்தையும், வழிபடல்வேண்டும் என்று சிவஞானபோதமுதலிய ஞானநூல்களில் உணர்த்தப்பட்டது. நித்திரைசெய்வோர் கையிற் பொருள் அவரறியாது தானே நீங்குதல்போலச் சிவஞானிகளுக்குச் சரியாதிகள் தாமே தவிர்வனவன்றி அவர் அவைகளைத் தவிர்ப்பாரல்லர். சரியாதிகளைத் தாமே விடுத்தவர் நரகத்து வீழ்வர். இவ்வுண்மை உமாபதிசிவாசாரியர் அருளிச்செய்த சங்கற்பநிராகரணமுதலிய உண்மைநூல்களினாலே துணியப்படும்.

ஒரு பிரபுவினுடைய பணிகளுள்ளே உட்டொழில் செய்வார் புறத்தொழிற்கும் உரியராவர்; புறத்தொழில் செய்வார்

உட்டொழிற்கு உரியராகார்: அதுபோலவே சிவபெருமானு டைய உண்மைப்பணிகளாகிய ஞானமுதலிய நான்கனுள்ளும் மேற்பணி செய்வார் கீழ்ப்பணிக்கும் உரியராவர்; கீழ்ப்பணிசெய் வர் மேற்பணிக்கு உரியராகார். ஆதலினால், ஞானி ஞானமுத லிய நான்கினுக்கும் உரியன்; யோகி யோகமுதலிய மூன்றினுக் கும் உரியன்; கிரியாவான் கிரியை முதலிய இரண்டற்குமுரி யன்; சரியாவான் சரியையொன்றற்கே உரியன் என்பது பெறப் படும். இவ்வாறே சிவஞானசித்தியாரினும் செப்பப்பட்டது. இதனாலே திருக்கோயிலுள்ளிருக்கும் சிவலிங்கப்பெருமானை வழிபடல் ஞானி முதலிய நான்கு திறத்தாருக்கும் இன்றியமை யாக் கடனேயாம் என்பது துணியப்பட்டது. சிவாநுபூதிப் பெரு வாழ்வுடையர்களாகிய திருஞானசம்பந்தமூர்த்திநாயனார், திரு நாவுக்கரசுநாயனார், சுந்தரமூர்த்திநாயனார், மாணிக்கவாசகசுவா மிகள் என்னுஞ் சமயாசாரியர்கள் நால்வரும் தலந்தோறுஞ் சென்று சிவலிங்கப்பெருமானை வணங்கித் திருப்பதிகஞ் செய் தமையே இதற்குச் சான்றாகும். இது ஞானத்திற் சரியை என ப்படும். அது சதமணிக்கோவையிலே

வெண்பா.

"வன்றொண்டர் சம்பந்தர் வாகீசர் மற்றுமுளோர்
பொன்றரிய ஞானம் புகுந்திருக்கச்—சென்று
பதிதோறும் பாடிப் பணியுமதென் மாட
மதிதோ யருட்டுறையாய் வந்து."

என்னும் வினாவாலும் "ஞானத்திற் சரியை" என்னும் விடையாலும் அறிக.

சிவலிங்கவழிபாடு நான்கு பாதத்தாராலும் செய்யப்படுமா யினும், அது அவரவர் கருத்துவகையால் வேறுபடும்: படவே, அவருக்குச் சிவபெருமான் அருள்செய்யும் முறைமையும் வேறு படும். அதனைச் சிறிது சொல்வாம். சரியையாளர்கள் பகுத் தறிவில்லாமற் சிவலிங்கமுதலிய திருமேனியே சிவமெனக்

கண்டு வழிபடுவர்கள்; அவர்களுக்குச் சிவபெருமான் அங்கே வெளிப்பட்டு நின்று அருள்செய்வர். கிரியையாளர்கள் அருவப்பொருளாகிய சிவபிரான் ஈசானமுதலிய மந்திரங்களினாலே சிவலிங்க முதலிய் திருவுருக்கொண்டார் என்று தெளிந்து மந்திரந்யாசத்தினால் வழிபடுவர்கள்; யோகிகள் யோகிகளுடைய இருதயமெங்கும் இருக்கும் சிவபிரான் இந்தத் திருமேனியிலும் இருந்து பூசைகொண்டருள்வர் என்று தெளிந்து சாத்தியமந்திரங்களினால் வழிபடுவர்கள்; இவ்விருதிறத்தார்களுக்கும் சிவ்பெருமான் கடைந்தபோது தோன்றும் அக்கினியும் கறந்தபோது தோன்றும் பாலும்போல அவ்வம்மந்திரங்களினால் அவ்வவர் விரும்பிய வடிவமாய் அவ்வத்திருமேனிகளில் அவ்வப்போது தோன்றி நின்று அருள்செய்வர். ஞானிகள் இம்முத்திறத்தாரும்போல ஓரிடமாகக் குறியாது அன்புமாத்திரத்தால் அங்கே வழிபடுவர்கள். அவர்களுக்குச் சிவபெருமான் கன்றை நினைந்த தலையீற்றுப்பசுவின் முலைப்பால்போலக் கருணைமிகுதியினால் அவ்வன்பே தாமாகி எப்பொழுதும் வெளிப்பட்டு நின்று அங்கே அருள்செய்வர்.

"ஆரணவுருவார்தில்லையம்பலமெய்தப்பெற்றோ
ரோருணர்வாவரென்றுமொன்றலரொன்றல்லர்
காரணராகாரொத்தகருத்திலர்திருத்தவின்பப்
பூரணரவர்கள்வாழும்புவனமும்பொதுவாமன்றே."

என்னும் கோயிற்புராணத் திருவிருத்தத்தினாலே சிவாநுபூதிமான்கள் எழுந்தருளியிருக்குந் தலமும் சிதம்பரமாமென்று அறிவுறுத்தப்பட்டது. அங்ஙனமாகவும், சிவாநுபூதிமான்களாகிய சமயாசாரியர்கள் தலந்தோறுஞ் சென்று சிவலிங்கவழிபாடு செய்தார்களாயின், சரியையாளர் கிரியையாளர்களாகிய நம்போலிகட்குப் பேசவேண்டுவதென்னை! இங்ஙனமாகவும், தற்காலத்திலே சிலர் பரஞானமாகிய அநுபவஞானத்தை அடையாதும்,

அபரஞானமாகிய சாத்திரஞானத்தையும் குருசந்நிதியிற் கிரமமாகப் பெறுதும், தங்களை ஞானிகளெனத் தங்கள் வாயினாலே பாராட்டிச் சரியை கிரியைகளை இகழ்ந்து எரிவாய் நரகத்துக்கு இரையாகுகின்றார்கள். அது நிற்க.

ஞானத்தின் மிக்க முத்திநெறியும் ஞானசாரியரின் மிக்க ஆசாரியரும் இல்லாமையாலும், ஞானசாரியர்களுள்ளும் மிக மேலாயினோர்கள் திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் முதலிய சமயகுரவர்களே யாதலாலும், காமுகனாயினேன் தன்னைப் புகழ்ந்து தன்னாலுரைக்கப்பட்ட வாக்கினும் தன் காமக்கிழத்தியர்வாய்த் தோன்றிய வாக்கில் விருப்பமிக்குடையனாய் அதனால் வசீகரிக்கப்படுமாறுபோலச் சிவபெருமான் தம்மைப் புகழ்ந்து தம்மாலுரைக்கப்பட்ட வேதத்தினும் தம்மெய்யன்பர்களாகிய சமயாசாரியர்கள் வாய்த் தோன்றிய தேவாரதிருவாசகங்களில் விருப்பமிக்குடையராய் அவைகளால் வசீகரிக்கப்படுவராதலாலும், அவர்களால் வணங்கப்பட்டு அவர்கள் திருப்பதிகங்களைப் பெற்ற சிவஸ்தலங்களே உத்தமோத்தம சிவஸ்தலங்களாகும்.

ஆதலினால், சைவசமயிகளாகிய நாமெல்லாம், அந்தச் சிவஸ்தலங்களை விதிப்படி சிரத்தையோடு வழிபடுதலும், அவைகளுள்ளே கிலமாயினவைகளை ஜீர்ணோத்தாரஞ்செய்தலும், நித்திய பூசை முதலியவைகள் இல்லாத ஸ்தலங்களிலே நித்திய பூசை முதலியவை நடத்துவித்தலுமே உத்தமோத்தம சிவபுண்ணியங்கள்.

திருக்கோயின் முதலியவை அழிந்தால், அவைகளை முன்போலச் செய்தவர் பெறும் பயன் அவைகளை முன் செய்தவர்கள் பெற்ற பயனிலும் ஆயிரமடங்கதிகமாகும். திருக்கோயின் முதலியவைகளிலே ஒருறுப்புக் கிலமாயின், அதனை முன்போலச் செய்தவர் பெறும் பயன் முன்செய்தவர் பெற்றபயனிலும் நூறுமடங்கதிகமாகும்.

இதற்குப் பிரமாணம்:—

சிவபுண்ணியத்தெளிவு.

"மாதவர்மடங்களாதி வரதன்மந்திரங்களாதி
நாதமாமிலிங்கமாதி நளினபுட்கரிணியாதி
சேதமுற்றிடின்முன்போலச் செய்கின்றோர்க்குறும்பலந்தா
னோதமுன்செய்தோர்தம்மி லாயிரங்குணிதமோங்கும்.

உரைத்திடுமடங்களாதி யுறப்பினிற்சிதைவினாலிற்
றெரித்திடுமுறையேநன்றாத் தெளிவுறச்செய்கின்றோர்க்கு
வரைத்திடின்முன்னஞ்செய்தோர் மருவிடும்பலத்தின்மேலாய்
விரித்திடும்பலமுநூறு மடங்கெனவிளம்புமாதோ."

சிவாலயங்களிலே நித்தியபூசை முதலியவை காலந்தோறுந் தவறாமற் சிரத்தையோடு விதிப்படி செய்யப்படுமாயின், உலகத்திலே காலந்தோறும் மழை தவறாமற் பெய்யும்; நென்முதலாகிய வளங்கள் பெருகும்; ஆரோக்கியம் உண்டாகும்; அரசநீதி நடக்கும். நித்தியபூசை முதலியவைகள் சிரத்தையோடு விதிப்படி செயப்படாதொழியின், உலகத்திலே மழையின்மையும் பஞ்சமும் மசூரிகை விஷூசிமுதலிய கொடுநோய்களும் கன்னம் களவுமுதலிய தீத்தொழில்களுமே விருத்தியாகும்.

இதற்குப் பிரமாணம்:—

திருமந்திரம்.

"ஆற்றருநோய்மிகு மவனிமழைகுன்றும்
போற்றருமன்னரும் போர்வலிகுன்றுவர்
கூற்றுதைத்தான்திருக் கோயில்களானவை
சாற்றியபூசைக டப்பிடிற்றானே.

முன்னவனார்கோயிற் பூசைகண்முட்டிடின்
மன்னர்க்குத்தீங்குள வாரிவளங்குன்றுங்
கன்னங்களவு மிகுத்திடுங்காசினிக்
கென்னருணந்தி யெடுத்துரைத்தானே."

கிலமாயுள்ள ஸ்தலங்களை ஜீர்ணோத்தாரஞ் செய்தற்கும் நித்தியபூசை முதலியவை இல்லாத ஸ்தலங்களிலே நித்திய பூஜை முதலியவை நடத்துதற்கும் பெரும்பொருள் வேண்டு மாதலாலும், தனித்தாயினும் சிலர்மாத்திரம் கூடியாயினும் இவைகளை முடித்தல் இயலாமையாலும், சைவசமயிகளாகிய நம்மவர்களெல்லாரும் ஒற்றுமையுடையவர்களாய் ஒருங்கு கூடல்வேண்டும், அப்படிக் கூடாதவழி இக்கருத்துச் சித்தி பெறாது. தமிழர்களாகிய நம்மவர்கள் யாதாயினும் ஒருகருமத்தை நடத்துதற்கு ஒருங்கு கூடுதல் அரிது. ஒரோவழிக் கூடினும் ஐக்கியத்தோடு நிலைபெற்று எடுத்த கருமத்தை நிறைவேற்றல் மிக அரிது. அவர்கள் ஐக்கியமேயின்றிப் பெரும்பான்மையுந் தங்கள் உள்ளத்தில் விளையும் பகையையே பாராட்டிக் கலகம் விளைத்து எடுத்த கருமத்தைக் கைநெகிழ விடுதலே வழக்கம். இது பற்றியே நம்மவர்கள் லௌகிகநெறி வைதிக நெறி என்னும் இரண்டினும் மேன்மையடையாது, அன்னிய தேசத்தார்களும் அன்னிய பாஷையாளர்களும் அன்னிய சமயத்தார்களுமா யுள்ளவர்களாலே அவமதிக்கப்பட்டுத் தலை கவிழ்கின்றார்கள். சகோதரர்கள் பலர் தங்கள் பிதாவினுடைய வீடு முதலியவற்றிற்கு இடையூறு நிகழும்பொழுது தங்களுள்ளே எத்துணைப்பகை இருப்பினும் அதனைச் சிறிதும் பாராட்டாது ஒற்றுமையுடையர்களாய்த் திரண்டு அவ்விடையூற்றை நீக்கி அப்பிதாவுக்கு இனியர்களாய் ஒழுகுவது இயற்கை. இது போலவே சைவசமயிகளாகிய நாமெல்லாம் நமது பரமபிதாவாகிய சிவபெருமானுடைய திருக்கோயில் முதலியவற்றிற்கு இடையூறு நிகழும்பொழுது நம்முள்ளே எத்துணைப்பகை இருப்பினும் அதனைச் சிறிதும் பாராட்டாது ஒற்றுமையுடையர்களாய்த் திரண்டு அவ்விடையூற்றை நீக்கி அச்சிவபிரானுக்கு இனியர்களாய் ஒழுகுவதன்றோ அழகு? இப்படிச் செய்பவர்களன்றோ சைவசமயிகளென்னும் பெயருக்கும் அதனாற் பெறற்

பாலதாகிய பெரும்பயனுக்கும் பாத்திரராவார்கள்? இவ்வியல் பில்லாதவர்கள் அங்ஙனம் ஆவார்களா? ஆகார்கள் ஆகார்கள்.

நம்மவர்களெல்லாரும் பொறாமை பகை முதலியவைகளின்றி ஐக்கியமுடையவர்களாய்க் கூடும்பொருட்டும், தங்கள் தங்களால் இயன்றமட்டும் வாக்காலும் காயத்தாலும் பொருளாலும் சகாயஞ்செய்து மேற்சுட்டிப்போந்த உத்தமோத்தம சிவபுண்ணியங்களை விதிப்படி சிரத்தையோடு நிறைவேற்றிப் பெரும் புகழையும் பெரும்புண்ணியத்தையும் அடையும்பொருட்டும், திருவருள் சுரக்கும்படி பரமகாருண்ணிய சமுத்திரமாகிய சிவ பெருமானுடைய திருவடிகளைப் பிரார்த்திக்கின்றோம்."

---

திருத்தொண்டைநாட்டுப் பதிபுண்ணிய பரிபாலன சபையின் இரண்டாங் கூட்டம் பிரபவஸு மாசிமீ" கஉ சென்னபட்டணத்திலே பச்சையப்பமுதலியார் பாடசாலையிலே கூடிற்று. அச்சமயத்தில் அக்கிராசனாதிபதியாகிய இவர், பதிபுண்ணியத்தின் பெருமையைச் சபையார்களுக்கு விளங்கும்பொருட்டுப் பிரசங்கித்தார்.

அந்தப்பிரசங்கசாரம் வருமாறு:—

## இறைவனூற்பயன்.

> "தமக்கினிமை வஞ்சகரே தாந்தமுதற் சாரார்
> தமக்கினியார் தம்முதற் சார்ந்தார்."

இத்திருக்குறள் தமக்குத் தாம் வஞ்சகராவார் இவரென்பதும், இனியராவார் இவரென்பதும் உணர்த்துகின்றது. இதன் பொருள்: தமக்கு இனிமை தாம் வஞ்சகர் தம்முதற் சாராரே - தங்களுக்கு இனிமையாயுள்ளதிலே தாங்களே வஞ்சகர்களாயுள்ளவர்கள் தங்கள் நாயகரை அடையாதவர்களே;—தமக்கு இனியார் தம்முதற் சார்ந்தாரே - தங்களுக்கு இனியர்களாயுள்ளவர்கள் தங்கள் நாயகரை அடைந்தவர்களே எ - று. தாமென்றது

பசுக்களாகிய ஆன்மாக்களை. தம்முதலென்றது பசுபதியாகிய சிவபெருமானை. இனிமை - இன்பம்.

துன்பத்தில் வெறுப்பும் இன்பத்தில் விருப்பும் ஆன்மாக்களுக்கு இயற்கையேயாயினும் அவர்கள் இன்பம் இது, துன்பம் இது, துன்பத்தினின்று நீங்கி இன்பம் பெறுநெறி இது, என உள்ளபடி அறிதற்கும் துன்பத்தினின்று நீங்கி இன்பத்தைப் பெறுதற்கும் சுதந்திரசத்தி யுடையர்களல்லர். சுதந்திரர் சிவபெருமானொருவரே; ஆன்மாக்களோ பாதந்திரர்கள். ஆன்மாக்கள் இவ்வுண்மையை அறிந்து சிவபெருமானது திருவருள் வழிப்பட்டொழுகினன்றி இன்பத்துன்பங்களை அறிதலும் துன்பத்தினின்று நீங்கி இன்பத்தைப் பெறுதலும் இயலாவாம். நித்தியமாகிய பேரின்பம் முத்தியின்பமொன்றே; மற்றை யின்பங்களெல்லாம் முட்பூவிற் றேன்போல்வனவாம்.

சிவபெருமானை அடைதலாவது அவரை விதிப்படி சிரத்தையோடு வழிபடுதல். அவ்வழிபாட்டுக்கு மிக மேலாகிய கருவி சிவஞானம். இவ்வழிபாடே முத்திக்கு வாயில். சிவஞானம் ஏழு பகுதிகளை உடையது. அவையாவன அத்துவசுத்தியாகிய நிருவாணதீக்ஷை பெற்றுக்கொண்டு சிவஞானநூல்களாகிய சைவசித்தாந்தசாத்திரங்களை ஓதல், ஓதுவித்தல், அவற்றின் பொருளைக் கேட்டல், கேட்பித்தல், கேட்டதைச் சிந்தித்தல், சிந்தித்ததைப் பின்பு தெளிதல், தெளிந்தபடியே அதன் பின் நிட்டைகூடல் என்பனவாம்.

இச்சிவஞானத்துக்கு ஏதுக்கள் சிவாகமத்தில் விதிக்கப்பட்ட சரியை கிரியை யோகங்களாகிய பதிபுண்ணியங்களாம். பதிபுண்ணியமெனினும் சிவபுண்ணியமெனினுமொக்கும். ஸ்மிருதியில் விதிக்கப்பட்ட யாக முதலியவை பசுபுண்ணியங்களாம். ஞானம் யோகமின்றியும், யோகம் கிரியையின்றியும், கிரியை சரியையின்றியும் சித்தியாவாம். அது "விரும்புஞ் சரி

யைமுதன் மெய்ஞ்ஞான நான்கு—மரும்புமலர் காய்கனிபோலன்றோ பராபரமே" என்னுந் தாயுமானசுவாமி பாடலாலறிக.

சரியை சிவசாலோக்கியத்தையும், கிரியை சிவசாமீப்பியத்தையும், யோகம் சிவசாரூப்பியத்தையும், ஞானம் சிவசாயுச்சியத்தையுங் கொடுக்கும். யாகமுதலிய பசுபுண்ணியங்களோ சுவர்க்கத்தைக் கொடுக்கும். இவைகளெல்லாவற்றையும் அறிதலும் அநுட்டித்தலும் கல்விகேள்விகளாலன்றிக் கூடாமையால், வித்தியாசாலைகளைத் தாபித்தலும் சைவப்பிரசாரஞ் செய்வித்தலுமே முக்கிய தருமங்களாம். இவைகளினாற்றானே மேற்கூறிய சிவதருமங்களும் சிவஞானமும் அபிவிருத்தியாகும். இவைகளை விருத்திசெய்தலின் மிக்க புண்ணியமும், விருத்திசெய்யாமையின் மிக்க பாவமும் இல்லை, இல்லை.

இதற்குப் பிரமாணம்:—

சிவதத்துவவிவேகவிருத்தியில் உத்தரிக்கப்பட்ட
சுலோகத்தின் மொழிபெயர்ப்பு.

நிகரறுநற்சிவதருமசிவஞானத்தை
  நிறுத்திடுவோனிலுமுயர்ந்தோனிலத்திலில்லை
பகர்பரமசிவயோகியவனேயாகும்
  பரிவினிறுத்திடுமாற்றல்படைத்துமுய்தி
யகலுமயலானிறுத்தாதொழிந்தோன்யோகி
  யாயினுமீசுரப்பிரியனல்லனன்றன்
புகருறுநிரயகினிடைவீழ்ந்துபுன்கண்
  பொருந்திடுவனெனமறைகள்புகலுமன்றே.

ஆதலினால், இப்பதிபுண்ணியங்களை அபிவிருத்தி செய்தற்பொருட்டு இங்குள்ள சைவசமயப்பிரபுக்கள் "திருத்தொண்டைநாட்டுப் பதிபுண்ணியபரிபாலனசபை" எனப் பெயர்கொண்ட ஒரு சமாசந் தாபித்தார்கள். சைவசாத்திரங்களைக் கற்பித்தலும் சைவப்பிரசாரஞ் செய்வித்தலுமே எல்லாச் சிவபுண்

ஸ்ரியங்களையும் சிவஞானத்தையும் வளர்க்குங் கருவிகளாய்ச் சிறந்துள்ள உத்தமோத்தம சிவபுண்ணியங்களாமாயினும், அவைகள் பரமதருமமென்பது கல்வியறிவுடையராகிய சிலருக்குமாத்திரமன்றி மற்றவர்களுக்கு விளங்காமைபற்றி அவைகளுக்குப் பொருளுபகரிக்க உடன்படுவோர் தற்காலத்தில் அரியராதலாலும், சிவாலயத்திருப்பணிகள் பரமதருமமென்பது கல்வியறிவுடையவரும் கல்வியறிவில்லாதவருமாகிய எல்லாருக்கும் விளங்குதல்பற்றி அவைகளுக்குப் பொருளுபகரிக்க உடன்படுவோர் பலராதலாலும், சைவசாத்திரபடனத்துக்கும் சைவப்பிரசாரத்துக்கும் முக்கியஸ்தானங்கள் சிவாலயங்களாமாதலாலும், சிவாலயங்களுள்ளே பல கிலமாயிருத்தலாலும், அவைகளைத் தற்காலத்திலே ஜீர்ணோத்தாரஞ் செய்யாவிடின் விளையுங் கேடு பெரிதாதலாலும், இச்சபையார் முன்னே சிவாலயத்திருப்பணிகளை நடத்துங் கருத்துடையர்களாயினார்கள்.

சிவாலயத்திருப்பணிகளுக்குப் பொருள் கொடுப்பவர்களும் அப்பொருளை வாங்கிச் சிவாலயத்திருப்பணிகளைச் செய்பவர்களும் முத்தியை அடைவர்கள்.

இதற்குப் பிரமாணம்:—

சைவசமயநெறி.

"திருப்பணிசெய் வார்க்குஞ் சிவனையுன்னிச் செம்பொன்
விருப்புடனீ வார்பெறுக வீடு.

உய்வா ருதவுநிதி வாங்கித் திருப்பணியைச்
செய்வார் பெறுக சிவம்."

சிவபத்தர்கள் தங்களிடத்துள்ள திரவியத்தை மூன்று பாகம்பண்ணி ஒருபாகத்தைத் தங்கள் சீவனத்தின்பொருட்டு வைத்துக்கொண்டு மற்றை யிரண்டுபாகங்களையும் சிவபுண்ணியங்களுக்குக் கொடுத்தல்வேண்டும் என்று சிவாகமங்கள் சொல்கின்றன. இப்படிச்செய்தல் அரிதாயினும், சைவசமயிகளாகிய

நம்மவர்களெல்லாரும் உலோபஞ் செய்யாது, இச்சபையார் எடுத்துக்கொண்ட சிவபுண்ணியத்தின் பொருட்டுத் தங்கள் தங்கஞாயல் இயன்றபடி சிறிதாயினும் திரவியம் உபகரிக்கக்கடவர்கள். இப்படிச் செய்யின் "ஆயிரமாகாணி அறுபத்திரண்டரை" என்றபடியே நம்மவர்களால் உபகரிக்கப்படும் பொருள் மிகப் பெருகி வளர்ந்து, சபையார் உத்தேசித்த சிவபுண்ணியங்களெல்லாம் இனிது நிறைவேறுதற்குக் காரணமாகும்.

கனம்பொருந்திய பிரபுக்களே, இத்தேசத்தவர் இவ்வூரவர் இவ்வியல்புடையவர் என்று உங்களாலே நன்றாக அறியப்படாதவர்களும் தருமத்தை நடத்துதற்கு அறிவும் ஆற்றலும் இல்லாதவர்களும் தருமத்திரவியத்தின் வரவு செலவு கணக்கை உலகத்தார் அறியும்வண்ணம் வெளிப்படுத்துதற்கு உடன்படாதவர்களுமாய் உள்ளவர்கள், உங்களிடத்தே தனித்தனி வந்து தருமத்தின்பொருட்டு யாசிக்கும்பொழுது, நீங்கள் பெரும்பான்மையும் தடைபேசாது உங்கள் உங்களால் இயன்றமட்டும் திரவியம் உபகரிக்கின்றீர்களே. அத்திரவியத்தைப் பெறுவோர்களுள்ளே தாங்கள் சுட்டிய தருமத்தைத் தொடங்குவோர் சிலர். அவர்களுள்ளும் பெற்ற திரவியமுழுதையும் அத்தருமத்தில் உபயோகப்படுத்துவோர் மிகச் சிலர். திரவியம் பெறும்பொழுது முழுதையுந் தருமத்தில் உபயோகப்படுத்துங் கருத்துடையவருக்கும் அக்கருத்து அத்தருமம் முடிவுபெறும்வரையும் நிலைபெறுதல் அரிது. ஒருபோது நிலைபெறினும், அவர்காலத்திலே அத்தருமம் நிறைவேறாவிடத்து, அவருக்குப்பின் அத்திரவியம் அத்தருமத்திலே சேர்வது மிக அரிது அரிது. பெற்ற திரவியத்தைக்கொண்டு தருமத்தை முடிப்பவருள்ளும் சிலர் தாம் கல்வியறிவில்லாதவராதலாலும், கல்வியறிவுடையவரோடு சிறிதும் பரிசயமில்லாதவராதலாலும், எடுத்த தருமத்தை விதிப்படி நடத்தாதொழிகின்றனர். இங்ஙனமாதலின், நீங்கள் வருந்திச் சம்பாதித்த திரவியம் தருமத்தின்பொருட்டுக் கொடுக்கப்

பட்டவிடத்தும், தருமத்தில் உபயோகப்படுவது சிறுபான்மை. இதற்குக் காரணம் நம்மவர்களுள் ஒரு தருமத்தை ஒருவரே ஏற்றுச் சரித்து நடத்துதலாம்.

தருமங்களையும் அவைகளின் பலங்களையும் அவைகளைச் செய்யும் முறைமைகளையும் அறியவும் அறிவிக்கவும் வல்லவர் கல்வியுடையவராதலாலும், அவைகளைத் திரவிய முபகரித்து முடிக்க வல்லவர் செல்வமுடையவராதலாலும், இவ்விருதிறத்தாருள்ளும் பலர் சபையாகத் திரண்டு விதானங்கள் செய்துகொண்டு அவ்விதானங்களின்படியே தருமங்களை நடத்தப் புகுவார்களாயின், அத்தருமங்களெல்லாம் விதிப்படி நிறைவேறும். அவற்றின்பொருட்டுக் கொடுக்கும் பொருண்முழுதும் தருமத்திற்றனே உபயோகப்படும். ஆதலினால், நம்மவர்களுள்ளே தருமஞ் செய்யக் கருத்துடையவர்கள் யாவரும் இச்சபையிற் சேர்தலே உத்தமோத்தமம்.

யாவராயினும் ஒரு தருமத்தின்பொருட்டுத் திரவியம் உபகரிக்கச் சங்கற்பித்தாராயின், சங்கற்பித்த அக்கணமே அத்திரவியம் தருமத்திரவியமேயாய் விடும். ஆகவே, அத்திரவியத்தைப் பின்பு கொடாதொழிந்தவர் தருமத்திரவியத்தை அபகரித்த அதிபாதகராகி எரிவாய்நரகத்தில் விழுந்து வருந்துவர். இது உண்மைநூற்றுணிவு. ஆதலினால், நீங்கள் தருமத்தின் பொருட்டுச் சங்கற்பித்த பொருளைச் சிறிதாயினும் தடையின்றி அச்சத்தோடும் அன்போடுங் கொடுத்து விடல்வேண்டும்.

புண்ணியத்தையேனும் பாவத்தையேனும் செய்தல் செய்வித்தல் உடன்படல் என்னும் மூன்றும் தம்முளொக்குமாதலால், நீங்கள் இத்தருமத்துக்கு உபகரித்தன்மாத்திரமன்றி, உங்கள் உங்கள் பெந்துக்கள் இஷ்டர்கள் முதலாயினோருக்கும் சமயம் வாய்க்கும் பொழுதெல்லாம் நல்லறிவுச்சுடர் கொளுத்தி, அவர்களையும் இயன்றமட்டும் இத்தருமத்துக்கு உபகாரர்களாக்க முயலல்வேண்டும்.

தெய்வப்புலமை பொருந்திய ஔவையாராலே "சான்றோருடைத்து" என்று புகழப்பட்ட இத்திருத்தொண்டைநாட்டின் கண்ணதாகிய இச்சென்னபட்டணம் இராஜதானியாயும் கல்வி செல்வம் அதிகாரம் முதலியவற்றினாலே பிரசித்திபெற்றதான மாயும் விளங்குதலினால், இப்பட்டணத்திலே தாபிக்கப்பட்ட இச்சபையார் எக்காலமும் ஐக்கமும் தருமத்திலே சிரத்தையும், இடையறாமுயற்சியும் உடையர்களாகி எடுத்த தருமங்களை விதிப்படி நிறைவேற்றிக்கொண்டு வருவார்களாயின், மற்றைநாட்டார்களும் தங்கள் தங்கள் நாடுகளில் இப்படியே சபை தாபித்துச் சிவபுண்ணியங்களைப் பரிபாலனஞ்செய்து வருவார்கள். அப்பொழுது, அவைகளுக்கெல்லாம் இச்சபையார்களே மூலகாரணர்கள் ஆதலால், அப்புண்ணியபலங்களிலும் இச்சபையார் பாகம் பெறுவார்களென்பதற்குச் சந்தேகம் உண்டோ? இல்லை, இல்லை.

இப்பொழுது நாம் கூறியவாறே நடத்தப்படின், சிவபுண்ணியங்களும் சிவஞானமும் அபிவிருத்தியாகும். ஆகவே, சபையார்களாகிய நீங்கள் உங்களுக்கும் பிறருக்கும் பயன்பட்டு உங்களுக்கு இனியர்களாகி உங்களுக்கு உங்களிலும் இனியராகிய சிவபெருமானுடைய திருவருளைப்பெற்று வாழ்ந்திருப்பீர்கள். நமக்கு நம்மிலும் இனியர் சிவபெருமான் என்பதற்குப் பிரமாணம்:—

### திருநாவுக்கரசுநாயனார் தேவாரம்.

"என்னில் யாரு மெனக்கினி யாரில்லை
யென்னி லும்மினி யானொரு வன்னுள
னென்னு ளேயுயிர்ப் பாய்ப்புறம் போந்துபுக்
கென்னு ளேநிற்கு மின்னம்ப ரீசனே."

௬.

# நாவலரைக் குறித்துப் பிறர் புகழ்ந்தவை.

## THE HON'BLE SIR MUTTU KUMARASWAMI,

Tamil Representative in the Legislative Council of Ceylon, in the course of his speech on "Ecclesiastical Subsidies in Ceylon" on the 19th October, 1876, referred to Mr. Arumukha Nayalar in the following terms:—

"It is the Hindu of Hindus, Arumuga Navalar in the North! He is one of those Orientals who can measure swords with even such a giant as my Hon'ble friend (the then Queen's Advocate, the Hon'ble Mr. R. Cayley) in an argumentative way. His whole life has been spent in preaching and writing against Christianity and he has a following which cannot be despised."

## THE HON'BLE Mr. P. RAMANATHAN,

Tamil Representative in the Legislative Council of Ceylon, in the course of his speech in the Council on the 11th February 1884, referred to Mr. Arumukha Navalar in the following terms:—

"Intolerance on their (the Missionaries) part, it appears, has varied with varying times and circumstances, but it is specially observed at the present day, ever since the Champion Reformer of Hindus in the Northern Province died in 1879"

His Excellency the Governor (Hon. Sir Arthur Hamilton Gordon G. C. M. G.),—

"Who did you say?
The Hon'ble Mr. P. Ramanathan,—
"The Champion Reformer of Hindus, Arumuga Navalar."

---

சென்னபட்டணத்து ஹைகோட்டு நீதிபதி கனம்பொருந்திய மகா-ா-ா-ஸ்ரீ தி. சதாசிவ ஐயரவர்கள் கசுகக-ம் வருஷம் ஏப்பிரல் மாதம் உசு-ந் தேதி சிதம்பர சைவப்பிரகாச வித்தியாசாலைப் பரிசளிப்பின்போது சொல்லியது.

* * * *

"நாவலரைப்போல முன்னும் இப்பொழுதும் தமிழ் வித்துவான்களில்லை. ஒருவேளை இருந்தாலும் அவரைப்போலத் தமிழ்ப்பாஷையையும் நல்லொழுக்கத்தையும் சைவசமயத்தையும் வளர்த்து நல்ல தமிழ் வசன நடையில் நூல்களை எழுதி அச்சிட்டு வெளிப்படுத்தித் தமிழ் நாட்டாருக்கு உபகாரஞ் செய்தவர் வேறொருவருமில்லை. பொருள் வரும்படிக்காகப் பிறரை வணங்காதவர்களும் அவரைப்போல் ஒருவருமில்லை."

---

திருவாவடுதுறை யாதீனத்து மகாவித்துவானாகிய

மகா-ா-ா-ஸ்ரீ திரிசிரபுரம்

மீனாட்சிசுந்தரப்பிள்ளை.

[திருக்குறள் பரிமேலழகருரைப் பதிப்பின் சிறப்புப்பாயிரம்.]

விருத்தம்.

* * * *

மன்னுபெருந் தமிழ்ப்பாடை யிலக்கணமு மிலக்கியமும் வரம்பு கண்டோன், பன்னுசிவ புராணங்கள் பலதெரிந்தோன் சிவாகம நூற் பரவை மூழ்கி, யுன்னுமறு பூதியெனும் விலைவரம்பி லாமணிகை யுறக்கொண் டுள்ளா, னின்னுநய குணத்தினனுய்ச் சைவமெனும் பயிர்வளர்க்கு மெழிலி போல்வான்.

௳. நீடுபுகழ்த் திருக்கே தீச்சுரந் திருக்கோணசல மிங்கிலவாரி னிற, நாடுபுகழ்த் தலம்பொலி யாழ்ப்பாணத்து நல்லூர்வாழ் நகராக் கொண்டோன், றேடுபுக ழுருவமைந்த கந்தவே டவத்துதித்த செல்வன் யாரும், பாடுபுக ழாறுமுக நாவல னவ்வா றச்சிற் பதிப் பித்தானே.

---

[தருக்கசங்கிரகப் பதிப்பின் சிறப்புப்பாயிரம்.]

* * * *

அகத்தியந்தொல் காப்பியமுன் னுயபல் விலக்கணமுஞ்
சகத்தியல்பல் விலக்கியமுஞ் சாற்றுபர மதநூலு
மகத்துவமெய்ப் பொருணூலு மதியமையப் பயின்றுணர்ந்து
சுகத்தியலு மநுபூதித் தோன்றலா யமர்பெரியோன்.

மாறுபடு பரசமய வழியனைத்து மறமாற்றி
யாறுபடு செஞ்சடிலத் தண்ணலா ருருணெறியே
தேறுபடும் படிவளர்த்துத் திகழுமா தவமுடையோன்
வீறுபடு சிவனடியார் மேன்மை முழுமையு முணர்ந்தோன்.

கருள்விரவு தலைக்கழிக்குங் கண்மணியும் வெண்ணீறும்
பொருள்விரவு மைந்தெழுத்தும் பொருளாகக் கொண்டுவப்போன்
றெருள்விரவு சுத்த சைவ சித்தாந்தப் பெருஞ்செல்வ
னருள்விரவு பரவுபுகழாறுமுக நாவலனே.''

---

[திருக்கோவையாருரைப் பதிப்புச் சிறப்புப்பாயிரம்.]

ஆ சி ரி ய ப் பா.

* * * *

கந்தவேடவத்திற் கருதரன்பான்முன்
வந்தவேளென்ன வந்தவதரித்தோ
னீற்றொடுகண்மணி நிறையப்பூண்பார்ப்
போற்றொடுபொலியும் புண்ணியபுருட
னவநெறியாய வனைத்துங்களைந்து
சிவநெறிவளர்க்குந் திப்பியகுணத்த
னெழுத்துமுதலாக வியம்பிலக்கணமும்

வழுத்திலக்கியமும் வரம்புகண்டெழுந்தோன்
சமயவிசேடந் தருநிருவாணமென்
றமையுமுத்தீக்கையு மடைவுறப்பெற்றோன்
சுமங்கலவிசேடச் சுருதியாமூலா
கமங்களின்முப்பொருள் கருதுபேரருளான்
யுத்தியினமைத்துணர்ந் தோங்கனுபூதி
சித்தியுற்றமைந்த சிவசிந்தாமணி
கற்றுணர்புலவருட் களிக்கு
முற்றுணராறு முகநாவலனே.

---

திருவாவடுதுறை யாதீன வித்துவான்

## தாண்டவராயசுவாமிகள்.

[திருக்கோவையாருரைப் பதிப்புச் சிறப்புப்பாயிரம்.]

### ஆசிரியப்பா.

* * யாழ்ப்பாண
நகர்தனினல்லூர் நாமமார்புரத்திற்
பகர்தருசைவ பரம்பரைக்குலத்திற்
றோன்றியகந்தவே டொல்லையிற்செய்த
வேன்றநற்றவத்தா லெழில்பெறவுதித்தோ
னியற்றமிழ்ப்பகுதியி னியல்பெலாந்தெள்ளி
நயத்தகவுணர்ந்த நற்றமிழ்க்குரிசி
றிருக்குறளுரைமுதற் சிறந்தநூ லுரையெலாஞ்
சுருக்கமின்றறிந்த துகளில்பேரறிவினோன்
கதிதருசைவா கமங்களிற்கழறும்
பதிமுதன்முப்பொருட் பகுதியினியல்பெலாஞ்
சங்கையொன்றின்றித் தவவிசேடத்தா
லங்கையினெல்லிபோ லளவிட்டறிந்தோ
னரனடியருச்சனை யன்றிமற்றொன்றுந்

திரமுறுபவநோய் தீர்த்திடாதென்னச்
சம்புவின்பூசனை தன்னைநாடோறு
நம்பிமெய்யன்பா னடாத்திடுநல்லோ
னயிட்டிகப்பிரம சாரிநன்னிலையிற்
றியக்கறநிற்குஞ் சீர்மைபெற்றுடையோன்
சங்கரனடியவர் தமைச்சரண்பணிந்தே
யிங்கியான்செய்பணி யென்னெனவியற்றவோன்
சிவபிரான்மகிமையைச் சீவர்கட்கமக்குப்
பவமறப்போதனை பண்ணுபாக்கியத்தேரின்
கிரியையான்ஞானங் கிடைக்குமதன்றி
யுரியமெய்ம்முத்திக் குபாயமன்றென்றுஞ்
சார்கேவலமுதற் சாற்றுமூவிடத்து
மாருயிர்சிவனுக் கடிமையேயென்றும்
புகல்சிவாகமவாக் கியப்பொருடன்னை
யிகலறத்தேர்வுற் றிதயத்திருத்தினோன்
கல்வியிற்காலங் கழித்தலீங்கிவன்கணோன்
றல்விலகுளத்தவ ரறைதரவமைந்தே
யாறுமுகனென வவனி
கூறுமியற்பெயர் கொண்டநாவலனே.

---

யாழ்ப்பாணத்துச் சுன்னுகம்

## ஸ்ரீமத். சிவ. சங்கரபண்டிதர்.

[பெரியபுராணவசனத்துச் சிறப்புப்பாயிரம்.]

### ஆசிரியப்பா.

* * * *

பூரணசிவாநு பூதிமானாகிய
திருநெல்வேலிச் சீரூருடையனும்
பெருமைசேர்ஞானப் பிரகாசமுனிவரன்

வந்தவதரித்த சுந்தமரபினன்
பந்தமதகற்றும் பல்பெருந்தவத்தின
னீதியிற்பெருகிய மேதகுநிதியினன்
கோதிலாக்குசைநுதிக் கூர்மைகொண்மதியினன்
சுருக்கமிலிலக்கணத் தொகைபலவிலக்கியந்
தருக்கவேதாந்தப் பெருக்கமுற்றுணர்ந்தோன்
வாதிகளேங்கி வாய்புதைத்தோட
மேதினியெங்கணும் வியன்புகழ்படைத்தோன்
வயம்பெறுவன்மையன் வரகுணமேரு
சயம்பெறுசைவ சபைக்குயரதிபதி
சிவனேயாமெனச் சிவனடியவரைப்
புவனியிற்பரிவொடும் போற்றிவாழ்புனித
னக்குமாமணிநீ றணிதிருமேனியன்
மிக்குயர்செந்தமிழ் வேதபாராயணன்
மேலாகியதனி விசேடச்சுருதியா
மூலாகமங்களின் முப்பொருளருளினால்
யுத்தியினமைத்துணர்ந் தியானுபூதி
சித்திபெற்றோங்கிய வித்தகசிரோமணி
யவமுறுபரமத வந்தகாரங்கெடச்
சிவமதகமலந் திகழ்ந்திடுந்திவாகரன்
றெழுதுடல்கம்பித் தழுதுதொழும்புசெய்
பழுதின்மாணக்கர் பாங்குறச்சூழச்
சொல்வளச்சுவையாற் சுருதிகட்கினிதா
யல்கலில்லாத வீறும்பொருள்வளத்தாற்
சிந்தையாஞ்செய்புநீ இச் சிவப்பயிர்வளர்க்கு
மந்தமிலின்பத் தமுதமாமழைநிகர்
மெய்யுபதேசம் விளங்கிடவிரித்துரை
செய்திடும்படிதா தேசிகசிகாமணி
மறைதிகழ் பிரணவமன்ன
மிறைதிகழாறு முகநாவலனே.

———

மகாவித்துவான்

ம-அ-அ-ஸ்ரீ திரிசிரபுரம்

மீனாட்சிசுந்தரப்பிள்ளை மாணாக்கர்

சோடசாவதானம்

சுப்பராயச்செட்டியார்

ஆசிரியப்பா.

* * * *

அலகில்பல்சமயக் கலகநூலென்னுங்
கான்யாறடைகரை கண்டுளந்தெளிந்து
தானிகரதில சைவநூலென்னும்
பெருநதியுவட்டி னொருவழிச்சென்று
சைவசித்தாந்தத் தெய்வமாக்கடலை
நணுகியாங்கதனுட் டுணிவொடுதிளைத்துச்
சிவபோகமென்னுந் தெள்ளமுதருந்தித்
தேக்கெறிந்தென்றுஞ் செருக்கும்பெரியோன்
கனவினுநன்னடை தணவாச்சீலன்
மனமொழிசிறிது மயல்வழிபுகுத்தா
தனகனதடிக்கீ ழமைதரவொடுக்கியோன்
கண்ணகனிலத்தி னண்ணியமன்பதை
யுள்ளத்தளவிற் கொள்ளக்கொடுக்குங்
கல்வியிற்பெரிய சொல்வன்மையினோ
னென்னொருநாவாற் பன்னவமையா
தெனப்புவனத்தார் தனித்தனிப்புகல
வுரவுநீர்வளாரப்பிற் பரவியபுகழோ
னென்னுளநோக்க மிலங்கச்செய்வோன்
மன்னியசிறப்பின் வாநதிகுலத்தோன்
கடிதவில்வாய்மை கனிந்த
முடிவில்சீராறு முகநாவலனே.

---

ரு.

## நாவலர்

## சிவபதமடைந்தபோது

சொல்லப்பட்டவற்றுட் சில.

---

### ஸ்ரீ. சி. வை. தாமோதரம்பிள்ளை.

விருத்தம்.

வேதம்வலி குன்றியது மேதகுசி வாகம
　விதங்கள்வலி குன்றி னவடற்
சூதன்மொழி மூவறுபு ராணம்வலி குன்றியது
　சொல்லரிய சைவ சமயப்
போதம்வலி குன்றியது பொற்பொதிய மாமுனி
　புகன்றமொழி குன்றி யதுநம்
நாதனிணை ஞாலமிசை நாடரிய வாறுமுக
　நாவல ரடைந்த பொழுதே.

வெண்பா.

நல்லைநக ராறுமுக நாவலர்பி றந்திலரேற்
சொல்லுதமி ழெங்கே சுருதியெங்கே—எல்லவரும்
ஏத்துபு ராணாக மங்களெங்கே ப்ரசங்கமெங்கே
ஆத்தனறி வெங்கே யறை.

---

உடுப்பிட்டி:

### ஸ்ரீ. அ. சிவசம்புப்புலவர்.

கட்டளைக்கலித்துறை.

ஆரூர னில்லைப் புகலியர் கோனில்லை யப்பனில்லைச்
சீரூரு மாணிக்க வாசக னில்லைத் திசையளந்த
பேரூரு மாறு முகநா வலனில்லைப் பின்னிங்கியார்
நீரூரும் வேணியன் மார்க்கத்தைப் போதிக்கு நீர்மையரே.

---

## சுன்னாகம்.

## ஸ்ரீ. அ. குமாரசுவாமிப்புலவர்.

### 1 கலிவெண்பா.

பூமாது வாழ்வுசெய்யும் பொன்னகர மென்னுநல்லைச்
சீமான் சிவன்பாதஞ் சிந்தைசெய்யுங் கோமான்
சகம்புகழுங் கந்தவே டன்னிடத்தில் முந்திச்
சுகம்பெறுமல் வள்ளுவனார் சொன்ன மகன்றந்தைக்
காற்று முதவி யருமைத் திருக்குறளுக்
கேற்ற விலக்கியமா விங்குதித்துச் சாற்றரிய
திண்மை பெறுஞ்சைவ சித்தாந்த சாகரத்தின்
ரண்மை நலம்பருகிச் சைவமெனும் உண்மையுள்
செஞ்சாலி யோங்கச் சிறந்தபிர சங்கமழை
அஞ்சாது பெய்யும் அருண்முகிலே மஞ்சாருஞ்
சோலைப் பெருங்காழித் தோன்றறிரு நாவலர்கோன்
வேலை யிடைக்கல்லின் மிதந்துவந்தோன் சீலமிக்க
வாதவூர் வந்தவன்றே வாரதிரு வாசகங்கள்
ஓதிச் சிவபெருமா னொண்கழற்செம் போதைநினைந்
துள்ளநெக்கு நெக்குருக வோட்டந் துடிதுடிப்பக்
கொள்ள வுடம்பு குறுவேர்வை வெள்ளமெனக்
கண்ணீர் சொரியமயிர்க் கால்சிலிர்ப்ப மெய்ந்நடுங்க
எண்ணாத் தழுதழுப்ப இன்பவெள்ளத் துண்ணாடும்
ஆனந்த முற்றே யயர்த்துப் பரவசமாய்
மோனச் சிவநூன் முறைப்படியே ஞானமுறச்
செய்யுஞ் சிவபூசைச் செல்வா சிறியேனுக்
குய்யு நெறிகாட்டு முத்தமனே துய்யதமிழ்ப்
பாடை யிலக்கியமும் பன்னு மிலக்கணமும்
தோடமறக் கற்றுணர்ந்த தோன்றலே பீடுபெறும்
பன்னூற் கடல்கடைந்து பாலர்பெற வின்னமுதச்
சொன்னடி நல்வசன சூத்திரமாச் சின்னாளில்

## அநுபந்தம்.



இத்தரையில் யாவர்செய்யா ரென்னப் பலப்பலவாம்
புத்தகங்கள் செய்தருளும் புண்ணியனே. பத்தியினர்
யாவுந் தொலைத்தருளும் பஞ்சாக்கரவிசிட்டம்
ஆவ லொடும்பேசுமா றுமுக நாவலனே
ஆற்றகில்லே னாற்றகில்லே னந்தோ நினது பிரி
வாற்றகில்லே னாற்றகில்லே னார்க்குரைப்பேன் சீற்றமுடன்
வந்த விடப்பனவன் வார்த்தைக் கொடுஞ்சரத்தால்
நொந்தேற் கிரங்கியரு ளேக்கீதனைத் தந்தவனே
கூறும் பரசமய கோளரியே மெய்யுணர்ச்சி
தேறு நினதருமை சிந்திக்குந் தோறுமெல்லாம்
என்னை யயர்த்தே னெம்பெருமா னின்பெருமை
தன்னைப் பெருஞ்சேடன் றானிருந்து பன்னாளாப்
பேசுகினு முற்றுப் பெறுமோ பெருந்தகையே
ஈசன் பெருங்கருணை யிப்படியோ பேசியென்ன
கண்ணே யெனதிரண்டு கண்மணியே நாவலனே
மண்ணாதி யாமுடம்பு மாய்ந்தாலும் எண்ணருங்
கீர்த்தி யுடம்பு கெடுமோ கிளக்குமுண்மை
வார்த்தை யரிச்சந்ர மன்னவனே போர்த்தவிருள்
நீக்குங் கிரிவிளக்கே நின்னினெமக் கோர்குரவர்
வாய்க்குநா ளெந்நாளோ மற்று.

---

மல்லாகம்:

### ஸ்ரீ. சி. செந்திநாதையர்.

வெண்பா.

நன்னடக்கைப் பத்திரிகை நாவலனே நீயனுப்ப
என்ன தவஞ் செய்தேனே யானறியேன்—அன்னதனுள்
உள்ளசில வாசகங்க ளுற்றுணரும் போதெல்லாம்
வெள்ளம் பொழியும் விழி.

காரசு   அநுபந்தம்.

சின்னக் குமார சுவாமியிடந் தோய்கோடிதம்
உன்னைக் குறித்தனுப்பி யுள்ளுவந்தேன்—அன்னாருன்பாற்
சேருமுன்னம் நாவலனே சென்றாய் சிவலோகம்
யாரும் பலிதபதைக்க விங்கு.

கட்டளைக்கலித்துறை.

தேவாரம் யான்சொலக் கேட்டு மகிழ்ந்து சிரத்தையுடன்
பூவாதி கொண்டு பிரிசிவ பூசைப் பொலிவழகும்
பாவாணர் மெச்சச் செயும்பிர சங்கமும் பார்த்தினிநான்
நாவார வாழ்த்திடு நாளுமுண்டோ நல்லை நாவலனே.

---

71546

MAR

7154